விலை: 30
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 320 புரட்டாதி 26ஆம் நாள் வெள்ளிக்கிழமை 12 ஒக்ரோபர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

### தலைமை நீதியரசரை பெயரிட கூடுகிறது சபை

கொழும்பு, ஒக்.12
இலங்கையின் அடுத்த தலைமை நீதியரசரைத் தெரிவு செய்வதற்காக அரசமைப்புச் சபை » 25

### அரசியல் கைதிகள் விவகாரம்
### சந்திப்புக்கு நேரம் ஒதுக்காத மைத்திரி

யாழ்ப்பாணம், ஒக். 12
தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில், அரச தலைவர் மைத்திரிபால » 24

# அரசமைப்பு வரைவு சமர்ப்பிப்பு டக்ளஸால் தள்ளிப்போனது

## ஒற்றையாட்சியே வேண்டும் என்றதால் இந்த நிலமை

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 12
அரசியல் நிர்ணய சபையாகக் கூடவுள்ள நாடாளுமன்றில் புதிய அரசமைப்பு வரைவு எதிர்வரும் 25 ஆம் திகதி சமர்பிக்கப்படும் என்று முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் நேற்று இடம்பெற்ற வழிநடத்தல் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, ஒருமித்த நாடு என்பதற்குப் பதிலாக ஒற்றையாட்சி என்ற சொல் பயன்படுத்தவேண்டும் என்று விடாப்பிடியாக நின்றமையினால், புதிய அரசமைப்பு வரைவு சமர்ப்பிப்பு அடுத்த மாதம் 7ஆம் திகதிக்கு தள்ளிப்போயுள்ளது. » 22



### அச்சுவேலியில் நேற்று எலும்பு எச்சங்கள் மீட்பு

மின்கம்பம் நடுவதற்கு அகழ்ந்தபோது வெளியானது

யாழ்ப்பாணம், ஒக்.12
யாழ்ப்பாணம், அச்சுவேலியில் நேற்று மாலை சந்தேகத்துக்கு இடமான எலும்பு எச்சம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. » 25

அரசியல் கைதிகள் விடுதலைக்கான
### நடைபவனியில் மாணவர் இணைந்து வலுச் சேர்ப்பு
» 25

### வீடமைப்பதற்கு எனது அமைச்சுக்கு அரசின் நிதி ஒதுக்கீடு போதாது

அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12
வீடுகள் இல்லாதவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க எனது அமைச்சுக்குப் போதுமான நிதி ஒதுக்கப்படுவதில்லை என்று மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் வாய்மூல வினாக்கான நேரத்தில், அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இசாக் ரகுமான், போரில் பாதிக்கப்பட்ட அநுராதபுரம் மாவட்டத்தில் வீடுகள் இல்லாது கஷ்டப்படும் » 25

### அரசமைப்பு உருவாக்கத்தை இழுத்தடிப்பதா நோக்கம்?

சீறினார் சம்பந்தன் அடங்கினார் தினேஸ்

யாழ்ப்பாணம், ஒக். 12
புதிய அரசமைப்பு உருவாக்கத்தை இழுத்தடிப்பதா உங்களின் நோக்கம்? அப்படியென்றால் அதனை வெளிப்படையாகவே சொல்லிவிடுங்கள். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் காட்டமாகக் கேள்வி » 25



### 106,000 ரூபா கள்ளநோட்டுகளுடன் யாழ்ப்பாணத்தில் இருவர் சிக்கினார்!

அச்சிடப் பயன்படுத்திய உபகரணங்கள் நல்லூரில் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.12
போலி நாணயத் தாள்களுடன் யாழ்ப்பாணத்தில் நேற்று இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஒரு லட்சத்து » 25

### அரசமைப்பு சபைக்கு மூவர் நியமனம்

கொழும்பு, ஒக்.11
அரசமைப்புச் சபைக்கு சிவில்சமூகப்பிரதிநிதிகள் 3 பேர் நேற்று நியமிக்கப்பட்டனர். கலாநிதி ஜயந்த தனபால, என்.செல்வகுமரன், ஜாவிட் யூசுப் ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர். தலைமை » 22

### பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தேவையில்லை

பயங்கரவாதச் சட்டத்தை இல்லாதொழியுங்கள் என்கிறது தமிழ் சிவில் சமூக அமையம்

யாழ்ப்பாணம், ஒக். 12
புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டவரைவு தேவையில்லை. நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாதொழிப்பது தேவை. இவ்வாறு தமிழ் சிவில் சமூக அமையம் தெரிவித்துள்ளது. அந்த அமைப்பின் பேச்சாளர் கு.குருபரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் தீர்வின்றித்தொடர்வதுதொடர்பில்நாங்கள் ஆழ்ந்த கரிசனை கொள்கின்றோம். » 23

### தமிழர்களின் பதவியுயர்வை தடுக்கவேண்டிய தேவையில்லை

ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.12
தமிழர்களினதோ அல்லது தமிழ் பேசுபவர்களினதோ பதவியுயர்வுகளைத் தடுக்க வேண்டிய தேவை அரசுக்கிடையாது. அவ்வாறான பதவி உயர்வுகள் அதிகரிக்கப்படுவதையே » 25

### ஆனந்தனுக்கு சபையில் கைகொடுத்த மகிந்த அணி

கொழும்பு, ஒக். 12
வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுக்கு ஆதரவாக மகிந்த அணி நாடாளுமன்றக்குழுத்தலைவர்தினேஸ் குணவர்த்தன குரல் கொடுத்தார். அத்துடன் தமது அணிக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில், சிவசக்தி ஆனந்தனை உரையாற்றுவதற்கு இடம் வழங்குமாறும் கோரினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரனும் சிவசக்தி ஆனந்தனும் நேற்றுக் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். சிவசக்தி ஆனந்தன் சபையில் » 24



### கார் - ஓட்டோ நேருக்கு நேர் மோதியதில் இருவர் சாவு!

வவுனியாவில் கோர விபத்து » 23

### துமிந்தவுக்கு வழங்கிய தூக்கை உறுதி செய்தது உயர் நீதிமன்று

கொழும்பு, ஒக.12
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட 3 பேரைக் குற்றமற்றவர்களாக்கி விடுதலை செய்ய வேண்டும் » 25



DFCC கருசரு, சிரேஷ்ட பிரஜைகளாகிய உங்களுக்காகவே

DFCC சிரேஷ்ட பிரஜைகள் கணக்கு

55 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு

- ஆரம்பக் கட்டணம் ரூபா.1000 மட்டுமே.
- கணக்கில் வருடம் முழுவதும் உள்ள தொகைக்கேற்ப பல வெகுமதிகள்.
- சேமிப்புக் கணக்கிற்கு 7% வரை கவர்ச்சிகரமான வட்டி வீதம்.
- Virtual Wallet வசதி. இலவசமாக Online Banking வசதி
- ஒரு வருட காலத்திற்கு இலவசமாய் SMS Alert வசதி
- ஆரம்பக் கட்டணம் இல்லாமல் DFCC Credit Card ஐ பெற்றுக்கொள்ளலாம்.

மதிப்பு மிக்க சிரேஷ்ட பிரஜைகளாகிய உங்களுக்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட இச் சேவையைப் பெற்றிட DFCC வங்கி எப்பொழுதும் அர்ப்பணிப்புடன் செயற்படும்.

24 மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# ரணிலுக்கு இருக்கும் வசதிகளில் ஓரளவேனும் தனக்கு வேண்டுமாம்

## சம்பளத்தை அதிகரிக்க உதாரணம் பேசிய பிரதேச சபை சு.கட்சி உறுப்பினர்

**யாழ்ப்பாணம், ஒக். 12**
**தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க 6 கோடி ரூபா பெறுமதியான கார் வைத்துள்ள போதும் நாடாளுமன்றுக்கு உலங்கு வானூர்தியில் சென்று வருகின்றார். எனவே உள்ளூராட்சி சபையில் உள்ள நாங்களும் அவர்கள் அளவுக்கு இல்லாது விட்டாலும் விலையேற்றத்துக்குஏற்பவாழஎமது மாதாந்தச்சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என நல்லூர் பிரதேச சபையின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் அ.மரியதாஸ் கோரிக்கை விடுத்தார்.**

நல்லூர்ப் பிரதேச சபையின் 7 ஆவது அமர்வு சபை மண்டபத்தில்த் தவிசாளர் தியாகமூர்த்தி தலைமையில்நேற்று இடம்பெற்றது. இந்தஅமர்வில் குறித்த உறுப்பினர்மாதாந்த சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும், சபையின் சிறு கூட்டங்களுக்குவரும்போது அதற்கும் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார்.
எனினும்மாதாந்தச்சம்பளம்அதிகரிப்பதுதொடர்பான கோரிக்கையைத் தாம் நிராகரிப்பதாகத் தவிசாளர் அறிவித்ததுடன் சிறு கூட்டங்களுக்கு வரும்உறுப்பினர்களுக்குக்கொடுப்பனவுவழங்குவதுதொடர்பில்சபையின்கருத்தைக்கேட்டார். அப்போது கருத்துத் தெரிவித்த சபை உறுப்பினர் மரியதாஸ்,
சபையின்சிறுகூட்டங்களுக்குவரும்உறுப்பினர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். அண்மைக்காலமாகக் கூட்டங்களில்உறுப்பினர்கள் கலந்து கொள்வது குறைவாகவே உள்ளது. கொடுப்பனவு வழங்கினால் அவர்கள் தவறாது கலந்துகொள்வார்கள். எனவே அதனை ஏற்படுத்தித் தரவேண்டும் என்றார்.
இதன்பின்னர்கருத்துத்தெரிவித்தசபைஉறுப்பினர் மதுசுதன்,
சிறுகூட்டங்களுக்குவரும்உறுப்பினர்களுக்குப் போக்குவரத்துக் கொடுப்பனவு வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியும். அதற்காகக்கொடுப்பனவு கொடுப்பதன்ஊடகஉறுப்பினர்கள்கூட்டங்களில் கலந்து கொள்வார்கள் என்றயோசனையை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் மக்களால் தெரிவுசெய்யப்பட்டஉறுப்பினர்கள்அனைத்துக் கூட்டங்களிலும் கலந்து கொள்ள வேண்டியது அவர்களின்கடமை. அவர்களைக்கொடுப்பனவு கொடுத்துத்தான் அழைக்கவேண்டும் என்றில்லை. என்றார். சிறு கூட்டங்களுக்கு வரும் உறுப்பினர்களுக்கான எரிபொருள்க் கொடுப்பனவுவழங்குவதைநாம்பரிசீலிக்கலாம்என்று தவிசாளர்தெரிவித்தார்.

**இலகுக் கடன் வசதி**

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் வறிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முயற்சியில் சபையினால் இலகுக் கடன் வசதி வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.
நேற்றைய அமர்வில் தவிசாளரால் குறித்த பிரேரணை சபைக்கு கொண்டு வரப்பட்டது. அவர் தனது பிரேரணையில் வட்டார ரீதியாக இரண்டு குழுக்களைஉருவாக்குவது. அந்தக்குழுக்களில் ஒருகுழுவில்5பேர்வீதம்உள்ளடக்கிஅவர்களுக்கானதொழில் முயற்சிகள் தொடர்பில்பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் வழங்குவது எனப் பிரேரணையைச் சபை உறுப்பினர் வாசுகியால்சபையில் முன்மொழிந்தார். பிரேரணை விவாதத்துக்கு விடப்பட்டது.
அதற்கான திட்டத்தை வகுப்பதாகத் தவிசாளர் தெரிவித்தார் எனினும் முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட வேண்டும் என ஒரு பிரேரணை சபைக்குக் கொண்டு வரப்பட்டது. சபையின் தவிசாளர் கொண்டுவந்த கடன் திட்டத்தில் இவ்வாறானவர்களுக்கு முன்னுரிமையில் கடன் திட்டத்தை வழங்குவதுடன் குறிப்பிட தொகையினருக்கு மேலதிகமாகவும் கடன் வழங்குவது தொடர்பில் ஆராயலாம் எனத் தீர்மானம் திருத்தப்பட்டுஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**கட்டாக்காலி நாய்களுக்கு பராமரிப்பு நிலையம்**

நல்லூர்ப்பிரதேசசபையின்எல்லைக்குள் உள்ள கட்டாக்காலி நாய்களைப் பராமரிக்க பராமரிப்பு நிலையம் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.
சபை உறுப்பினர் சிவலோகன் சபையின் எல்லைக்குள் உள்ள கட்டாக்காலி நாய்கள், மாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பிரேரணை ஒன்றைச் சபைக்கு கொண்டுவந்தார்.
இதன்போது கருத்துத் தெரிவித்த சபைச் செயலர், கட்டாக்காலிநாய்களைக்கட்டுப்படுத்தவேண்டிய பொறுப்பு உள்ளூராட்சி சபைகளுக்குத்தான் உள்ளது. ஆனால் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தும்பொறுப்புகமநலசேவைகள்திணைக்களத்துக்கே உள்ளது. மாறாக வீதிகளிலும் பொது மக்களுக்கு இடைஞ்சலாக மாடுகள் நின்றால் அவற்றை அப்புறப்படுத்த மட்டுமே எம்மால் முடியும் என்பதை எடுத்துக் கூறினார். கட்டாக்காலி நாய்களைக் கொல்லக்கூடாது என கொள்கை ரீதியான ஏற்பாடுகள் உள்ளன. எனவே ஏனைய சபைகளுக்கு முன்மாதிரியாக நாம் எமது சபையின் எல்லைக்குள் ஓர் இடத்தில் நாய்களுக்கான காப்பகம் அமைக்கச்சபையின்சுகாதாரக்குழுவினர் முயற்சி எடுக்க வேண்டும் எனவும் ஆலோசனைவழங்கினார். உறுப் பினர்கள் ஏற்றுக் கொண்டனர் மிகவிரைவில் காப்பகம் அமைக்க நடவடிக்கை எடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**மழைநீர் சேகரிப்புத் தொடர்பான திட்டம்**

நல்லூர்ப்பிரதேசசபையின்எல்லைக்குள்கட்டட அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது மழைநீர் சேகரிப்புத்தொடர்பானதிட்டமும்உள்ளடக்கப்பட வேண்டும்எனநல்லூர்ப்பிரதேசசபையில்தீர்மானிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர் திருமதி வாசுகி மழைநீர்சேகரிப்புத்தொடர்பானதிட்டம்உருவாக்கப்பட வேண்டும் என பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தார்.
உறுப்பினர்களும்அந்தத்திட்டம்தொடர்பில்கருத்துக்களை வழங்கினர். தவிசாளர் கருத்துத் தெரிவித்தார். அவர் புதிதாக அமைக்கப்படும் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்புத் தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டே அனுமதிகள் வழங்கப்பட வேண்டும்என ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. எனவே நாம்எமது சபையின் ஊடாக வழங்கப்படும்புதிய கட்டட அனுமதியின்போது அதனை உள்ளடக்கிய பின்னரே அனுமதியை வழங்குவது எனத்தீர்மானிப்போம் என்றார். அதை அனைவரும் ஏற்றுக் கொள்ள ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.
(21.8)


கோப்புப்படம்

## திங்கட்கிழமை பெய்த மழையால் கட்டுக்கரைக்குளத்தில் நீர் வரத்து அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.12
வட மத்திய மாகாணத்திலும் மன்னார்மாவட்டத்தின்சிலபகுதிகளிலும்கடந்ததிங்கட்கிழமை பெய்த மழையின் காரணமாக மன்னார் மாவட்டத்தின் மிகப் பெரிய குளமான கட்டுக்கரைக் குளத்தில்7அடிநீர்வரத்துஏற்பட்டுள்ளது.
வடக்கு மாகாணத்தில் அதிக வறட்சி நிலவுகின்றபோதிலும் மன்னார் மாவட்டத்தில் 160 மில்லி மீற்றர் மழைப் பொழிவு ஏற்பட்டதன் காரணமாகவே குளத்தின் நீர் மட்டம் உயர்வடைந்துள்ளது. கட்டுக் கரைக் குளமானது 11.6 அடி நீர் அளவினை உடைய நிலையில் கடந்தவாரம்வரை இங்கே 2.6 அங்குலநீர்மட்டுமேகாணப்பட்டது. இதனால் மன்னார் மாவட்டத்தின்பெரும்பகுதிவயல்நிலங்களில் காலபோக நெற் செய்கைக்கே விவசாயிகள் அச்சம் கொண்டிருந்தனர்.
குளத்தின்நீர்7அடியைத்தொட்ட நிலையில் நீர்ப் பாச்சல் பகுதிகளில் விதைப்பிற்கான ஏற்பாடுகள் தீவிரம் பெற்றுள்ளது. இதே நேரம்கட்டுக்கரைக்குளத்துக்கு அப்பால்மன்னார்மாவட்டத்தின் முச்லிப் பகுதியில் உள்ள குளங்களின்நீர்முற்றாகவற்றியிருந்த நிலையில் தற்போது நீர் வரத்து ஏற்பட்டுள்ளது. இவ்வாறுமழை வீழ்ச்சி ஏற்பட்டதனையடுத்து குளங்களின்பாதுகாப்பும்உரிய திணைக்களங்களால் கண்காணிக்கப்படுகின்றது.
(21,105)

## வடக்கில் உள்ள தபாலகங்களுக்கும் பன்னாட்டு அஞ்சல் தின விருதுகள்

யாழ்ப்பாணம், ஒக். 12
பன்னாட்டு அஞ்சல் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தபாலகங்களுக்கும் சிறப்பு விருதுகள், பரிசில்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.
கண்டி பொல்கொல்லையில் கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வில் இவ் விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.
நாட்டில் உள்ள அனைத்துத் தபாலகங்களில் சேவைக்கான இவ் விருதுகள், பரிசுகள் அஞ்சல் தின நிகழ்வில் வழங்கப்பட்டன.
இதில் தேசியசேமிப்புவங்கியின் கொடுக்கல் வாங்கலுக்கான வடக்குமாகாணபிரதித்தபால்மா அதிபர் மதுமதி வசந்தகுமாருக்கும் யாழ்ப்பாண மாவட்ட அஞ்சல் அதியட்சகர் கே.புஸ்பநாதனுக்கும் விரு துகள் வ்ழங்கி வைக்கப்பட்டன.
அதனைவிட வேலனை, பண்ணடத்தரிப்பு, காங்கேசன்துறை ஆகிய தபாலகத்துக்கும் பரிசுகள் வழங்கிவைக்கபட்டன. தேசிய சேமிப்பு வங்கியில் அதிக வைப்புக்களை மேற்கொண்டமைக்காக இலுப்பைக் கடவை, மாதகல், குருநகர் ஆகிய தபாலகங்களுக்கும்விருதுகள்வழங்கி வைக்கப்பட்டன.
அதிக வருமானத்தைச் சேமித்த வேலனை தபாலகத்தைச் சேர்ந்த பேரின்பதாஸ் என்பவருக்கும் மற்றும் ஞானேந்திரன் (இலுப்பைக்கடவை தபாலகம்) ஐங்கரன் (பூநகரி தபாலகம்), ஜெனார்த்தனன் (முல்லைத்தீவு தபாலகம்), மனோகரன் (வவுனியாதபாலகம்) போன்றவற்றிற்கும் இந்த விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.
மத்திய தபால் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் எம். எச், ஏ. கலீம் சபாநாயகர் கரு ஜெயசூர்யா உட்பட தபால் உயரதிகாரியினர் போன்றோர் நிகழ்வில்கலந்து கொண்டுபரிசில்கள் மற்றும் விருதுகளை வழங்கினர்.
(21.17)



## ஓய்வுபெற்ற ராணுவத்தினர் போராட்டம்

கொழுப்பு காலி முகத்திடல் வீதியூடாகச் செல்லும் லோட்டஸ் சுற்று வட்டாரம் வரையிலான பகுதிஓய்வுபெற்றஇராணுவத்தினரின் போராட்டம் காரணமாக மூடப்பட்டுள்ளதாகப் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.
தமதுஓய்வூதியம்உள்ளிட்டபல கோரிக்கைகளைமுன்வைத்து அவர்கள் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.
(5)

## தனியார் ஆடையகத்தில் நேற்றுப் பெரும் தீ விபத்து

*கொழும்பு, ஒக். 12*
*பத்தரமுல்லையிலுள்ள தனியார் ஆடையகத்தில் பெரிய தீப்பரவல்ஏற்பட்டுள்ளதாக தீயணைப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். மிக நீண்ட நேரப் போராட்டத்தின் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.*
*தீப் பரவல் காரணமாக கொட்டாவ தொடக்கம் பொரளைவரையானபேருந்துச் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. 3 தீயணைப்பு வாகனங்கள் தீயணைப்புப்பணியில்ஆரம்பத்தில் ஈடுபட்டிருந்தன. அவர்களால் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியவில்லை. சிறிது நேரத்தில் வான் படையினரின் பெல்212 உலங்கு வானூர்தி ஊடாகவும் தீயணைப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. தீப் பரவலுக்கான காரணம் தெரியவரவில்லை.*
(5)

# பயங்கரவாதத்துக்கு தனியான சட்டம் ஒன்று தேவையில்லை

## கூட்டமைப்பின் நிலைப்பாடு

**யாழ்ப்பாணம், ஒக். 12**
**பயங்கரவாதத்துக்கு என்று தனியானதொரு சட்டம் தேவையில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுவான நிலைப்பாடு இதுவே. இவ்வாறு அந்தக் கட்சியின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று மாலை இடம்பெற்றது. இதன்போது, நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு, நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை விட மோசமான ஒன்றாக ஆரம்பத்தில் இருந்தது. அதிலிருந்த முக்கியமான 4 விடயங்கள் தொடர்பில் நாங்கள் எங்களின் ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தோம். அதற்கு அமைவாக அவை மாற்றப்பட்டு புதிய வரைவு சமர்பிக்கப்பட்டுள்ளது. சமர்பிக்கப்பட்டுள்ள சட்டவரைவு தொடர்பில் நாம் ஆழமாகப் படிக்கவேண்டும்.

எங்களைப் பொறுத்தவரையில் பயங்கரவாதத்துக்கு என்று தனியான சட்டம் தேவையில்லை. நடைமுறையிலுள்ள சிவில் மற்றும் குற்றவியல் சட்டங்களே போதுமானது. உலகில் எல்லா நாடுகளிலும் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டம் நடைமுறையில் இருப்பதையும் கவனத்தில் கொள்கின்றோம்.

நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தில் உள்ள பல விடயங்கள் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் நீக்கப்பட்டுள்ளது. இவற்றை நாம் செய்வித்தோம். எம்மைப் பொறுத்தவரையில் பயங்கரவாதத்துக்கு தனியான சட்டம் தேவையில்லை என்பதுதான் நிலைப்பாடு. ஆனாலும், இந்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற போது, அது நாங்கள் வாக்களிக்காமையினால் தோற்கடிக்கப்பட்டு விட்டால் அந்தப் பழிச்சொல் எங்கள் மீது விழாமல் இருப்பது தொடர்பிலும் ஆராய்கின்றோம். வாக்களிப்பு நேரத்தில் இருக்கின்ற சூழ்நிலையைப் பொறுத்தே முடிவு எடுப்போம். இந்த விடயத்தில் இப்போது எந்தவொரு முடிவையும் இறுதியாக எடுக்கவில்லை - என்றார். (5)

## வேலை தேடும் பட்டதாரிகள் கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 12
வடக்கு மாகாண வேலை தேடும் பட்டதாரிகள், அவர்களுக்கான அரச நியமனங்களை வலியுறுத்தி நேற்றைய தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த முறை வழங்கப்பட்ட அரச நியமனங்களில் புறக்கணிக்கப்பட்டவர்கள் மற்றும் பட்டதாரிகள் ,யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் முன்பாக சிறிது நேரம் இந்த கவனவீர்ப்பை மேற்கொண்டனர். மீண்டும் பட்ட தாரிகள் மாவட்டச் செயலகத்தால் பதிவு மேற்கொள்வதாகவும் அவற்றில் தமது பெயர்களைப் பதிவு செய்வதுடன், தமக்கான வேலை வாய்ப்புத் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த கவனவீர்ப்பை மேற்கொண்டிருந்தனர். (7)



## வடக்கில் எலிக் காய்ச்சலால் ஐம்பத்து ஐந்து பேர் பாதிப்பு

*வவுனியாவில் அதிகம் என்கிறது தொற்றா நோய்ப் பிரிவு*

லேப்டோஸ் பைரோசிஸ் எனப்படும் எலிக்காய்ச்சல் காரணமாக வடக்கு மாகாணத்தில் நடப்பாண்டில் இதுவரை 55 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் இந்த எண்ணிக்கை கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது குறைக்கப்பட்டுள்ளது. வவுனியாவில் அதிகமானவர்களுக்கு இந்த தொற்று ஏற்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பகுதியினரால் மாதாந்தம் வெளியிடப்படும் நோய்த்தாக்கங்கள் பற்றிய அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எலிகள் அல்லது பாதிக்கப்பட்ட விலங்குகளின் சிறுநீர் மூலமாகவே லேப்டோஸ் பைரோசிஸ் எனப்படும் எலிக்காய்ச்சல் நோய் பரவுகிறது என்கின்றனர் மருத்துவர்கள். வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் சற்றுக் குறைவானதாகவே காணப்படுகிறது. கடந்த2017ஆம்ஆண்டுஇந்தநோயின் தாக்கத்தால் , வடக்கு மாகாணத்தில் 108 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் 38 பேரும், வவுனியாவில் 33 பேரும், முல்லைத்தீவில் 28 பேரும், மன்னாரில் 3 பேரும், கிளிநொச்சியில் 6 பேரும் பாதிக்கப்பட்டிருந்தனர். என்பது குறிப்பிடத்தக்கது. (21)

## காட்டு யானையின் தாக்கத்தால் 39 தென்னங்கன்றுகள் நாசம்

கிளிநொச்சி, ஒக் .12
அக்கராயன் பகுதியில் காட்டு யானையின் தாக்கத்தால் 39 தென்னங்கன்றுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் முறுகண்டி வீதியில் கரிதாஸ் கியூடெக் நிறுவனத்தினரால் பராமரிக்கப்பட்டு வரும் தென்னந்தோட்டதிலேயே நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த பகுதிக்கு வந்த யானைக்கூட்டம் ,தென்னங்கன்றுகளை நாசமாகியுள்ளது. இதனால் நிறுவனத்துக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. மழை வறட்சி போன்றவற்றில் இருந்து பாதுகாத்து பயனை பெறுவதற்காக காத்திருந்த வேளை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளமை கவலை அழிக்கும் செயலாக இருப்பதாகத் தெரிவக்கப்படுகின்றது .தொடர்ச்சியாக அக்கராயனில் மாத்திரம் அல்லாது நாட்டின் பல பாகங்களிலும் இவ்வாறு நாட்டின் பொருளாதாரம் இந்த யானைகளால் அழிக்கப்பட்டு வருவதாகவும், அதனைக் கட்டுப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அழிக்கப்படும்போது அவற்றிக்கான இழப்பீடுகள் மற்றும்மானியங்களைவழங்கஉரியவர்கள்நடவடிக்கைஎடுக்கவேண்டும் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (6)

## இடமாற்றம் குறித்த மேன் முறையீடு

வடக்கு மாகாணத்தில் இணைந்த ,சேவையில் உள்ளவர்களின் வருடாந்த இடமாற்றம் குறித்த மேன் முறையீடுகளை ,எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்க வேண்டும் என்று மாகாண பிரதி முன்தன்மை செயலர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

'வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றம் வழங்கப்படுவது வழமை. இடம் மாற்றம் வழங்கப்பட்டால் 2019ஆம் ஆண்டு முதலாம் மாதம் முதலாம் திகதியில் அவர்கள் இடம் மாற்றம் வழங்கப்பட்ட இடத்தில் கடமையை பொறுப்பேற்க வேண்டும்.தற்போது இடம் மாற்றம் பெறுபவர்களின் பெயர் விவரங்கள் இடம் மாற்ற சபையால் தீர் மானிக்கப்பட்டு திணைக்கள, அலுவலக தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த இடம் மாற்றங்களில் மேன் முறையீடுகள் இருந்தால், எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்க வேண் டும். அப்போது தான் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.திருத்தங்கள்பற்றியநிலைப்பாடுஅடுத்தமாதம் 15ஆம்திகதிக்குமுன்னர்அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.(7)

## அகக்கண்ணுடையோர் தினம் கடைப்பிடிப்பு

வவுனியா,ஒக் .12
பன்னாட்டு வெண்பிரம்பு தினம் எதிர்வரும் 15 ஆம் திகதி கடைப்பிடிக்கப்படவுள்ளது . இதனையொட்டி வவுனியா "வரோட்"(மாற்று வலுவுள்ளோருக்கான வலுவூட்டல் அமையம்) நிறுவனத்தால் "ஒளி தேடும் விழிகள்" எனும் தொனிப் பொருளில் அகக்கண்ணுடையோர் தின ஊர்வலம் நேற்று நடைபெற்றது. வவுனியா புதியபேருந்து நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமாகிய ஊர்வலம் கொறவபொத்தான வீதி வழியாக கடைவீதியை அடைந்து, புகையிரத நிலைய வீதியூடாக வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தை அடைந்து ஏனைய நிகழ்வுகள் அங்கு நடைபெற்றன.

அருட்தந்தை கிறிஸ்ரி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டசமூக சேவைகள் உத்தியோகத்தர் சிறினிவாசன், வவுனியா பொது மருத்துவமனையின் கண்பரிசோதனை நிபுணர் கிசாந், அருட்தந்தை ஜெனிஸ், அருட்சகோதரி வசந்தி பிரான்சிஸ், யேசுதாஸன் மற்றும் யாழ் , வன்னி விழிப்புலனற்றோர் சங்கம், ஓர்கான் அமைப்பு, வவுனியா மருத்துவமனையின் தாதியர்கள், மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

குறித்த நிகழ்வில் வவுனியா பொது மருத்துவமனையின் கண்பரிசோதனை நிபுணர் கிசாந், கண்தானம் தொடர்பாகவும் ,அதன்பாதுகாப்பு தொடர்பாகவும் ,சிறப்பு விளக்கங்களை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில்கருத்துதெரிவித்தமாவட்டசமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ்.சிறினிவாசன் கண்தானம் கொடுப்பதற்கு அதிகளவு சிரமம் தேவையில்லை .இன்றைய சூழ்நிலையில் இரத்ததானம் போல கண்தானமும் சிறியநிகழ் வாக மாறியிருக்கிறது. ஒருவர் தனது 1 வயது தொடக்கம் 100 வயதுவரை கண்தானத்தை வழங்கமுடியும். கொலராநோய், எயிட்ஸ்புற்றுநோய் ஏற்பட்டவர்கள் கண்தானம் வழங்கமுடியாததுடன், ஏனைய அனைவரும் வழங்கமுடியும் உதாரணமாக கண்ணாடி அணிபவர் விழி வெண்படல சத்திரசிகிச்சை செய்தவர்கள் ஏனைய நோய்வாய்பட்டு இறந்தவர்கள் போன்ற எவரும் கண்தானம் வழங்கலாம். கண்தானம் என்பது முழுவதுமாக கண்ணை அற்றுவது அல்ல கருவிழி மாத்திரமே அங்கு எடுக்கப்படும். ஒருவர் இறந்து 6 மணிநேரத்திற்குள் கண்தானம் செய்யவேண்டும் . சாதாரணமாக 15 நிமிடசத்திர சிகிச்சை மூலம் அதனை எடுத்துக்கொள்ள முடியும். ஒருவர் இறந்தபின் வீணாக மண்ணில் சேர்வதை விட இன்னொருவருக்கு ஒளி கொடுப்பதன் மூலம் இறந்த பின்னும் உலகத்தை காணக்கூடிய அதிசயத்தை நீங்கள் உணரமுடியும். என்று கூறினார். (110)


## சிறுவர் வன்கொடுமைகளுக்கு எதிராக வவுனியாவில் விழிப்புணர்வு வீதி நாடகம்

வவுனியாவில் அதிகரித்துச் செல்லும் சிறுவர் துர்நடத்தை , சிறுவர்கள் மீது வன்கொடுமைகள் மற்றும் தற்கொலைகளுக்கு எதிராக நேற்று மதியம் 1 மணியளவில் பழைய பேருந்து நிலையத்தில் வழிப்புணர்வு வீதி நாடகம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

"சீட் "நிறுவனத்தின் அனுசரணையில் சிறுவர் துர்நடத்தை , சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தொடர்பாக , பெற்றோர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்களுக்கு விழிப்பூட்டும் வீதி நாடகம் தொடர்சியாக மூன்று தினங்கள் வவுனியா நகர மத்தியில் இடம்பெறவுள்ளது. தைரியமாக முன்னோக்கிச் செல்வதற்காக எமது சிறுவர்களைப் பலப்படுத்தவோம், இன்றைய பெரியவர்கள் நேற்றைய சிறுவர்கள் எனவே சிறுவர்களைப் பாதுகாப்பதும் அவர்களை முன்னோக்கிச் செயற்படவைப்பதும் நமது பொறுப்பு என எழுதப்பட்ட பதாதையுடன் சிறப்பு தேவைக்குட்பட்டவர்களின் பங்குபற்றலுடன் இந்த விழிப்புணர்வு நாடகம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்கள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 | 11 |
| 12 | 10 |
| 1936 | 2018 |



### சவரிமுத்து வரப்பிரகாசம்

(ஓய்வு நிலை காணி வெளிக்கள மேற்பார்வையாளர்)

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், சிவன்வீதி, உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து வரப்பிரகாசம் (ஓய்வு நிலை காணி வெளிக்கள மேற்பார்வையாளர்) நேற்று (11.10.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து வரோனிக்கா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பெரிய தம்பி (பொலிசார்) இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பராசக்தியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, ஞானம்மா மற்றும் மரியநாயகம்பிள்ளை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும்ஞானராஜன், ஜெயசோதி (கனடா) காலஞ்சென்றவர்களான ஜெயராஜன், குகராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌசலா (முகாமைத்துவ உதவியாளர் கிளிநொச்சி), ஜோசப் சந்திரகுமாரன் (கனடா) ஆகியோரின் அன்புமாமனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சண்முகம், நாகேந்திரன் ஆகியோரின் அன்புமைத்துனரும் நிரோஜன், தனுஜன், வினுஜன், தருணிகன், றுசானி, றூசோ, லீசா, அபிசா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிநிகழ்வுகள் இன்று (12.10.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக உருத்திரபுரம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 491 3007,
077 6933 826

தகவல் :
குடும்பத்தினர்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 10 |
| 07 | 10 |
| 1942 | 2018 |



### திருமதி ரூபி சுகந்தி சற்குணநாதன்

(இளைப்பாறிய ஆசிரியர்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரூபி சுகந்தி சற்குணநாதன் கடந்த (10.10.2018) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (மாஸ்டர்) தவமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை சற்குணம் தம்பதியரின் அன்புமருமகளும் சிதம்பரப்பிள்ளை சற்குணநாதனின் அன்பு மனைவியும் குணஉதயன், குணபரன் ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற தவமலர் மற்றும் கிருபாமலர், வனிதாமலர், சாந்தகுமார், லலித்தா ஆகியோரின் அன்புச்சகோதரியும் தனுஜா, சாணிக்கா, ரோகித், அல்பேர்ட், கௌசிக்கா, லௌமிஷா, றுஷ்மிக்கா ஆகியோரின் பெரியதாயும் சாரா அனிற்றாவின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் சரீரம் நாளை (13.10.2018) சனிக்கிழமை அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு (15.10.2018) மதியம் 2 மணிக்கு நல்லடக்க ஆராதனை நடைபெற்று பின் பிப்பிலி கட்டுடை மானிப்பாய் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

076 792 2638,
076 6370 272

தகவல் :
சி. சற்குணநாதன் குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் சக ஆசிரியை
சசினி
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சரஸ்வதி சிவயோகன்**

கடந்த (10.10.2018) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா / மானிப்பாய் மகளிர் கல்லூரி

## கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் தையல் போதனாசிரியாராக கடமையாற்றும்

**திருமதி S. யோகராணி** அவர்களின் அன்புத்தந்தையார்


### நல்லையா

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 04 | 23 |
| 06 | 09 |
| 1978 | 2017 |



### அமரர் பொன்னையா சிறிகரன்

திதி: 12.10.2018

கண்ணிமைத்து விழிக்கவில்லை
ஓராண்டு சென்று விட்டதையா
ஒரு நொடிப் பொழுதும் அழியவில்லை
உன் அன்பான உள்ளம் எம்மை விட்டு
என்றும் நீங்க நினைவுகளுடன்...

நூலக வீதி,
சிறுவிளான், இளவாலை.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

| பிறப்பு | மறைவு |
|---|---|
| 11 | 11 |
| 03 | 10 |
| 1979 | 2018 |



### கோவிந்தசாமி கஜேந்திரன்

வடலியடைப்பு பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தசாமி கஜேந்திரன் நேற்று (11.10.2018) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கோவிந்தசாமி யோகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் கோமதி, சுதாமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பூராசாவின் மைத்துனரும் டெனிசியன், பேரெழிலன் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## வீட்டுத்தோட்டப் போட்டி

விவசாயத் திணைக்களத்தால் வருடாந்தம் நடத்தப்படும் வீட்டுத்தோட்டப் போட்டியில் 2018 ஆம் ஆண்டுக்கானவெற்றியாளரைத் தெரிவு செய்வதற்கான மதிப்பீடுகள் நடைபெற்று வருகின்றன. கமநல சேவைகள் நிலையபிரிவுவாரியாகமதிப்பீடுகள்நடைபெறுகின்றன.

வீட்டுத்தோட்டப்போட்டிவெற்றியாளர்மதிப்பீடுகளை விவசாயப் போதனாசிரியர் மற்றும் நடுவர்கள் உள்ளடங்கியக் குழுக்கள் மேற்கொண்டுவருகின்றன. (ம-11)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 12

நூலக நிறுவனத்தின் நூலக ஆவணப்படுத்தல் கண்காட்சியொன்று இன்று நடைபெறவுள்ளது. நூலக நிறுவனத்தில் இன்று காலை 10 மணிமுதல் மாலை 5 மணி வரை இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது. (ம)

**உணவகத்துக்கு வேலையாள்கள் தேவை**

உணவகம் ஒன்றிற்கு சகல வேலையாள்களும் தேவை.
தொடர்பு - 077 706 0638

**வேலையாள் தேவை**

ஒளியகம் அந்தியகால சேவை ஸ்தாபனத்துக்கு தங்கி நின்று பணிபுரியக்கூடிய வேலையாள் தேவை.
தொடர்பு - 077 706 0638

## மரண அறிவித்தல்



### சண்முகம் நவரத்தினம்

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கு, இறம்பைக்குளம் வவுனியா ஆகியவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் நவரத்தினம் நேற்று (11.10.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற வாசுகியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா இராஜேஸ்வரி தம்பதியரின் மூத்தமருமகனும் சாந்தினியின் (ஜேர்மனி) அன்பு அண்ணாவும் அபிஷேக், அபினேஷ், அபிசாந் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமாமனும் தயாபரன் (ஜேர்மனி), எஸ். ரி. வரதராஜன் (ஓய்வு பெற்ற கிராம அலுவலர், பிரதேச செயலகம் கோப்பாய்), யோகராஜா (கனடா), செம்மனச்செல்வி தேசிகன் (ஆசிரியை வவுனியா மகாவித்தியாலயம்), இராஜராஜன் (பிரான்ஸ்), சிவசக்தி, ஜெயராஜா (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை) ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
எஸ்.ரி. வரதராஜன் (மைத்துனர்)
"பூம்பொழில்" -
பிராம்பற்றை,
கோப்பாய் வடக்கு.



அமெரிக்கத் தூதரகத்தின் அனுசரணையுடன் ஒன்றுபடுவோம் இலங்கை அமைப்பின் ஏற்பாட்டில் செயலமர்வு ஒன்று சாவகச்சேரி பொதுநோக்கு மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது. (ம-159)

# விளம்பரங்களில் தமிழ்மொழிக்கு முதன்மையிடம்

## சாவகச்சேரி நகரசபையில் தீர்மானம்

**சாவகச்சேரி, ஒக். 12**

**சாவகச்சேரியில் உள்ள அனைத்து விளம்பரப் பலகைகளும் தமிழ்மொழியில் அமைந்திருக்க வேண்டுமெனச் சாவகச்சேரி நகரசபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமர்வில் முடிவு செய்யப்பட்டது.**

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வணிக நிலையங்கள் சிலவற்றில் ஆங்கில மொழியில் விளம்பரங்கள் காணப்படுகின்றன. அத்துடன் சில இடங்களில் சிங்கள மொழியினை முதன்மையாகக் கொண்டு விளம்பரப் பலகைகள் காணப்படுகின்றன. மும்மொழியிலும் பெயர்கள் காணப்பட்டாலும் தமிழ்மொழி முதன்மை மொழியாக அமையும் வகையில் விளம்பரப் பலகைகள் அமைக்க வேண்டும். தமிழ்ப் பிரதேசத்தில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தும் சில இடங்களில் சிங்கள மொழியினை முதன்மைப் படுத்துவது ஏற்றுக் கொள்ள முடியாது. மும்மொழிகளில் உருவாக்கப்படும் விளம்பரங்களில் தமிழ் மொழியை முதன்மையாகக் கொண்டிருக்கவேண்டும் என்று சபையின் உபதவிசாளர் அ.பாலமயூரன் தனிநபர் தீர்மான வரைபை சமர்ப்பித்தார். இது சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும் என்று சபையின் தவிசாளர் திருமதி சிவமங்கை தெரிவித்தார். (ம-9)

## கட்டடத் திறப்பும் வாணி விழாவும்

யாழ்ப்பாணம், ஒக். 12

சிறிமுருகன் சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலையின் புதிய கட்டடத்திறப்பு விழாவும், வாணி விழாவும் நாளை நடைபெறவுள்ளன. நிலையத் தலைவர் ச. யசிகரன் தலைமையில் நிலைய கலையரங்கத்தில் நாளை மாலை 4 மணிக்கு இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் முதன்மை விருந்தினராக நிகழ்வில் கலந்துகொள்கிறார். சிறப்பு விருந்தினர்களாக வலி மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் த.நடனேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளரும், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய ஆசிரியருமான சி.பிரதாப் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ம)

## திருட முற்பட்ட நபரொருவர் பொலிசாரால் பிடிக்கப்பட்டார்

### முடமாவடிச் சந்தியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 12

முடமாவடிச் சந்தி வீடொன்றில் திருட முயன்ற நபரைக் கோப்பாய் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

கல்வியங்காட்டுச் சந்தியிலிருந்து திருநெல்வேலிச் சந்திக்குச் செல்லும் முதலாவது சந்தியான முடமாவடிச் சந்தியில் உள்ள வீடொன்றில், மழை வந்ததையடுத்து வீட்டுப்பெண் கொடியிலிருந்த உடைகளை எடுத்துக் கொண்டிருந்த போது அவர்களின் மதிலால் திருடன் உள்வருவதைக் கண்டுள்ளார். இது தொடர்பாக வீட்டில் இருந்த கணவனுக்கு தெரியப்படுத்தியபோது இருவரும் வீட்டில் இருந்தவாறு வெளியில் பார்த்துள்ளனர். அப்போது திருடனின் நடமாட்டத்தை உறுதிப்படுத்திய பின்னர் அவர்கள் பின்வாசல் கதவால் கள்ளன் எனக் கத்தியவாறு அருகில் உள்ள வீட்டுக்காரரின் உதவியைக் கோரியுள்ளனர். அவர்கள் வெளியே வருவதை அவதானித்த திருடன் மதிலால் வெளியில் பாய்ந்தபோது வீதியில் உள்ள வாய்க்காலில் வீழ்ந்துள்ளார். வீட்டின் உரிமையாளர் சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதை அடுத்து பற்றையொன்றுக்குள் பதுங்கியிருந்த குறித்த நபர் பிடிபட்டார். சந்தேக நபர் பிரவுண் வீதியைச் சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது. (ம-422)

## சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியினுடைய ஆங்கில தின விழா

சாவகச்சேரி, ஒக். 12

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஆங்கிலதின விழா கல்லூரி முதன்மை மண்டபத்தில் நாளை நடைபெறவுள்ளது.

அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக முன்னாள் ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ.சிறிதரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி எஸ்.சிறிதரன், மதிப்புறு விருந்தினராக் கல்லூரியின் பழைய மாணவி திருமதி ரி.சுந்தரகலா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-9)

## புத்தூர் கமநலசேவை நிலையப்பிரிவில் பத்துக் கிணறுகள் விரைவில் சீரமைப்பு

அச்சுவேலி, ஒக். 12

புத்தூர் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட பிரிவில் பத்து விவசாயக் கிணறுகள் சீரமைப்புச் செய்யப்படுகின்றன. நவகிரி பகுதியில் ஐந்து கிணறுகளும் அச்சுவேலிப் பகுதியில் ஐந்து கிணறுகளுமாகப் பத்துக் கிணறுகளும் தலா ஒரு லட்சம் ரூபா வரையிலான செலவில் சீரமைப்புச் செய்யப்படுகின்றன.

ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் பயன்படுத்தும் விவசாயக் கிணறுகள் பங்குக்கிணறுகள் என்ற வகையில் விவசாய போதனாசிரியர்களின் பரிந்துரைக்கு அமையயே இந்தக் கிணறுகள் சீரமைப்புச் செய்யப்படுகின்றன. விவசாயக் கிணறுகளின் உட்பக்கச் சுவர் இடிந்து விழுந்து சேதமடையக் கூடியதாக இருப்பதாலேயே கிணறு சீரமைப்பு ஒப்பந்த வேலைகள் விவசாயசம்மேளனங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. (ம-11)





வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் 'மது, புகை, போதைப்பொருள் பாவனையற்ற நல்லொழுக்க சமுதாயத்தை உருவாக்க முன்வருவோம்' என்ற தொனிப்பொருளில் கொடிவார நிகழ்வினை அண்மையில் நடத்தியது. (ம)





உள்ளூராட்சி மன்றங்களின் பெண் உறுப்பினர்களுக்கான இயல்திறனை கட்டி எழுப்புதல் தொடர்பான முழு நாள் பயிற்சிப் பட்டறை உள்ளூராட்சி ஆணையாளரின் ஒழுங்குபடுத்தலில் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. (ம-159)

## வடமாகாண கலாசாரத் திணைக்கள ஏற்பாட்டில் தென்மராட்சி மாணவர்களுக்கு ஓவியப்போட்டிகள்

சாவகச்சேரி, ஒக். 12

வடமாகாண கலாசாரத் திணைக்கள ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேச மாணவர்களுக்கான ஓவியப் போட்டிகள் எதிர்வரும் 19ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பங்குபற்றவுள்ள மாணவர்கள் அன்றைய தினம் மண்டபத்திற்கு வருகைதந்து பதிவு செய்து போட்டிகளில் பங்குபற்றமுடியுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

10 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் இளநிலைப் பிரிவிலும் 10 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்கள் முதுநிலைப் பிரிவிலும் 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் திறந்த பிரிவிலும் கலந்து



கொள்ளலாம்.

இளநிலைப் பிரிவு மாணவர்கள் தாம் விரும்பிய ஓவியத்தினையும் மூதுநிலைப் பிரிவு மாணவர்கள் இயற்கைக் காட்சி, பட்டம் விடுதல், கடற்கரைக் காட்சி ஆகியவற்றில் ஒன்றையும் திறந்த பிரிவினர் சந்தைக் காட்சி, பண்டிகைகள், விழாக்கள் ஆகியவற்றில் ஒன்றையும் விரும்பிய வர்ணத்தைப் பயன்படுத்தி ஓவியம் வரையலாமெனவும் ஓவியம் வரைவதற்கான தாள்கள் மண்டபத்தில் வழங்கப்படுமெனவும் தென்மராட்சிப் பிரதேசக் கலாசாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ம-9)

# இறக்குமதி செய்யப்படும் கோழிகளால் உள்ளூர்க் கோழிவளர்ப்பாளர்கள் பாதிப்பு

**புதுக்குடியிருப்பு ,ஒக் .12**

**புதுக்குடியிருப்பில் மக்களிடம் இருந்தே இறைச்சிகோழிகளை சந்தை வியாபாரிகள் கொள்வனவுசெய்யவேண்டும் என்று கடந்த 8 ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில், புதுக்குடியிருப்பு வணிகர் சங்கத் தலைவர் செல்வச்சந்திரனால் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.**

புதுக்குடியிருப்பில்பெருமளவானவர்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள். மிகவும்வறியகுடும்பங்கள். அவர்களுக்குப் பொது அமைப்புக்களாலும், அரசியல் தலைவர்களாலும் வழங்கப்பட்டு வருகின்ற வாழ்வாதார உதவியாக இறைச்சிக் கோழிக்குஞ்சுகளை வளர்த்து வருகின்றார்கள். விலைகுறைவிற்கு சந்தை இறைச்சி வியாபாரிகளால் கொள்வனவுசெய்து அதிகவிலைக்கு விற்பனை செய்துவருகின்றார்கள்.

இதேவேளை அதிகளவான இறைச்சிக்கோழிகள் வெளிமாவட்டங்களில் இருந்தே இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றமையினை மாற்றி அமைக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்ட போது. இந்த விடயம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள் ளது.

குறிப்பாக பிரதேச சபையினால் புதுக்குடியிருப்பு சந்தையில் உள்ள இறைச்சிக் கடை 16 இலட்சம் ரூபா விற்குஏலம்விடப்பட்டுள்ளது. இந்த நிலையில் உயர் விலையில் இறைச்சியினை விற்பதன் ஊடாகவே இலாபத்தை எட்டமுடியும் என்றும், வெளிமாவட்டத்தில் இருந்தே இறைச்சிக் கோழிகளை இறக்குமதி செய்வதற்கு கொள்வனவு செய்து வருவதாக பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார்.

இன் நிலையில் கோழிப் பண்ணையாளர்களை ஒன்றிணைத்து அவர்களை சங்கமாக மாற்றி அவர்களிடம் இருந்து இடைவிடாது சந்தைக் கடைக்கு கோழி இறைச்சி கிடைக்குமாக இருந்தால் அதனைக் கொள்வனவு செய்யச் சந்தைக் கடை உரிமையாளர்கள் தயாராகவுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் இறுதிக்குள் நடைபெறும் சந்தைக்கான ஒப்பந்தத்தின் போது பிரதேச சபை இதனை நடைமுறைப்படுத்தி , புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள கோழி வளர்ப்பாளர்களின் இறைச்சிக்கோழிகளை விற்பனை செய்யும் இலகுபடுத்தலை மேற்கொள்ளவுள்ளதாகத் தவிசாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-3)



## அறிவகத்தில் மாலதி நினைவுநாள் நிகழ்வு

கிளிநொச்சி,ஒக் .12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில், முதற் பெண் மாவீரர் மாலதியுடைய நினைவுநாள் நிகழ்வுகள் நினைவுகூறப்பட்டுள்ளது.

நேற்று மாலை நான்கு மணிக்கு பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை உறுப்பினர் கோகுல்ராஜ் தலைமையில் இடம்பெற்ற நினைவுநிகழ்வில், கட்சியின் பிரதேச சபைகளின் தவிசாளர்கள்,உறுப்பினர்கள் மற்றும் பெண்கள், தமிழ்த் தேசிய பற்றாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன் இங்கு நினைவுரை ஆற்றிய கிளிநொச்சி மாவட்ட தமிழரசுக் கட்சியின் செயலர் தமிழர்களின் வீரத்தை உலகுக்கு எடுத்துகாட்டிய மிகவும் உன்னதமான தியாகத்தை மாலதி செய்திருந்தார். அத்துடன் இவர்களின் இந்த உன்னத தியாகங்கள் எமது வரலாறுகளில் பதிக்கப்பட வேண்டும் - என்றார்.

## ஆசிரியர் தினநிகழ்வு

வவுனியா ,ஒக் .12

வவுனியா பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலயத்தின் ஆசிரியர் தினநிகழ்வு நேற்றுக் காலை 9 மணிக்கு பாடசாலையின் அதிபர் சிறிரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள் மதிப்பளிக்கபட்டதுடன், கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் பழையமாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (110)



## துணுக்காய் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா

முல்லைத்தீவு ,ஒக் .12

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவின் பண்பாட்டு பெருவிழா நாளை 13 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள, இந்தப் பண்பாட்டு பெருவிழாவில் முதன்மை விருந்தினராக மாவட்டச் செயலர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன், காலை 8.30 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில் ,பிரதேசத்தின் பண்பாட்டினை எடுத்துச் சொல்லும் ஊர்திகள் துணுக்காய் முதன்மை வீதியால் பிரதேச செயலகம் வந்தடைந்து , பிரதேச மண்டபத்தில் அரங்க நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

கலை நிக்ழ்வுகளாக மாணவர்களின் நடனம்,கரகம்,கிராமிய நடனம்,கவியரங்கம்,என்பனவற்றுடன் மருதோவியம் என்ற நூலும் வெளியிட்டுவைக்கப்படவுள்ளது. சிறப்பாகப்பிரதேசத்தின் மூத்த கலைஞர்களுக்கு "கலைத்திலகம்" என்ற விருதும் வழங்கி வைக்கப்படவுள்ளதாக, துணுக்காய்ப் பிரதேச பண்பாட்டுப் பேரவைத்தலைவர் தெரிவித்துள்ளார். (ரி 3)

## 69 ஆவது இராணுவ தினத்தை முன்னிட்டு கேப்பாபிலவு மக்களுக்கு உணவளித்த படையினர்



முல்லைத்தீவு ,ஒக் .12

இலங்கை படையிரின் 69 ஆவது இராணுவ தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில், கேப்பாபிலவில் நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மக்களுக்கும் ,அவர்களின் சிறார்களுக்கும், படையினர் படை அதிகாரிகள் சென்று மதிய உணவு வழங்கி மகிழ்ந்துள்ளார்கள்.

இதேவேளை முல்லைத்தீவு நகரத்தினை சுத்தம் செய்யும் பணியிலும் படையினர் ஈடுபட்டுள்ளார்கள்.

கடற்கரைக் குப்பைகளை அகற்றி ,"அழகிய நகரம் எதிர்கால சந்ததியினருக்கு" என்ற தொனி யில் பெருமளவான படையினர் முல்லைத்தீவு நகரப் பகுதி மற்றும் சுற்றுலா கடற்கரையைச் சுத்தம் செய்துள்ளதுடன், கடற்கரையில் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை வைத்துப் பரிசில்களும் வழங்கியுள்ளார்கள். (ரி- 3)

## முகமாலை அம்பளாவளைப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்

பளைப் பிரதேசத்தில் முகமாலை அம்பளாவளைப் பகுதியில் வெடி பொருள்கள் அகற்றப்பட்ட பகுதியில் மக்கள் விரைவில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் மக்கள் வசித்த பிரதேசங்களில் வெடிபொருள்கள் அகற்றப்பட்டுள்ளன.

வெடி பொருள்கள் அகற்றும் நிறுவனத்தினரால் துப்புரவாக்கப்பட்டுள்ளதென விடுவிப்புச்சான்றிதழை பிரதேசச் செயலகத்திற்கு வழங்கியுள்ளதால், இந்தப் பகுதியில் விரைவில் பொது மக்கள் குடியமர்த்தப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த இத்தாவில் தொடக்கம் முகமாலை வரையான இரண்டு கிலோ மீற்றர் தூரம் வரையான பகுதிகளில், 2011 ஆம் ஆண்டு தொடக்கம் வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் 3 நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போர்க் காலத்தில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த எழுதுமட்டுவாழ் தொடக்கம் முகமாலை வரையான இரண்டரைக் கிலோ மீற்றர் தூரத்தில் காணப்பட்ட வெடிபொருள்கள் படையினரால் துப்புரவுசெய்யப்பட்டு கையளிக்கப்பட்டு, 2011 ஆம் ஆண்டு தொடக்கம் அப்பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த பகுதிகளில் 3 பிரிவாக வெடி பொருள்கள் அகற்றும்நிறுவனங்கள்தொடர்ச்சியாக 300 க்கும் மேற்பட்ட மனிதவலு பணியாளர்களும் இயந்திரங்கள் மூல ஐம்பதுக்கு மேற்பட்ட பணியாளர்களும், கடமையாற்றுகின்ற போதிலும், கடந்த எட்டு வருடங்களாக தொடருந்து சாலைக்குத் தெற்குப் புறமாக உள்ள பகுதிகளில் வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## பன்னாட்டு ஆசிரியர் ,சிறுவர் தின நிகழ்வு

பளை தர்மக்கேணி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை சமூகத்தினரால், பன்னாட்டு ஆசிரியர் தின விழாவினையும், பன்னாட்டு முதியோர் மற்றும் சிறுவர் தின விழாவினையும் நேற்று முன்தினம் பாடசாலை மண்டபத்தில் நடத்தப்பட்டது. பாடசாலை அதிபர் வே.செல்வகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர், ஆசிரியர்கள் மதிப்பளிக்கப்பட்டதுடன், தற்போதைய அதிபர், ஆசிரியர்களும் மதிப்பளிக்கப்பட்டனர். பிரிவில் உள்ள முதியோர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களும் நிகழ்வில் மதிப்பளிக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (9)



# புலமைப் பரிசில் பரீட்சையில் முல்லைவலய விகிதாசாரம் அதிகரிப்பு

முல்லைத்தீவு ,ஒக் .12

நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் முல்லை வலயத்தின் சித்தி வீதம் அதிகரித்துக் காணப்படுவதாக, முல்லை வலயக்கல்விப்பணிப்பாளர் உமாநிதி புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில்அவர்மேலும்தெரிவிக்கையில்: முல்லைத்தீவு மாவட்டத்தில் 2018 ஆம் ஆண்டில் முல்லை வலயத்தில் ஆயிரத்து ஐநூற்று எண்பத்து ஏழு மாணவர்கள் பரீட்சையில் தோற்றிய போதும், இருநூற்று பதினாறு மாணவர்கள் சித்தி பெற்றுள்ளார்கள். இந்தச் சித்தி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சியடைந்துள்ளது.

கடந்த ஆண்டு முல்லை வலயம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வீதம் 11.8 வீதமாகக் காணப்பட்டுள்ளது .ஆனால் 2018 ஆம் ஆண்டு 13.5 வீதமாக அது உயர்ந்துள்ளது. தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைவோரின் விகிதாசாரம் உயர்வடைந்து செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது என, முல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் உமாநிதி புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார் . (ரி3)

## யா / மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2018 இல் சிறந்த பெறுபெறுகளைப் பெற்ற மாணவர் களையும் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர் களையும் பாராட்டி வாழ்த்துவதோடு, இம் மாணவர்களைப் பயிற்றுவித்த ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள், **முன்னாள் ஆசிரியை திருமதி. அமுதா சிவகரன்** மற்றும் ஆசிரியர்கள் **திரு. ப. பத்மநேசன், செல்வி. செ. பத்மநிதி, செல்வி. ஜெ. அன்ரனிற்றா சுமதினி** ஆகியோரின் தன்னலமற்ற சேவையினைப் பாராட்டுவதோடு, யாழ். மாவட்டத்தில் முதல் 10 இடங்களுக்குள் 3 மாணவர்களை இடம்பெறவைத்த ஆசிரியர் **திரு.ப.பத்மநேசன்** அவர்களை விசேடமாகப் பாராட்டுகின்றோம்.

## Congratulations!



**சாருகா சிவனேஸ்வரன்**
**புள்ளி - 196**
**மாவட்ட நிலை - 03**
**தேசிய நிலை - 04**



**கனிவிழி சுதாஜி**
**புள்ளி - 195**
**மாவட்ட நிலை - 05**



**விநாயசீலன் மிதுனாளன்**
**புள்ளி - 192**
**மாவட்ட நிலை - 09**



**திரு . ப. பத்மநேசன் (ஆசிரியர்)**

### வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1.சாருகா சிவனேஸ்வரன் | :-196 | 10. நஜிதா கிருஷ்ணரூபன் | :-171 |
| 2.கனிவிழி சுதாஜி | :-195 | 11. விதுசா பிரதீபன் | :-170 |
| 3.விநாயகசீலன் மிதுனாளன் | :-192 | 12. முரளிதரன் டிலக்சன் | :-170 |
| 4.ஐஸ்வர்யா முருகதாஸ் | :-185 | 13. கஜானா சந்திரலிங்கம் | :-169 |
| 5.கீர்த்தனா சுரேஷ் | :-180 | 14. சாரிகா சிவனேஸ்வரன் | :-169 |
| 6.வாமதேவன் ரிஷபன் | :-179 | 15. ததுவர்த்தனி பாலேந்திரன் | :-169 |
| 7.டபீனா மதிகுமார் | :-176 | 16. ஈஸ்வரன் தாசன் | :-168 |
| 8. ஜெயசீலன் பிரணவன் | :-175 | 17. ரஸ்மிதா மோகனபிரபன் | :-165 |
| 9. சசிகரன் கிரிஷாந் | :-175 | 18. ராகவி ஜெகதீஸ்வரன் | :-164 |

**பாடசாலைச்சமூகம்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் கடோற்கசன் சமீரணன்
*164* புள்ளிகள்



செல்வி சங்கரன் சங்கவி
*164* புள்ளிகள்

எமது பாடசாலையில் இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்ததோடு பாடசாலைச் சமூகத்திற்கும் பெருமை தேடித்தந்த **செல்வன் கடோற்கசன் சமீரணன்** மற்றும் **செல்வி சங்கரன் சங்கவி** அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அத்துடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற பின்வரும் மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| செல்வி பாலேஸ்வரன் கபிஸ்யா | - 153 | செல்வன் தில்லைராசா கஜதீஸ் | - 130 |
| செல்வி பஞ்சலிங்கம் ரிஷாங்கி | - 124 | செல்வி சிவகாந்தா மகிழினி | - 121 |
| செல்வி சிவேந்திரன் யாதவி | - 117 | செல்வி தயாபரன் டினுசியா | - 117 |
| செல்வி அருட்சோதி யதுஸ்ரா | - 111 | செல்வி பேரின்பநாயகம் கலையரசி | - 108 |
| செல்வி சோதிலிங்கம் சுமங்கலி | - 107 | செல்வன் கோகுலராசன் அஸ்வின் | - 100 |
| செல்வன் செந்தில்குமரன் விபீஷணன் | - 100 | | |

அத்துடன் இம் மாணவர்களுக்கு கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஊக்கம் அளித்த பெற்றோர்கள், நலன்விரும்பிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். கல்வியில் மேலும் பல சாதனைகள் படைக்க செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் அருள்பாலிக்க வேண்டுகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலைச் சமூகம்.**
**யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்**

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/L's Join PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka



BTEC HND
Quantity Surveying & Construction Economics
Leading to BSc(Hons)

20 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக Quantity Surveying கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாட நெறி.
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க Quantity Surveying நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட Laboratory களில் Material, Hydraulic, Soil நடை முறைப்பயிற்சிகள்.

Pearson  University of East London  University of Wolverhampton  CIOB  RICS

MADHU 0777 102131
SANCHU 0777 692318
INTAKE NOW ON

BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.

20 YEARS  ISO 9001:2008 CERTIFIED

021 221 9910  info@bcas.lk  www.bcas.lk  BCAS Ranked "Platinum Partner" No.1 once again

## மணற் கொள்ளையுடன் தொடர்புடைய பொலிஸார் மீதான தரவு திரட்டல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 12

கிளிநொச்சிமாவட்டத்தின்பன்னங்கண்டிப் பகுதியில் இடம்பெற்ற திருட்டு மணல் அகழ்வுடன்தொடர்புபட்டனர்என்றகுற்றச்சாட்டில் இடமாற்றம் செய்யப்பட்ட பொலிஸ் அலுவலர்கள் ஐந்து பேருக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதற்காக வடக்கு மாகாணக் குற்றப் புலனாய்வு அதிகாரி உள்ளிட்ட குழுவினர் நேற்று முழுவதும்கிளிநொச்சியில்விசாரணையில்ஈடுபட்டனர்.

கிளிநொச்சிபன்னங்கண்டிப்பகுதியில்இந்த ஆண்டின் ஆரம்பத்தில் சுமார் 6 மாதங்களாக 30க்கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்களில் மணல் கொள்ளை இடம்பெற்றது. இது தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸாருக்குப் பல தடவைகள் தெரியப்படுத்தியும் பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை.

இதனை ஆராய்ந்தபோது அங்கு மணல் கொள்ளையில்ஈடுபட்டடிப்பர்வாகனங்கள் மாவட்டத்தில் பணியாற்றும் பொலிஸ் அலுவலர்களுக்குச் சொந்தமானவை என்று பொது அமைப்புகள் கண்டறிந்தன.

இதனையடுத்து மாவட்டச் செயலாளரின் ஊடாகச் சில பொது அமைப்புகள் குறித்த விடயத்தை பொலிஸ் தலைமையகத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றன இதன் அடிப்படையில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, குறித்த குற்றச் சாட்டை முன்வைத்தவர், இது தொடர்பான தகவல்கள், ஆதாரங்கள் தெரிந்தவர்களிடம் இவை தொடர்பான தகவல்கள் ஆதாரங்களை சேகரித்துக் கொண்டனர்.

மணற் கொள்ளை இடம்பெற்ற பகுதிக்கும் குறித்த குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர். (4,105)

### விவசாயிகளின் நலன்கள் விடயத்தில்

# அரச தலைவர் கட்டளையிட்டும் கூட அக்கறையற்ற வடக்கு அதிகாரிகள்

### சினக்கின்றனர் விவசாயிகள்

யாழ்ப்பாணம், ஒக். 12

இலங்கையில் உள்ள விவசாயிகள் நன்மையடையும் வகையில் அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேன கொண்டுவந்த திட்டம் வடக்கு மாகாணத்தில் உள்ள அதிகாரிகளால் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

விவசாயிகள், தோட்டத்தொழிலாளர்கள்நன்மையடையும் வகையில் குறைந்த கட்டண அறவீட்டுக்கான பிறிதொரு மின்மானி பொருத்தும் திட்டமே அது.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன 2016 ஆம் ஆண்டு இதை அறிமுகப்படுத்தினார். அந்தத் திட்டம் உடன் நடைமுறைக்கு வரும் என்றும், நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் கட்டளையிட்டிருந்தார். அதற்கான ஆரம்ப நிகழ்வில் வவுனியாவில் அரசதலைவர் தனது கையால் விவசாயி ஒருவருக்குத் திட்டத்துக்கான விண்ணப்பத்தைவழங்கியிருந்தார். அந்த விவசாயிக்குக்கூட அந்தமின் இணைப்புவழங்கப்படவில்லைஎன்றுதெரிவிக்கப்படுகிறது.

அரசதலைவருடையகையால்வழங்கப்பட்ட விவசாயிக்கே மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்றால், ஏனைய வசாயிகளுக்கு வழங்கப்பட்டிக்கும் என்பது சந்தேகமே என்றும், இது தொடர்பில் இலங்கை மின்சார சபையிடம் கேட்டு உரிய பதில்களை வழங்க வேண்டும் என்றும் அண்மையில் இடம்பெற்ற பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில்இலங்கைமின்சாரசபையின் வடக்கு மாகாணத்துக்குக்குப் பொறுப்பான பொறியியலாளருடன் தொடர்பு கொண்ட போது,

குறித்தமின்இணைப்பைவழங்குவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. விவசாயிகளுக்குப்பிறிதொருமின் இணைப்பை வழங்கிய பின்னர் திட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டில் இருந்தே அதற்கான கட்டணம் அறவிடப்படும். மீற்றர் பெட்டிகள் பற்றாக்குறை காரணமாக அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவற்றைக் கோரியுள்ளோம் என்று அவர் பதிலளித்தார்.

"அரசதலைவர் ஒருவரால் பணிக்கப்பட்ட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கே மூன்று ஆண்டுகள் ஆகின்றன என்றால் பொதுமகன் ஒருவருடைய தேவைகளை இந்த அதிகாரிகள் எப்படி நிறைவு செய்வார்கள்? 2016ஆம் ஆண்டு திட்டத்தின் படியே கட்டணத்தை அறவிடுவார்கள் என்றால் இது வரைசெலுத்தியபணத்தைஎப்படித்திருப்பித் தருவார்கள். ஏமாற்று வேலைகளையே இவர்கள்செய்கின்றார்கள்என்றுவிவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (4,21)

### சமாதான நீதிவான்கள் சங்க வெள்ளிவிழா

இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள் கொழும்பு கிராண்ட் ஓரியண்டல் விடுதியில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும். கலந்து கொள்ளவிரும்புவோர் 077 711 0331 எனும் இலக்கத்துக்கு அழைக்கவும் (4,9)



## கடனிலிருந்து விடுவிக்கும் வகையில் வவுனியாவில் காசோலை வழங்கல்

வவுனியா, ஒக். 12

வடக்குமாகாணத்தில் நுண்நிதிநிறுவனங்களில் கூடுதலான வட்டிக்குக் கடன்களைப் பெற்று மீளச் செலுத்த முடியாமல்கடன்சுமையில்இருக்கும் மக்களை விடுவிக்கும் செயற்றிட்டம் வவுனியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியாமாவட்டசிக்கனகடனுதவிக் கூட்டுறவுச் சமாசத்தின் அலுவலக மண்டபத்தில் சமாசத்தின் தலைவர் அ.ச.பாரதி ஆனந்தம் தலைமையில் நடைபெற்றது.

2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசு ஒதுக்கிய நிதியின் மூலமாகப் பாதிக்கப்பட்டவர்களின் கடன் சுமையை நீக்கும் பொருட்டுக் குறைந்தவட்டிவீதத்தில் மாவட்டசிக்கனக்கடனுதவிக்கூட்டுறவுச்சங்க சமாசங்கள், கூட்டுறவுக்கிராமியவங்கிகள் ஊடாகக் கூட்டுறவு அரவணைப்புக் கடன்திட்டம்வழங்கப்பட்டுவருகிறது.

குறித்த திட்டம் இலங்கை மத்திய வங்கி, மாவட்டச்செயலகம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றின் மேற்பார்வையில் வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இந்தக்கடன்திட்டத்தின்கீழ்வவுனியாமாவட்டத்தில்ஆரம்பக் கட்டமாகச் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 400 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இந்தச் சங்கங்களினூடாகக் கடன்களை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தநிகழ்வுக்குமுதன்மைவிருந்தினராக வவுனியா கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி இந்திரா சுபசிங்க கலந்து கொண்டிருந்தார்.

கூட்டுறவுஅபிவிருத்திஉத்தியோகத்தர் அ.பிரணவன், சமாசத்தின் இயக்குநர் சபைஉறுப்பினர்களும், பயனாளிகள், கூட்டுறவுஅபிவிருத்திஉதவிஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், சமாசத்தின் தலைவர், இயக்குநர் சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

பயனாளிகளுக்கான காசோலைகள் அங்குவழங்கிவைக்கப்பட்டன. (4,110)

### எதிர்வரும் 24ஆம் திகதியிலிருந்து

# அடுத்த மாகாண சபைத் தேர்தல்வரை ஏராளம் அபிவிருத்திகளைச் செய்வேன்!

### வடக்கு ஆளுநர் குரே பிரான்ஸ் சந்திப்பில் உறுதி

யாழ்ப்பாணம், ஒக். 12

வடக்கு மாகாணசபையின் ஆட்சிக்காலம் எதிர்வரும் 24ஆம் திகதியுடன் நிறைவடைய வுள்ளது. வடக்குமாகாணசபையின்அடுத்ததேர்தல் வரை வடக்கு ஆளுநரின் நிர்வாகத்தி லேயே வடக்கு மாகாணசபை இயங்கவிருக்கின்றது. இந்தக்காலப்பகுதியில்தன்னால்முடிந்த அபிவிருத்திகளை மேற்கொள்ளவுள்ளேன் என்று ஆளுநர்கூறியுள்ளார்எனத்தெரிவிக்கப்பட்டது.



ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர் தமிழ் மக்களுடன் சந்திப்புகளை நடத்திவரும் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கடந்த இரண்டு நாள்களாகப் பிரான்ஸ் நாட்டில் வாழும் புலம்பெயர் தமிழர்களைச் சந்தித்து வருகிறார். அந்தச் சந்திப்பின்போதே ஆளுநர் இவ்வாறு கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரான்ஸின்புறநகர்பகுதியானமொன்ரினிநகரில் நேற்று முன்தினம் தமிழ் வர்த்தகப்பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் சிலரைச் சந்தித்த ஆளுநர், வடக்கின் தற்போதைய நிலமை, தேவைகள் குறித்து விளக்கமளித்தார்.

போர்முடிவடைந்தபின்னர்வடக்குகிழக்கில்பெருமளவில்உட்கட்டுமானப்பணிகள்மேற்கொள்ளப்பட்ட போதிலும் மக்களின் அன்றாட வாழ்வை வளப்படுத்துவதற்கானதிட்டங்கள்மேற்கொள்ளப்படவில்லை. மக்களுக்குவருமானத்தைப்பெற்றுத் தரக்கூடிய வகையில் தொழிற்சாலைகளோ அல்லதுதொழில்வழங்கும்வர்த்தகநடவடிக்கைகளோ ஆரம்பிக்கப்படவில்லை. இவையே இன்றைய அவசியத்தேவைஎன்பதைஆளுநர்விளக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

கல்வியாளர்கள், புத்திஜீவிகள், வசதிபடைத்தவர்கள்எல்லோரும்தாயகத்திலிருந்துபுலம்பெயர்ந்து வாழுகின்றபோது, அங்கே மிக வறிய மக்களே எஞ்சியிருக்கின்றனர். அவர்களின்வாழ்க்கையில் ஒளிஏற்றவேண்டியபொறுப்புபுலம்பெயர்ந்ததமிழர்களுக்கும் உண்டு என்பதை ஆளுநர் வலியுறுத்தியஅதேவேளை, சிறியவர்த்தகமுயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் அங்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கலாம் என்றும் தெரிவித்தார்.

ஆளுநரின் இரண்டாவது சந்திப்பு பாரிஸ் புறநகர் பகுதியானலாகோர்னோவ் நகரில்நடைபெற்றது. பிரான்ஸ் நாட்டில் வாழும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், வர்த்தகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

ஆளுநர் தனது உரையில், "தான் கல்வி கற்ற காலத்தில் வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணம் கல்வியில்மிகஉயர்ந்தநிலையில்இருந்தது. தெற்கில் எந்த அலுவலகத்திற்குச் சென்றாலும் அங்குள்ள உயர்அதிகாரிகள்தமிழர்களாகவேஇருந்தார்கள். இன்றுவடக்கின்கல்விநிலைமோசமாகவுள்ளது. வடக்கின் கல்வியை மீண்டும் கட்டியெழுப்பக்கூடிய உதவியை வழங்கக்கூடிய வசதி புலம்பெயர் தமிழர்களிடம் இருக்கின்றது. இங்குள்ள பல்கலைக்கழகங்களுடன்இணைந்து, வடக்கில்கல்வி நிலையங்களைஅமைக்கபுலம்பெயர்தமிழர்கள் முன்வரவேண்டும்" என்றும்கேட்டுக்கொண்டார்.

சுற்றிவர கடலால் சூழப்பட்ட இலங்கை, உப்பைக் கூட இறக்குமதிசெய்கின்ற அவலம் இருக்கின்றது. நவீன தொழில்நுட்ப வசதிகளை நமது நாட்டுக்கு அறிமுகம்செய்து, அங்குள்ள பாவப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கக் கூடிய வசதிகளைச் செய்ய புலம்பெயர்ந்தோர் முன்வர வேண்டும் என்று ஆளுநர் அழைப்பு விடுத்தார்.

இந்தக்கூட்டத்தில், ஆளுநருடன்பயணித்தஅவரது செயலாளர் இ. இளங்கோவன் உரையாற்றினார். புலம்பெயர்தமிழர்கள்தாயகத்துக்குவரும்போது எதிர்நோக்கும்பிரச்சினைகள், புலம்பெயர்தமிழர்களுக்குச்சொந்தமானகாணிகளின்தற்போதைய நிலைமைகள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்தும் தத்தமது சந்தேகங்களைக் கேட்டனர். அவற்றை செவிமடுத்த ஆளுநர், அவைகுறித்து கவனம்செலுத்தப்படும் என்று உறுதியளித்தார்.

கூட்டத்தை அவதானிப்பதற்காகபிரான்ஸ்நாட்டுக்கான தூதுவர் பி.கே. அதாவுட, அங்கு திடீர்ப் பயணம் ஒன்றை மேற்கொண்டார். தூதரகத்தின் செயற்பாடுகள்குறித்துவிளக்கமளித்தார். தூதரகம் இங்குள்ள இலங்கையார்களுக்கானது என்று கூறிய தூதுவர், மக்கள் எந்த நேரத்திலும் தமது தேவைகளுக்காகத்தூதரகத்துடன்தொடர்புகொள்ளலாம் என்றும் அதற்காக 24 மணிநேரமும் மக்கள் தொடர்புகொள்ளக்கூடிய வகையில் அதிகாரிகள்பணியாற்றஏற்பாடுசெய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அங்குபுங்குடுதீவுஒன்றியப்பிரதிநிதிகளும்சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தீவகப் பகுதிகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சு நடத்தினர். (4,222)

வறுமை மாவட்டமாக அறிவிக்கப்பட்ட முல்லையில்

# கிட்ட நெருங்க முடியாதவாறு 78 குளங்கள் சிதைந்துள்ளன

## மக்கள் சென்றால் அதிகாரிகள் விரட்டுகின்றனர் அவை பயன்படவில்லை என்று சாந்தி எம்.பி. விசனம்

யாழ்ப்பாணம், ஒக். 12

முல்லைத்தீவு மாவட்டத்தில் கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ் உள்ள 273 குளங்களில் 78 குளங்கள், இன்று கமநல சேவைத் திணைக்கள அதிகாரிகள்கூட கிட்ட நெருங்க முடியாதளவுக்கு மிக மோசமான நிலைமையிலேயே காணப்படுகின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆளுகைக்கு உட்பட்ட குளங்கள் தவிர்த்து 273 குளங்கள் கமநல சேவைத் திணைக்களத்தின் ஆளுகையின் கீழ் உள்ளன. அவற்றில் 195 குளங்களைமட்டுமேகுறித்ததிணைக்களத்தினர் போருக்குப் பின்னர் பராமரிக்கின்றனர். எஞ்சிய 78 குளங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பினால் கமநல சேவைத் திணைக்களத்தினர் கையை விரிக்கின்றனர்.

ஏன் அவ்வாறு கையை விரிக்கின்றனர் என்று ஆராய்தபோது அதிர்ச்சியான தகவல்களே கிடைக்கின்றன. குறித்த குளங்கள் போர்க் காலத்தில் போர்ப் பிரதேசத்துக்குள் அகப்பட்ட நிலையில் 20 முதல் 25 ஆண்டுகளாகச் சீரமைக்கப்பட வில்லை. இதனால் குளமும் அதனை அண்டிய பகுதிகளும் காடு சூழ்ந்து விட்டன. குளங்களும் அழிவடைந்தே காணப்படுகின்றன. இவ்வாறு காடு சூழ்ந்த ஒரே காரணத்துக்காக வன வளத்திணைக்களம் அந்தப் பிரதேசத்தையும் குளத்தையும் இணைத்து எல்லை நாட்டிவிட்டனர்.

தற்போது அந்தக் குளம் இருக்கிற பிரதேசத்துக்குக் குளத்தின் ஆளுகைத் திணைக்களமானகமநலசேவைத்திணைக்களமோ அல்லது மக்களோ செல்ல முடியவில்லை. அந்தக் குளங்களின் கீழ் செய்கை பண்ணிய நிலங்களுக்கு அவற்றுக்கு உரித்தான மக்கள் செல்ல முட்பட்டனர். அவ்வாறு சென்றால் கைது செய்வோம் என்று வனவளத் திணைக்களத்தினரும், வனஜீவராசிகள் திணைக்களத்தினரும் மிரட்டிக்கொண்டிருக்கின்றனர்.

அந்தத் திணைக்களங்கள் எமது பகுதியில் எல்லை பிடிப்பதில்தான் ஈடுபடுகின்றன.

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் வாழ்வாதார அழிவுக்கு இந்த இரு திணைக்களங்களுமே முக்கிய காரணம் என்று நாம் தொடர்ந்தும் கூறிவந்த நிலையில் எம்மிடம் சான்று ஆவணம் கோரி நின்றனர். இரு அரச திணைக்களங்களின் மோசடிக்குத் தற்போது மற்றுமோர் அரச திணைக்கள ஆவணமே சான்று பகிர்கின்றது. இதனால் மாவட்ட அரச இயந்திரம் அமைச்சு என அனைவரும் உடனடியாகத் தலையிட்டு இந்தக் குளங்களையும் அதன் கீழான விவசாய நிலங்களையும் உரியவர்களுக்கே கையளிக்க வேண்டும்.

இந்த 78 குளங்களின் கீழ் இருந்த வயல் நிலங்களிலும் 3 ஆயிரத்து 430 ஏக்கர் நிலமும் வனவளத் திணைக்களத்தால் விழுங்கப்பட்டுவிட்டன. இன்று இலங்கையில் வறுமை மாவட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டமே முதன்மை இடத்தைப் பிடித்துள்ளது. எத்தனையோ சாதனைப் பட்டியலில் இடம்பிடித்த மாவட்டம், இன்று அவலப் பட்டியல்களில்தான் இடம்பிடிக்கின்றது. தேசிய வருமானத்தை ஈட்டக்கூடிய வயலையும் அதற்குத் தண்ணீர் பாச்சும் குளத்தையும் இவ்வாறு அபகரித்து மாவட்ட மக்களைத் தொடர்ந்தும் அவலப் பட்டியலில் வைத்திருக்கவே இவ்வாறான திணைக்களங்கள் உருவாக்கப்பட்டனவா? என்ற சந்தேகமும் எழுகின்றது என்றார். (4,105)

சபை உறுப்பினர்களின்

## மாதாந்தக் கொடுப்பனவுகள் இனி வங்கிக் கணக்குகளில்!

*தரவுகளை வழங்குமாறு கோரிக்கை*

சாவகச்சேரி, ஒக். 12

உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு அடுத்த மாதம் தொடக்கம் அவர்களது வங்கிக் கணக்குக்கு அனுப்பி வைக்குமாறு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சாவகச்சேரி உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு அடுத்த மாதம் தொடக்கம் வங்கிக் கணக்கில் வைப்பிடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

உள்ளூராட்சித் திணைக்கள அறிவுறுத்தலையடுத்து இந்தமாத இறுதிக்குள் தமது வங்கிக் கணக்குகளை வழங்குமாறு உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களிடம் தவிசாளர்கள் கோரியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் உள்ளூராட்சித் தவிசாளர் உட்பட உறுப்பினர்களின் மாதாந்த படி மாதாந்த அமர்வு தின்த்தில் வழங்கப்பட்டு வந்ததெனவும் தற்போது வழிப்பறிகள், திருட்டு போன்றவை இடம்பெறுவதால் உறுப்பினர்களின் நலன்கருதி உள்ளூராட்சித் திணைக்களத்தினால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

நிதி சார்ந்த விடயங்கள் வங்கிக் கணக்குகள் ஊடாகக் கையாளப்படவேண்டும் என்பது சுற்றறிக்கையில் உள்ளபோதும் அது பெரும்பாலும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. இனி இதனைக் கடுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று ஆணையாளர் கூறியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் சாவகச்சேரி நகரசபையின் பெண் உறுப்பினர் ஒருவர் சபையின் சிறப்பு அமர்வில் கலந்துவிட்டுத் திரும்பும் போது ஈருருளியில் கைப்பை உந்துருளியில் வந்தவரால் அபகரிக்கப்பட்டது. அன்றைய தினம் நடைபெற்ற அமர்வின்போது மாதாந்தப் படி வழங்கப்பட்டிருக்கலாமென்ற எண்ணத்தில் வழிப்பறி இடம்பெற்றிருக்கலாமென்று சந்தேகிக்கப்பட்டது.

உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு மாதாந்தம் தலா 15 ஆயிரம் ரூபாவும், உப தவிசாளருக்கு 20 ஆயிரம் ரூபாவும், தவிசாளருக்கு 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுகிறது. (4,9)

## குறைந்த வட்டியில் ரூ.50,000 பெற்றுக்கொள்ள வாய்ப்பு

*சரவணபவன் எம்.பி. நடவடிக்கை*

சுயதொழில் நிவாரணக் கடன் திட்டத்தின் கீழ் மிகக் குறைந்த வட்டியில் 50 ஆயிரம் ரூபா கடன் இலங்கை வங்கியூடாக வழங்கப்படவுள்ளது. இந்தக் கடனுக்காக விண்ணப்பப்படிவங்களை வழங்க யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் முதற் கட்டமாக இலங்கை வங்கியில் கணக்கு வைத்திருக்கும் கோப்பாய், நல்லூர், சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கு இந்தக் கடனுக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும்.

மறுவாழ்வு அதிகார சபையினால் வழங்கப்படும் மேற்படி கடனுக்கு விண்ணப்பம் செய்வோர் வட்டுக்கோட்டையில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்திலும், இராச பாதையில் உள்ள கோப்பாய் அலுவலகத்திலும் கடனுக்கான படிவங்களைப் பெறலாம். அவற்றைப்பெற வரும்போது குடும்ப அட்டை வைத்திருத்தல் வேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,50)

வேலணைப் பிரதேச சபை எல்லைக்குள்

## கடலட்டைப் பண்ணைகள் சட்டவிரோதமெனின் தடை

யாழ்ப்பாணம், ஒக். 12

வேலணைப் பிரதேச சபை எல்லைக்குள் அனுமதியின்றி கடலட்டைப் பண்ணை வைத்திருப்பதைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சபை தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

அவற்றில் ஒரே ஒரு பண்ணை மாத்திரமே சபையின் அனுமதியுடன் செயற்படுகிறது. வேலணைப் பிரதேசத்தின் மிக முக்கிய வளமாகக் கடல் காணப்படுகிறது. அதன் மூலம் நடைபெறும் விடயங்கள் சபையின் அபிவிருத்திக்கு நன்மை தரக்கூடியதாக அமைய வேண்டும். மண்டைதீவு, சாட்டி, அல்லைப்பிட்டி போன்ற இடங்களில் கடல் அட்டைப் பண்ணைகள் உள்ளன. அனுமதியின்றி நடத்தப்படும் பண்ணைகளைத் தடை செய்யவதற்குக் கடந்த மாதம் நடைபெற்ற அமர்வில் தீர்மானிக்கப்பட்டது. அனுமதி பெறாதுவிட்டால் அவற்றைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (4,7)

## மூன்றாந் தவணைப் பரீட்சை நவம்பர் 14 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 12

வடக்கு மாகாணப் பாடசாலைகளின் மூன்றாம் தவணைப் பரீட்சை அடுத்த மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்று மாகாணக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தரம் 6 தொடக்கம் 10ஆம் வகுப்பு வரையான மாணவர்களின் பரீட்சையே 14 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

காலை 8மணிக்கு பரீட்சைகள் ஆரம்பமாகும். 27ஆம் திகதி செய்வாய்க் கிழமை விருப்பத் தெரிவு தொகுதிக்குரிய பாடங்களுடன் பரீட்சைகள் நிறைவடையும். தரம் 9க்கான விஞ்ஞான செயன்முறை பரீட்சைகள் 8ஆம் திகதியும், தரம் 10க்கான விஞ்ஞான செயன்முறை பரீட்சைகள் 12ஆம் திகதியும் நடைபெறும். தரம் 9க்கான அழகியல் பாட செயன்முறைப் பரீட்சைகள் 12ஆம் திகதியும், தரம் 10க்கான அழகியல் செயன்முறை பரீட்சைகள் 8ஆம் திகதியும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (4,7)

## நாடாளுமன்றில் பேச நேரம் ஒதுக்குங்கள்

*சிவசக்தி எம்.பி. கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஒக். 12

நாடாளுமன்றில் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் சபாநாயகரிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது,

இடைக்கால அறிக்கை சம்பந்தமான விவாதம் உட்பட அதற்குப் பின்னரான முழு நாடாளுமன்ற சபை நடவடிக்கைகளிலும் எனது கருத்துகளை முன்வைப்பதற்கான நேர ஒதுக்கீட்டை எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான சம்பந்தன் வழங்குவதை தவிர்த்து வருகின்றார் என்பதை பல தடவைகள் கூறியுள்ளேன்.

நாடாளுமன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எனக்கான பேச்சுரிமை மறுக்கப்பட்டிருக்கின்றது. இது அடிப்படை மனித உரிமை மீறல்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் பத்து மாதங்களுக்கும் அதிகமாக சபையில்

எனக்கான நேரம் மறுதலிக்கப்பட்டு வருகின்றது. இது எனது சிறப்புரிமையை மீறும் செயல்.

உறுப்பினர்களுக்கான நேர ஒதுக்கீட்டை சபாநாயகர் என்ற அடிப்படையில் தாங்கள் பெற்றுக்கொடுப்பதற்கு உரித்துடையவராகின்றீர்கள்.

ஆகவே தாங்கள் எந்தவொரு கட்சியையும் சாராது நடுநிலைமையுடன் செயற்பட்டு வருகின்றவர் என்ற அடிப்படையில் இந்த விடயம் சம்பந்தமாக உரிய கவனம் எடுத்து விரைந்து பதிலளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (4)

ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளுக்கும்

## வீதிகளைச் சீரமைக்க ரூ.100 மில்லியன் நிதி

யாழ்ப்பாணம், ஒக். 12

அரசு அறிமுகப்படுத்திய "கம்பரெலிய" அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், உள்ளூராட்சி சபைகளின் கீழ் உள்ள சிறிய வீதிகள் சீரமைக்கப்படும் வாய்ப்புகள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

நிதி அமைச்சின் வழிகாட்டலில் "கம்பரெலிய" அபிவிருத்தித் திட்டம் மூலமாக ஒவ்வொரு பிரதேசத்தின் தேர்தல் தொகுதிக்கும் நூறு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியை பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர்களாக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மூலம் பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கு தலைவர்கள் பகிர்ந்தளித்துள்ளனர். பகிரப் பட்ட நிதிக்கு அமைவாக மதிப்பீட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறன. வீதி அபிவிருத்தி, மலசல கூடம் அமைத்தல், பசுமைப் பூங்கா, நாள் சந்தை அமைத்தல் உள்ளிட்ட திட்டங்களுக்கு தலா 2 மில்லியன் ரூபாவரை ஒதுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி சபைகளில் வட்டார ரீதியான அங்கத்தவர்கள் தமது பிரதேசத்து வீதிகளைச் சீரமைப்பதற்கு அதிக முனைப்புக் காட்டி வருகின்றனர். ஆகவே உள்ளூராட்சி சபைகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி சிறிய வீதிகளைச் சீரமைப்பதற்கு உதவியாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டது. (4,7)

# ரவீந்திர மீது நடவடிக்கை எடுக்க தடைகள் பல ஏற்படுத்தப்பட்டன

## சி.ஐ.டியினர் நீதிமன்றில் தெரிவிப்பு; விரைவில் நடவடிக்கை எனவும் உறுதி

**கொழும்பு, ஒக். 12**
**நேவி சம்பத் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி மறைந்திருக்க உதவிய குற்றச்சாட்டில் முப்படைகளின் அலுவலக முதன்மை அதிகாரி அத்மிரல் ரவீந்ர விஜேகுனரத்னவுக்கு குறிப்பி டப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முற்பட்ட போது தமக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டதாகக் குற்றப் புலனய்வுப் பிரிவினர் கோட்டை நீதிவானுக்கு நேற்றுத் தெரிவித்தனர்.**

ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரைக் கடத்திச் சென்று, சட்ட விரோதமாகத் தடுத்து வைத்து, கப்பம் பெற்றமை, காணாமல் ஆக்கியமைதொடர்பில் முதன்மைச் சந்தேகநபராக நேவி சம்பத் உள்ளார்.

அத்மிரல் ரவீந்திர விஜே குணரத்னவுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன,சி.ஐ.டி.யின் சமூகக் கொள்கை தொடர்பில்விசாரணை அறைப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வாவிடம் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எனினும் மிகவிரைவில் விஜேகுணரத்னவை சி.ஐ.டி. க்கு அழைத்து நடவடிக்கை எடுப்பதாகவும் நிசாந்த சில்வா குறிப்பிட்டார்.

5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தில் சி.ஐ.டி. க்கு கடத்தப்பட்ட மாணவன் ஒருவரின் தாய்ஊடாக வழங்கப்பட்ட தகவல்களில் குறிப்பிடப்பட்டிருந்த எச்.பி.8987 எனும் மகிழுந்தை. 2008 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடற்படை பிரதி நடவடிக்கை பணிப்பாளராகவும் ஊடகப் பேச்சாளராகவும் இருந்த டி.கே.பி. தஸநாயக்க பயன்படுத்தியுள்ளார்.

வழக்கில் விளக்கமறியலில் உள்ள 10 ஆவது சந்தேக நபரான நேவி சம்பத்தைச் சிறை அதிகாரிகள் நீதிமன்றில் முற்படுத்தினர்.

அவர் சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி அனுஜ பிரேமரத்னவின் ஆலோசனைக்கு அமைய கீழ்பிரிவு பெண் சட்டத்தரணி மன்றில் முற்பட்டார். பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் மூத்த சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன முற்பட்டார்.

மேலதிக விசாரணை அறிக்கையைச் சமர்ப்பித்த பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா மேலும் தெரிவித்ததாவது:

“தற்போது விளக்கமரறியலிலுள்ள முதன்மைச் சந்தேகநபர்ஹெட்டிஆராய்ச்சி முதியன்சலாகே சந்தன பிரசாத் ஹெட்டி ஆராய்ச்சியின்போலி அடையாள அட்டை மற்றும் கடவுச் சீட்டுகள் தொடர்பில் விசாரணைகள் தொடர்கின்றன. போலி அடையாள அட்டை இலக்கத்தைப் பயன்படுத்தி வங்கிக்கணக்குகள் திறக்கப்பட்டுள்ளனவா என விசா ரிக்கிறோம். 5 வங்கிகளில் இருந்து அது தொடர்பில்இன்னும் அறிக்கை கிடைக்கப் பெறவேண்டியுள்ளது.

கடத்தப்பட்ட 11 பேரில் ரஜீவ் நாகநாதன் என்ற மாணவன் தனது தாயான சரோஜினி நாகநாதனுடன் தொலைபேசி அழைப்பில் இருந்துள்ளார். அவர் பேசியவை அனைத்தையும் அந்தத் தாய் ஒரு குறிப்பேட்டில் பதிவு செய்து விசாரணைக்காக என்னிடம் தந்தார்.

அதில், குறித்த காலப்பகுதியில் கடத்தப்பட்ட தான், தற்போது கோட்டையில் உள்ள பிட்டு பம்பு எனும் கடற்படைத் தலைமையகத்தில்தடுத்து வைக்கப்பட்டிருந்தமையை வெளிப்படுத்தும் உரையாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

'நாம் இங்கு பிட்டு பம்பில், கொமாண்டர் தஸ்நாயக்கவின் கீழ் நாம் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றோம். அவரது கார் இலக்கம் எச்.பி. 8987. சம்பத் சேரும் இங்கு உள்ளார். அவரது தொலைபேசி இலக்கம் 0775713256. ஏ.பி. சேனநாயக்க அவரது இலக்கம் 0719013341. கீத்சிறியின் தனிப்பட்ட முச்சக்கர வண்டி இலக்கம் டப்ளியூ.பி. 556756. அவரது முகவரி 40/2 கிரில் வல, கடவத்தை. இங்கு ஹெட்டி ஆரச்சிஎம்மை மேற்பார்வை செய்கின்றார். பெரிய அதிகாரிகள் எல்லோரும் வந்து பார்வையிட்டு செல்கின்றனர். ' என அந்த குறிப்பில் எழுதப்பட்டுள்ளது.

இதில் பலவற்றை ஏற்கனவே விசாரணைகளில் உறுதி செய்துள்ளோம்.

பின்னர் கடற்படையின் போக்குவரத்துப் பிரிவுப் பணிப்பாளரை விசாரித்தோம். அவரின் தகவலுக்கு அமைய கடற்படை ஊடாக வழங்கப்படும் வாகனங்கள் பதியப்படும் பதிவேடுகள் 32 இருப்பது கண்டறியப்பட்டன. அதில் மகிழுந்தை தஸநாயக்கவேபயன்படுத்தியமை உறுதி செய்யப்பட்டது. எனவே கடத்திக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், தொலைபேசி தொடர்பின் போது வழங்கியுள்ள தகவல்கள் உண்மையானவை. தஸநாயக்க கடத்தல் தொடர்பில் அறிந்துள்ளார்" என்று அறிவித்தார்.

பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன, முதன்மைச் சந்தேக நபர் நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல அத்மிரல் ரவீந்திரஉதவியுள்ளார் என்று பல தகவல்கள் உள்ளன. அவர் வெளிநாடு சென்று வந்து சுதந்திரமாக நடமாடுகின்றார். அவ்ருக்கு எதிராகஎன்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வினவினார்.

இதற்குப் பதிலளித்த பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா, ரவீந்திர விஜேகுணரத்னவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நானே அவரைமுதலில் சி.ஐ.டி.க்கு அழைத்தேன். அதன் பின்னர் அவர் வெளிநாடு சென்றார். தற்போது மீள நாட்டுக்கு வந்துள்ளார். அவருக்கு எதிராகசெயற்பட பல்வேறு தடங்கல்கள் எனக்கு ஏற்படுத்தப்பட்டன. எனினும் மிக விரைவில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பேன். என்றார்.

இதன்போது நீதிவான், அவரை விசாரணைக்கு அழைத்துள்ளீரா என்று வினவ, இன்னும் இல்லை என்றார். வழக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (71)

# நேவி சம்பத் வெளிநாடு செல்ல உதவியவர் கைது

கொழும்பு, ஒக் 12
ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரைக் கடத்தி சென்று, சட்ட விரோதமாக தடுத்து வைத்து, கப்பம் பெற்றமை தொடர்பில் முதன்மைச் சந்தேக நபரான நேவி சம்பத் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி வெளிநாடு செல்ல உதவி ஒத்தாசை புரிந்ததாக கூறப்படும் சந்தேக நபர் ஒருவரை சி.ஐ.டி. நேற்றுமுன்தினம் கைது செய்தது.

நேவி சம்பத் வெளிநாட்டில் இருந்து வந்த பின்னர் மறைந்திருந்த தொம்பே பிரதேசத்தின் தென்னந்தோப்பின் உரிமையாளரான லக்சிறி அமரசிங்க என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் கடந்த செவவாய்க்கிழமை மாலை சி.ஐ.டி. தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டு நீண்ட விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரேயே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நேற்று கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன முன் முன்னி லைப்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 19ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

சந்தேக நபர் லக்சிறி, நேவி சம்பத்தை வெளிநாடு அனுப்ப திட்டமிட்டு செயற்பட்டாரா என்பது தொடர்பில் விரிவான அறிக்கை ஒன்றை மன்றுக்கு வழங்குமாறு சி.ஐ.டி.க்கு உத்தரவிட்டார். (71)

*அர்சைக் கவிழ்க்க வேண்டுமென்ற*

# கோத்தாபாயவின் கருத்துத் தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும்

*அரசியல் கட்சிகள் கோரிக்கை*



கொழும்பு, ஒக் 12
முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச அரசைக் கவிழ்க்கவேண்டும் அது எந்த வகையில் என்று எனக்கு தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளமை தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுப்பட வேண்டும் என்று அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள் ளன. ஐக்கிய தேசியக் கட்சியின்.தலைமையகமாக சிறிகொத்தாவில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹூமான் கருத்துத் தெரிவித்ததாவது:

அரசினை எவ்வாறாவது கவிழ்க்கவேண்டும் என்று பகிரங்கமாக ஒருவர் ஊடகங்களுக்கு முன்னால் வந்து கூறுகின்றார். கூறுகின்றவர் இந்த நாட்டின் உயர் பதவியில் இருந்தவர். அரசியலமைப்பு சட்டங்களை நன்கு அறிந்து கொண்டுள்ளவர். ஆகவே அதுசம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார்.

இதேவேளை முன்னிலை சோசலிச கட்சியின் துமிந்த நாகமுவ தெரிவிக்கையில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் கருத்துக்களின் பின்னால் இராணுவச் சிந்தனைகள் இருக்கின்றன. அவருக்குக் கடந்த காலத்தில் காணப்பட்ட இராணுவ அதிகாரங்கள், அதன் மூலம் ஏற்பட்டிருந்த சிந்தனைகள், அதன்மூலம் அரசியல் அதிகாரத்தினை பயன்படுத்த முடியும் என்ற நிலைப்பாட்டிலிருந்தே அவர் இத்தகைய கருத்துக்களை வெளியிடுகின்றார். கோத்தபாயவின் சிந்தகைள் எம்மை விட மகிந்த ராஜபக்சவுக்கு நன்கு தெரியும் என்றார். மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவிக்கையில், தமது வேலைகளை செய்வதற்கும், நாய்களை பராமரிப்பதற்கும் படையினரைப் பயன்படுத்தியவர்கள் தான் ராஜபக்சவினர்.

இந்த பட்டியலில் கோத்தாபாய தனக்கு படையினரின் பலம் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கின்றார். நீதிமன்றத்திற்கு வருகின்றபோது ஊடகத்துறையினர் ஒலிவாங்கிகளைப் பிடிக்கின்றனர். அதற்கு ஏதாவது கூறிவிட்டு செல்கின்றார்.

மீண்டும் வருகின்றபோது வேறொரு கதையைக் கூறுவார். தற்போது அரச தலைவர் வேட்பாளர் என்ற கனவில் இருக்கின்றார் ஆகவே இவற்றைக் கருத்திற் கொள்ள தேவையில்லை - என்றார். (31)

# சமூக வலைத்தளங்களில் 2,200 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக் 12
வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் முகப்புத்தகம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் 2 ஆயிரத்து 200 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இந்த முறைப்பாடுகளில் அதிகளவானவை போலிக் கணக்குகளை முன்னெடுப்போர் தொடர்பில் பதிவாகியுள்ளதாக கணினி அவசர ஒழுங்குபடுத்தல் பிரிவின் மூத்த பொறியியலாளர் ரொசான் சந்திர குப்த தெரிவித்தார். முகப்புத்தகம் உள்ளிட்ட சமூகவலைத்தளங்களில் அறியாத நபர்களை நண்பர்களாக்கிக்கொள்ள வேண்டாம் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் 20 ஆவது தேசிய மாநாடு

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் 20ஆவது தேசிய மாநாடு இன்று கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் முற்பகல் 9 மணிக்கு நடைபெறும். இலங்கைவாழ் அனைத்து ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறும் இன்றையதினம் வருகை தரும் ஆசிரியர்களுக்கு கடைமை விடுமுறையும் வழங்கப்படுவதோடு இலவச தொடருந்துப் பயணச்சீட்டு மற்றும் பேருந்து கட்டணமும் வழங்கப்படும் என்று இலங்கை ஆசிரியர் சேவை உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார். (159)

# தந்தை செல்வா: சிலை திறப்பு

மட்டக்களப்பு பேருந்து நிலைத்தில் அமைக்கப்பட்டு வரும் தந்தை செல்வா திருவுருவச் சிலை திறப்பு நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் தந்தை சா.ஜே.வே.செல்வநாயகத்தின் திருவுருவச் சிலை அமைப்பு நடவடிக்கைகள் மட்டக்களப்பு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிகழ்வில் தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் எதிர்க்கட்சித் தலைவருமாகிய இரா.சம்பந்தன் மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைமைகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளுராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், கட்சிக் கிளைகளின் உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## திருமணமாகி ஒரு மாதத்துக்குள் கணவனுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஒக் 12

திருமணமாகி ஒரு மாத காலத்திற்குள் கணவனுக்கு எதிராக மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் அனுராதபுரம் தம்புத்தேகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

ஒரு வருட காதலின் பின்னர் திருமண பந்தத்தில் இருவரும் இணைந்துள்ளனர். திருமணத்தின் பின்னர் இளைஞன், மனைவியை தனது வீட்டிற்கு அழைத்து சென்றுள்ளார். எனினும் திருமணத்தின் பின்னர் எந்தவொரு தொழிலுக்கும் செல்லாமல் கணவன் வீட்டில் இருந்துள்ளார். எவ்வித வருமானமும் அந்த குடும்பத்திற்கு கிடைக்கவில்லை. திருமணத்தின் முன்னர் தொழில் செய்த இளைஞன், அதன் ஊடாக கிடைத்த வருமானத்தில் திருமணத்தை செய்துள்ளார். மணமகள் திருமணத்தின் போது மணமகனுக்கு மோதிரமும் அணிவித்துள்ளார். எப்படியிருப்பினும், தொழில் இல்லாத இந்த இளைஞன் திருமணத்திற்கு அடுத்த நாளிலேயே மனைவி அணிவித்த மோதிரத்தை அடகு வைத்துள்ளார். எனினும் அதனை மீட்காமையினால் இருவருக்கும் இடையில் முரண்பாடு நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த மோதிரத்தை இளைஞன் மீட்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. கணவனின் செயற்பாடு தொடர்பில் அதிர்ச்சி அடைந்த மனைவி, பிரிந்து விட முடிவு செய்துள்ளார். இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்துள்ளார். தான் அணிவித்த மோதிரத்தை திருமணத்திற்கு அடுத்த நாளே அடகு வைத்தமையினால் தன்னை மிகவும் அவமதித்து விட்டாதாக குறித்த பெண் கணவன் மீது முறைப்பாடு செய்துள்ளார்.

### தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில்

# சிங்கள மக்களைக் கொன்று புதைத்த இடமே மன்னார் மனிதப் புதைக்குழி

### ஒன்றிணைந்த எதிரணி கூறுகிறது



**கொழும்பு, ஒக். 12**

**தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தில் சிங்கள மக்களைக் கொன்று புதைத்த இடமே மன்னார் மனிதப் புதைக்குழி. ஆனால் தமிழ் புலம் பெயர் அமைப்புக்கள், இராணுவத்தினர் தமிழ் மக்களைக் கொன்று புதைத்த புதைக்குழிபோல இதனை ஐ,நா சபையில் திரிபுபடுத்திக் காண்பிக்கிறார்கள் என்று ஒன்றிணைந்த எதிரணி தெரிவித்துள்ளது.**

பொரளையில் உள்ள என்.எம்.பெரேரா மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர், பத்ம உதயசாந்த குணசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெருமளவிலான சிறுவர்கள் உள்ளிட்ட மனித எழும்புக்கூடுகள் இதுவரையில் மன்னார் மனிதப் புதைக்குழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும், இதனை விசாரணை செய்வதற்கு தடயவியல் நிபுணர்கள் இலங்கையிலேயே இருக்கிறார்கள். ஆனால், திட்டமிட்டப்படி அந்த மனிதப் புதைக்குழி தொடர்பான மாறுப்பட்ட எண்ணகருவைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதற்காக, இந்தியாவிலிருந்து தடயவியல் நிபுணர்கள் அழைத்து வருவதற்கு மன்னார் நீதிமன்றில் அனுமதிக் கோரியுள்ளனர். வடக்கு, கிழக்கில் பௌத்த மதத்தின் புராதன சின்னங்கள் அழிக்கப்படுவதைக் கூட்டாட்சி அரசினால், தடுத்து நிறுத்த முடியாது. ஈராக், சிரியா, இஸ்ரேல் போன்ற நாடுகளில் புத்தர் சிலைகளை அழித்து அல்கொய்தா தீவிரவாத அமைப்புக்கள் செய்து வரும் அட்டூழியங்களைப் போல இலங்கையிலும் நடைபெறும் வரையில் அமைதியாக இருக்க வேண்டாம் எனவும் அவர் தெரிவித்தார்.

# விலைச்சூத்திரம் நாடாளுமன்றில் ஏன் சமர்ப்பிக்கப்படவில்லை?

### கேள்வி எழுப்பினார் அநுரகுமார திஸாநாயக்க

கொழும்பு, ஒக். 12

இலங்கையில் எரிபொருள்விலைகளை வரையறை செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள விலைச்சூத்திரம் இந்த சபைக்கு ஏன் சமர்ப்பிக்கப்படவில்லை? இந்த விலைச்சூத்திரம் தொடர்பில் அமைச்சரவையில் அனுமதி பெறப்பட்டுள்ளதா? அதற்கான அனுமதி எப்போது வழங்கப்பட்டது? என எதிர்க்கட்சியின் தலைமை கொரடாவான அநுரகுமரா திஸாநயக்க கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்று நேற்றுமுன்தினம் மதியம் ஒரு மணிக்குக் கூடியது. இதன்போது அநுரகுமரா திஸாநயக்க, தலைமை அமைச்சரிடத்திலான வாய்மூலமான கேள்வி நேரத்திலேயே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, உலக சந்தையில் ஏற்படும் மசகு எண்ணெய் மாற்றத்துக்கு அமைவாக எமது நாட்டின் எரிபொருள்களின்விலையைத்தீர்மானிப்பதற்காக விலைச்சூத்திரமும் அதிகாரிகள் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் கூட இவ்வாறு தான் அதிகரிப்புக்கள் நிகழ்ந்து வருகின்றன என்றார்.

இதன்போது குறுக்கீடு செய்த அநுரகுமார திஸநாயக்க, நான் உங்களிடத்தில் நேரடியாகக் கேள்வி எழுப்பியுள்ளேன். அதற்குப் பதிலளியுங்கள். ஐரோப்பியாவில் இந்தியாவில் விலை மாறுகின்றது என்ற கதைகளை எனக்கு கூறவேண்டாம். எமது நாட்டைப் பற்றிக் கதையுங்கள் என்றார்.

அதன்போது, தலைமை அமைச்சர் இந்த ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி அமைச்சரவையில் எரிபொருளை மீளாய்வு செய்வதற்கான சூத்திரம் பயன்படுத்துவது தொடர்பில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன் பின்னர் குழுவை அமைப்பதற்கான அனுமதி ஜூலையில் பெறப்பட்டுள்ளது. தற்போது உலக சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 80டொலர்களாகக் காணப்படுகின்றது.

இந்த விலை மாற்றமடையாது என்று கூறமுடியாது. நவம்பர் வருகின்ற போது இந்தப் பிரச்சினை மேலும் அதிகரிக்கலாம்.

அமெரிக்காவானது ஈரான் மீது பொருளாதார தடைகளை விதித்துள்ள நிலையில் அதனால் ஏற்படும் குறைவுக்கு ஏற்றவகையில் எரிபொருளை உற்பத்தி செய்ய முடியுமா? என்பதில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. சிறப்பாக நவம்பர் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரையில் குளிர்காலம் என்பதால் எரிபொருள் பாவனை அதிரித்தே காணப்படும்.

அதனடிப்படையில் உலக சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 90 டொலர்களை எட்டும் என்றும் சிலர் கணிப்பீடு செய்துள்ளார்கள். இதுவொருவிடயமாக இருக்கையில் எரிபொருள் அதிகரிப்பதற்கான இரண்டாவது காரணம் டொலரின் பெறுமதி அதிரித்துச் செல்வதாகும் என்றார்.

தொடர்ந்து அநுரகுமரா திஸாநாயக்க எம்.பி, நான் இந்த சபையில் எரிபொருள் விலைச்சூத்திரத்தினை சமர்ப்பிக்குமாறு இரண்டு தடவைகள் நிதி அமைச்சரிடத்தில் கோரியிருந்தேன். அவர் அதனைச் சமர்ப்பிக்கவில்லை. ஊடகவியலாளர் சந்திப்பில் தனக்கே அந்தச் சூத்திரம் சரியாகத் தெரியாது என்று கூறுகின்றார்.

தகவலறியும் சட்டத்தின் மூலம் விலைச்சூத்திரத்தைக் கோரிய போதும் அதனை வழங்குவதற்கு முடியாது என ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நீங்கள் ஏன் சூத்தி ரத்தை நாடாமன்றத்துக்குச் சமர்பிக்க முடியாது இருக்கின்றீர்கள்.

சூத்திரம் என்றால் ஏதாவது ஒரு பெறுமானத்தினைக் கணிக்கும் முறைமையாக அல்லவா இருக்கவேண்டும். அதனை மக்கள் மத்தியில் வெளிப்படுத்துவதற்கு தயங்குவது ஏன்? என்றார்.

தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்க, மீண்டும் நீங்கள் என்னை திட்டுவீர்களோ தெரியாது. சீனாவிலும், இந்தியாவிலும் எரிபொருளுக்கான கேள்வி நிறையவே உள்ளது. இதனை அமெரிக்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தப்பார்க்கின்றது. இந்த போட்டிச்சூழல் விலை அதிகரிப்புக்கு காரணமாக இருக்கின்றது - என்றார்.

அநுரகுமார எம்பி, நீங்கள் எதனையோ கூறுகின்றீர்கள், இலங்கை துறைமுகத்தில் ஒருலீற்றர் பெற்றோல் இறக்குமதி செய்யும்போது அதன்விலை 81ரூபாவாகும். அதற்கு வரியாக 68.2ரூபா அறவிடப்படுகின்றது. ஒருலீற்றா டீசல் இறக்குமதி செய்யப்படும்போது 31.58 ருபா வரி அறவிடப்படுகின்றது. டொலரின் விலை அதிகரிக்கின்றது , உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரிக்கின்றது என்றால் வரி அறவிடுவதை மாற்றியமைப்பதற்கான வழிகள் உள்ளன என்றார்

தலைமை அமைச்சர் ரணில், உங்களுக்கு விலைச்சூத்திரம் நன்றாகவே தெரிகின்றது. பின்னர் ஏன் என்னை கேட்கின்றீர்கள்? என்றார். (31)

## எரிபொருள் விலை தொடர்பில் பசிலின் கருத்துச் சரியானதே!

### கூறுகிறார் மங்கள சமரவீர



கொழும்பு, ஒக். 12

மசகு எண்ணெய் பீப்பாயின் விலை அதிகரித்துள்ளது. அதனை அரசு வரையறை செய்யமுடியாது. உலக சந்தையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது' என்று பசில் ராஜபக்ச கூறினார். அதுதான் உண்மையாகவும் உள்ளது என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இம்மாதத்துக்கான மீளாய்வு நேற்றுமுன்தினம் நிதி அமைச்சில் நடைபெற்றது. இதனடிப்படையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு தொடக்கம் எரிபொருள்களுக்கான புதிய விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே நிதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெற்றோல் விலை அதிரிப்பு சம்பந்தமாக பசில் ராஜபக்ச சில கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார். அவர் எதிர்க்கட்சியில் இருந்தாலும் சிறந்தவொரு கெட்டித்தனமான அரசியல்வாதியாவார். எந்த அரசில் அவர் இருந்தாலும் அந்த அரசுக்குச் சக்தியளிக்கக் கூடியவர். அதனை நான் பகிரங்கமாகவே கூறுகின்றேன். அவர் இந்த விடயம் சம்பந்தமாக என்ன கூறுகின்றார் என்பதை நான் உங்களுக்குக்குறிப்பிடுகின்றேன். "எரிபொருள்கள் சம்பந்தமான நெருக்கடி சதாரணமாக ஏற்பட்டது என்று நான் கூறவரவில்லை. மசகு எண்ணெய் பீப்பாயின் விலை அதிகரித்துள்ளது. அதனை அரசு வரையறை செய்யமுடியாது. உலக சந்தையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது" என்று பசில் ராஜபக்ச கூறியது அதுதான் உண்மையாக உள்ளது.

அதனை நிருவகிப்பதற்காகவே நாம் விலைச்சூத்திரத்தை அறிமுகம் செய்தோம். துரதிஸ்டவசமாக நாம்விலைச்சூத்திரத்தினை அறிமுகம் செய்த நாளிலிருந்து எரிபொருள்களின் விலை அதிகரித்தே செல்கின்றது. கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் பெப்ரவரி மாதம் வரையில் எரிபொருளின் விலை அதிகரிப்பதற்கான சாத்தியமே உள்ளது. அதற்குப் பின்னரே குறைவடைவதற்கான வாய்ப்பு உள்ளது - என்றார்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விழிப்படைவோம்!

இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் 2 ஆயிரத்து 500 பெண்கள் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர் என்று அதிர்ச்சிகரமான தகவலை வெளிப்படுத்தியுள்ளார் சுகாதாரப் பிரதி அமைச்சர் பைசல் காசீம். இந்த நோயைத் தொடக்கத்திலேயே கண்டறிந்தால் அதைக் குணப்படுத்திவிட முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ஐப்பசி மாதத்தை மார்பகப் புற்றுநோய் மாதமாகவும் அரசு அறிவித்திருக்கின்றது.

உலகெங்கும் பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களில், 10.4 சதவீதமானது மார்பகப் புற்றுநோயே! இது தோல் மேல் ஏற்படாத புற்றுநோயில் இரண்டாவது இடத்தையும் (நுரையீரல் புற்றுநோய்க்கு அடுத்ததாக) புற்றுநோயால் ஏற்படும் இறப்புகளுக்கு ஐந்தாவது பெரிய காரணமாகவும் இருக்கிறது. 2004ஆம் ஆண்டில், உலகெங்கும் 5இலட்சத்து 19 ஆயிரம் இறப்புகள் இந்த நோயால் சம்பவித்திருக்கின்றன. மார்பகப் புற்றுநோயானது, ஆண்களை விட 100 மடங்கு அதிகமாகப் பெண்களுக்கு வருவதற்கான வாய்ப்புகளே உள்ளன.

மார்பகப் புற்றுநோய்க்கு எதிரான உலகளாவிய போராட்டம் ஒரு தொடர்போராட்டமாகவே இருந்து வருகின்றது. என்னதான் மருத்துவம் முன்னேறி இருந்தாலும் இன்றும்கூடப் பெண்களின் உயிரைப் பறிக்கும் ஒரு முக்கிய கொலைகார நோயாக மார்பகப் புற்றுநோய் காணப்படுகின்றது. வட அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா போன்ற தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளில் இந்த நோயால் பாதிக்கப்படுபவர்கள் அதிகம். முன்பெல்லாம் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் அரிதாகவே தென்பட்ட இந்த நோய் இப்போது அநேகரைத்தாக்கியிருக்கிறது. அதோடு, இறப்பு விகிதமும் அதிகரித்திருக்கிறது. ஏன்? தொடக்க நிலையில் இந்த நோயை அலட்சியம் செய்கிறார்கள். முற்றிப் போனதற்குப் பின்னர் தான் மருத்துவர்களை நாடிப் போகிறார்கள் என்கிற குற்றச்சாட்டுப் பரவலாக உள்ளது.

வயதான பெண்களைத்தான் இந்த நோய் அதிகம் தாக்குகிறது. இந்த நோயால் பாதிக்கப்பட்ட கிட்டத்தட்ட 80 சதவீத பெண்கள் 50 வயதுக்கும் மேற்பட்டவர்கள். ஆனால், ஒரு சந்தோஷமான குறிப்பு என்னவென்றால் இந்த நோயைக் குணப்படுத்த முடியும். சொல்லப்போனால், இந்த நோய் தாக்கிய பெண்களில் 97 சதவீதம் பேர் ஐந்து வருடங்களுக்குப் பிறகும் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். ஆரம்பக் கட்டத்திலேயே நோயைக் கண்டறிந்ததும், உடலின் மற்றப் பாகங்களுக்குப் பரவுவதற்கு முன்பே சிகிச்சை எடுத்தும்கொண்டால் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

மார்பகப் புற்றுநோய் எப்படி வருகிறது? மார்பகத்திலுள்ள ஒரு கலம் (செல்) மட்டும் ஜெட் வேகத்தில் பிரிந்து வளரத் தொடங்கும். பின்பு அது படிப்படியாக ஒரு கட்டியாக மாறும். அந்தக் கலங்கள் எப்போது மற்றத் திசுக்களை ஆக்கிரமிக்கத் தொடங்குகின்றனவோ அப்போதுதான் அது புற்றுநோய்க் கட்டியாக மாறுகிறது. சில கட்டிகள் வேகமாக வளரும். சில கட்டிகள், பத்து வருடங்கள் ஆனால்கூட வெளியே தெரியாது என்கின்றன மருத்துவ வட்டாரங்கள்.


கட்டியிலிருந்த புற்றுநோய்க்கலங்கள் குருதி ஓட்டத்தின் மூலமாகவோ, நிணநீர் மண்டலம் வழியாகவோ மற்ற இடங்களுக்கும் பரவி, மறுபடியும் வளரத் தொடங்கலாம். அது நம்முடைய மூளை, ஈரல், எலும்பு மஜ்ஜை அல்லது நுரையீரல் போன்ற முக்கிய உறுப்புகளுக்கும் திசுக்களுக்கும் பரவும்போதுதான் (Metastasis) உயிர்க்கொல்லி நோயாக மாறுகிறது.

தொடக்க நிலையிலேயே இதைக் கண்டறிந்துவிட்டால் குணப்படுத்துவது எளிது என்கின்றன மருத்துவ வட்டாரங்கள். இலங்கையில் இந்த நோய் முற்றிய நிலையிலேயே பலருக்கும் கண்டறியப்படுகின்றது. மார்பகங்கள் குறித்துச் சமூகத்தில் காணப்படும் பண்பாட்டுக் கருத்துருவாக்கங்களும் நோயைக் கட்டுப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்துகின்ற முக்கிய காரணங்கள். இந்த நிலைமை மாற்றப்படவேண்டும். பெருமெடுப்பில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதன் மூலம் மார்பகப் புற்றுநோயைத் தடுப்பதில் கவனம் செலுத்துவோம். உயிர்களைக் காவு கொடுப்பதைத் தவிர்ப்போம்!



# அரசியல்வாதிகள் மக்களையும் ஒருகணம் சிந்தித்துப் பார்த்தால் என்ன?

இந்துமதி



நாட்டின் அரசியல் நிலவரமும், அரசியல்வாதிகளின் செயற்பாடுகளும் திருப்தி அளிக்கக்கூடியதாகக் காணப்படவில்லை. அரசியல்வாதிகள் மக்கள் தொடர்பாகச் சிந்திப்பதை விடுத்துத் தமது சுய இலாபம் கருதிச் செயற்படுவதால் மக்கள் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எந்த அரசாக இருந்தாலும் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படும்போதுதான் நாட்டில் அமைதியைக் காண முடியும். ஆனால் இந்த நாட்டைப் பொறுத்தவரையில் மக்களின் நலன்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படாமல் அரசியல் போட்டிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. அடுத்த போயா தினத்துக்கு முன்னர் அரசு கவிழ்ந்துவிடுமென மகிந்த ராஜபக்ச ஆரூடம் கூறுகின்றார். எந்த வகையிலாவது ஆட்சிக்கு வருவதுதான் தமது தரப்பின் மீதான குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுபடுவதற்கு ஒரே வழியெனஅவர் திடமாக நம்புகிறார். நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்குத் தாமே பொறுப்பு என்பதை அவர் மறந்துவிட்டமை வேடிக்கையானது.

### மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளே நாட்டின் இன்றைய நிலைக்குக் காரணம்

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பெரியளவிலான ஊழல் மோசடிகளும், அளவுக்கதிகமாகப் பெற்ற கடன்களுமே இன்று மீளமுடியாத படுகுழிக்குள் நாட்டைத் தள்ளிவிட்டுள்ளன. இவற்றுக்கெல்லாம் மகிந்தவே பொறுப்புக்கூற வேண்டும். ஆனால் அவர் இதையெல்லாம் மறந்து அரசின் மீது குறை கூறிக் கொண்டிருக்கிறார்.

சிலவேளை அவர் ஆட்சிக்கு வந்தாலும் நாட்டின் தற்போதைய நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படப் போவதில்லை. ஏனென்றால் அந்த அளவுக்கு மோசமான நிலையில் நாடு உள்ளது.

தற்போதைய ஆட்சியாளர்கள்மீது மக்கள் நம்பிக்கை இழந்த நிலையில் காணப்படுகின்றனர். தினமும் ஏதாவதொரு பொருளின் விலையை அதிகரிப்பதைத் தவிர வேறு எதையும் அரசால் சாதிக்க முடியவில்லை. மகிந்த தரப்பினரின் சவால்களுக்கு முகம்கொடுக்கக்கூடிய திராணியையும் அவர்களிடம் காணமுடியவில்லை. கூட்டு அரசு இந்த விடயங்களில் பலமானதாக இருந்திருந்தால் மகிந்த தரப்பினர் இந்த அளவுக்குத் தலையெடுத்திருக்க மாட்டார்கள்.



தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் பூதாகரமான கட்டத்தை எட்டி நிற்கின்றது. அவர்களின் விடுதலை தொடர்பாக இதுவரையில் சாதகமான சமிக்ஞை எதுவும் தெரியவில்லை. அரசு தொடர்ந்தும் அசமந்தப் போக்கையே கடைப்பிடித்து வருவதால் இந்த விவகாரத்தில் இதுவரையில் முடிவு எதுவுமே எட்டப்படவில்லை. இந்த அரசியல் கைதிகள் நீண்ட காலமாக விசாரணை எதுவுமின்றிச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இதுவொரு ஏற்றுக்கொள்ள முடியாத அநீதியான செயலாகும். ஆனால் உணரவேண்டியவர்கள் இதை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

போரால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்கள் இன்னமும் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கணப்படாத நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். போரின்போது தமது வீடுகளை இழந்த மக்களில் பெரும்பாலனவர்கள் நிர்க்கதியான நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கான வீட்டுத்திட்டங்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக இழுபறியான நிலையில் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் இந்த மக்களுக்குப் பொருத்து வீடுகள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. இதற்குக் கடுமையான எதிர்ப்புக் கிளம்பியதால் அந்தத் திட்டம் பின்னர் கைவிடப்பட்டது.

### பொருத்து வீடு பொருத்தமற்றது

வடபகுதி குளிரான பிரதேசத்தில் அமைந்திருக்கவில்லை. கடுமையான வெப்பமும், வறட்சியும் நிலவுகின்ற பிரதேசம் இது என்பதைக்கூட வீட்டுத் திட்டத்துக்குப் பொறுப்பானவர்கள் புரிந்துகொள்ளாதது ஏற்கத்தக்கதல்ல. கழிவு இரும்புகளால் உருவாக்கப்பட்ட பொருத்து வீடுகளில் வடபகுதி மக்களால் எவ்வாறு வாழ முடியும்? தற்போது பொருத்து வீடுகளுக்குப் பதிலாகக் கல் வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிகின்றது. இதற்குப் பொறுப்பாகத் தேசிய சுகவாழ்வு நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் நியமிக்கப்பட்டுள்ளார். ஆனால் அவரது நியம னத்துக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. வீடமைப்புக்குப் பொறுப்பான அமைச்சரான சஜித் பிரேமதாசவிடம் இந்தப் பணியை ஒப்படைக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஆத்திர முற்ற அமைச்சர் மனோகணேசன் யாழ்ப்பாணத்தில் வைத்து கடுமையான வார்த்தைப் பயன்பாட்டில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற அரசியல் பிரச்சினை போததென்று தற்போது அமைச்சர் மனோகணேசனும் குழம்பிய குட்டையைக் கலக்க முற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இன்றுள்ள நிலையில் மக்கள் அரசியல்வாதிகளின் சவால்களை விரும்புவதாகத் தெரியவில்லை. தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென்றே அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் நாட்டின் அரசியல் நிலவரம் அதற்குச் சாதகமாக அமையாததோடு அரசியல்வாதிகளும் இதைப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

# 'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்'

## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி-45

தேவநாயகம் தேவானந்த்



கருணாநிதி புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருக்கவில்லை என்பதை வரலாற்றுச் சம்பவங்கள் பல சுட்டிக்காட்டுகின்றன. தமிழ்ச்செல்வனுக்காக அவர் எழுதிய கவிதை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் வீரப்பமொளலியின் கருத்து கருணாநிதி புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இல்லை என்பதைத் தெளிவாக்குகின்றது. ஆனால், இறுதிப்போர்க் காலத்தில் தமிழகத்தில் வீசிய ஈழஆதரவு அலைகாரணமாகக் கருணாநிதி, தமிழ்செல்வனுக்காக இரங்கல் பாவை எழுதியிருக்கலாம் என்று கருதமுடியும். இருந்தாலும் அவர் ஏழுதிய இரங்கற் கவிதை சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

**ஜி.கே.வாசன்-வீரமணி ஆகியோரது கருத்துக்கள்**

தமிழ்நாட்டு காங்கிரஸ் கட்சியின் தலைவராக அப்போது இருந்த ஜி.கே வாசன், கருணாநிதி எழுதிய இரங்கல் பா குறித்துக் கருத்துத் தெரிவித்தபோது, "எங்கள் தலைவர் ராஜிவ்காந்தியைக் கொலை செய்தவர்களை நாங்கள் மறக்கவும் மாட்டோம், மன்னிக்கவும் மாட்டோம்." என்று குறிப்பிட்டிருந்தார். அதேவேளை ஜெயலலிதாவைக் கண்டித்துக் கருணாநிதிக்கு ஆதரவு தெரிவித்துத் திராவிடக் கழகத்தைச் சார்ந்த வீரமணி கருத்துத் தெரிவித்திருந்தார்,

"ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமைப் போராட்டம் ஜீவமரணப் போராட்டமாக இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், அவர்களின் முக்கிய தலைவர்களில் ஒருவரான தமிழ்ச்செல்வன் மற்றும் அவருடைய முக்கிய தளபதிகள் ஐவரும் இலங்கை இராணுவத்தால் வான் வழித்தாக்குதல் மூலம் கொல்லப்பட்டதைக் கண்டு உலகமே கண்ணீர் வடித்துக் கதறிப் புலம்பித் தனது மனிதாபிமானத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது." என்று குறிப்பிட்டு ஜெயலலிதாவின் நிலைப்பாட்டைக் கண்டித்திருந்தார்.

**ஜெயலலிதா தமிழரல்லாத காரணத்தால்தான் கண்டிக்கிறார்**

"முதலமைச்சர் கருணாநிதி தமிழ்ச் செல்வனுக்காக விடுத்த இரங்கலில் கண்ணீரைக் கவிதைப் பூக்களாக்கிச் சோகக் கடலில் உள்ள தமிழினத்தின் ஒட்டு மொத்த உணர்வைத் தெரிவித்தார். அவர் மட்டும் அல்ல இதயம் படைத்த அத்தனை பேரும் இரங்கலைத் தெரிவித்துள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா, இதற்காக முதல்வரைக் கண்டித்து ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார். புலிகளுக்கும் இவருக்கும் இரகசியத் தொடர்பு இருக்கின்றது என்றெல்லாம் பிதற்றியுள்ளார். மனிதநேயம் படைத்த அனைவருடைய ஒட்டு மொத்தக் கண்டனத்துக்குரியதாக ஜெயலலிதாவின் அறிக்கை அமைந்துள்ளது." என்று குறிப்பிட்டு மேலும், கருணாநிதி ஒரு தமிழன் என்ற அடிப்படையில் தமிழ்செல்வனுக்கு இரங்கல் தெரிவித்தது தகும் என்றும் ஜெயலலிதா தமிழரல்லாத காரணத்தால் தான் தமிழ்செல்வனுக்கு இரங்கல் தெரிவித்ததைக் கண்டிக்கிறார் என்றும் வீரமணி குறிப்பிட்டிருந்தார்.



**ஜெயலலிதாவின் மனமும் வேறு இனமும் வேறு**

"கருணாநிதி ஒரு பச்சைத் தமிழர் அவர்தம் உணர்வுகளும் குருதியோட்டமும் தமிழ் இனத்தின் இயல்பான சொத்துக்கள். மனிதநேயத்தோடு மட்டுமல்ல, தன் இனத்து மாவீரன் ஒருவன் இப்படி அநியாயமாகக் குருத்தோலையாக வளர்ந்த நிலையில் கொல்லப்பட்டு விட்டானே என்று எண்ணிக் கண்ணீர் சிந்துவதற்குக் கூட அவருக்கு உரிமை இல்லையா? தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்பதற்கொப்ப மனத்தாலும், இனத்தாலும் ஒன்றுபட்டவர் என்பதால் உடனடியாக இப்படி எழுதித் தனது துயரத்தை வெளியே கொட்டி ஆறுதலைத் தேடினார். ஆனால் ஜெயலலிதாவுக்கு மனமும் வேறு அவர்தம் இனமும் வேறு. பரம்பரைப்போரை இதிலும்கூடத் தொடர்ந்து தனது அற்பத்தனத்தைக் காட்டியுள்ளார் ஜெயலலிதா. எதிரியாக இருந்தாலும்கூட, இறந்தவர் என்றால் அனுதாபம் தெரிவிப்பது சராசரி மனிதாபிமானம். இதுகூட இல்லாத ஜெயலலிதா தான் தமிழர்களின் பகைவர் என்பதைக்காட்டியுள்ளார்" என்று வீரமணி மேலும் சுட்டிக்காட்யிருந்தார்.

**வை.கோ. - ஜெயலலிதா கூட்டணிக்குக் கண்டனம்**

அதேவேளை புலிகளின் ஆதரவாளராகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் வை.கோ. ஜெயலலிதாவோடு கொண்டுள்ள கூட்டணியையும் அப்போது வீரமணி கண்டித்திருந்தார். "தமிழ்செல்வனுக்கு இரங்கல் தெரிவித்தமைக்காகக் கருணாநிதிக்குப் புலிகளுடன் தொடர்பு என்று அறிக்கைவிடும் ஜெயலலிதாவுடன் கூட்டணியில் இருக்கும் ம.தி.மு.காவின் பொதுச் செயலாளர் வைகோவின் நிலைப்பாடு பற்றிக் கவலைப்பட்டு அறிக்கை கொடுப்பாரா? அவரும் தானே இரங்கல் செய்தி விடுத்தார். அவரின் புலிகள் ஆதரவுக்காகத் தானே 'பொடா' சட்டத்தை ஜெயலலிதா பயன்படுத்தினார். சேரக் கூடாத இனத்தோடு சேர்ந்த வைகோ, இதற்குப் பிறகும் கூட ஏதோ ஒரு சில சீட்டுக்களுக்காக இப்படிப் பட்டவர்களோடு கூட்டணியில் தொடர்வது எந்த வகையில் நியாயம்? உணர்வுள்ள ஒவ்வொரு தமிழனின் உரிமையான கேள்வி இது. ஆத்திரப்படாமல் வைகோ யோசிக்க வேண்டும்" என்று வீரமணி ஆத்திரப்பட்டிருந்தார்.

இந்தப்பின்னணியை அடிப்படையில் கொண்டு பார்க்கும்போது தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்கள் தமது நலன் சார்ந்து தான் ஈழ ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்கள். என்பது புலனாகிறது. இதனால் தான் இறுதிப் போர்க் காலத்தில் அரசியல்வாதிகளைத் தவிர்த்து போராட்டங்கள் தமிழகத்தில் முன்னெடுக்கப்பட்டன. இதில் முத்துக் குமாரின் தீக்குளிப்பு முக்கிய திருப்பமாக அமைந்தது.

(தொடரும்)

**ஆசிரியருக்கான கடிதம்**

# மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய நிலை உருவாக்கப்பட வேண்டும்

சுன்னாகம் பிரதேசத்தில் அண்மைய நாள்களாக இடம்பெற்று வருகின்ற வேண்டத்தாகாத சம்பவங்களால் மக்கள் அச்சத்துடன் பொழுதைக் கழிக்கின்றனர்.

மல்லாகத்தில் உள்ள தமது வீட்டிலிருந்து சுன்னாகம் பகுதியில் அமைந்துள்ள தமது வெதுப்பகத்துக்கு அதிகாலை நான்கு மணியவில் வந்த வெதுப்பக உரிமையாளர் இடைவழியில் மறிக்கப்பட்டு அவரிடமிருந்த பணமும், கைபேசியும் பறித்தொடுக்கப்பட்டுள்ளன.

மீன்களைக் கொள்வனவு செய்வதற்காகச் சென்ற மீன் வியாபாரி ஒருவர் தம்மிடமிருந்த பணத்தையும் கைபேசியையும் இதேபோன்று பறிகொடுத்துள்ளார். மரக்கறி வியாபாரம் செய்யும் இருவருக்கும் இந்த அவலநிலை நேரிட்டுள்ளது. முகங்களைத் துணிகளால் மூடி மறைத்தவாறு கத்திகளுடன் காணப்பட்ட சிலரே இந்தக் கொள்ளைகளைப் புரிந்துள்ளனர்.

மேலும் பட்டப்பகல் வேளையில் வீதியில் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரினது சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அறுத்தெடுத்துச் சென்றுள்ளனர். அந்தப்பெண் அவலக் குரல் எழுப்பியபோதிலும் அருகில் நின்று சம்பவத்தைப் பார்த்துக்கொண்டிருந்த எவருமே அவருக்கு உதவ முன்வரவில்லை.

தமக்குப் பின்னர் தீங்கு ஏற்பட்டு விடுமோ? என்ற அச்சமே இதற்கான காரணமாகும்.

இத்தகைய சம்பவங்களால் இந்தப்பகுதி மக்கள் வெறுப்பும், பயமும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இந்த நிலை தொடருமேயானால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகவே சீர்குலைந்துவிடும்.

பொலிஸார் தமது கண்காணிப்புப் பணிகளை அதிகரிப்பதன் மூலமாகவே இந்தச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியும். மக்கள் தமது பாதுகாப்புக்குப் பொலிஸாரையே நம்பியுள்ளனர். அவர்களின் நம்பிக்கையைப் பாதுகாக்க வேண்டியது பொலிஸாரின் முக்கிய பணியாகும்.

புலிகள் இங்கிருந்தபோது தாம் அச்சமின்றி வாழ்ந்ததாகவும், தற்போது அந்தநிலை காணப்படவில்லையெனவும் மக்கள் முணுமுணுப்பதை அவதானிக்க முடிகிறது. இதற்குத் தகுந்த பரிகாரம் வேண்டும்.

*பா.சத்தியசீலன்,*
*சுன்னாகம்.*



## தேர்தல் தோல்வியை எதிர்த்து மாலைதீவின் முன்னாள் அதிபர் வழக்கு

மாலி.ஒக்.12
மாலைதீவின் புதிய அதிபராகத் தெரிவு செய்யபப்பட்டிருக்கிறார் முஹம்மது சோலி. அவருடைய தேர்தல் வெற்றிக்கு எதிராக முன்னாள் அதிபர் அப்துல்லா தனது கட்சி சார்பில் நீதிமன்றில் நேற்று வழக்குத் தொடர்ந்திருக்கிறார். இலங்கைக்குத் தெற்காக இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள மாலைதீவில் கடந்த செப்டம்பர் மாதம் 23ஆம் திகதி அதிபர் பதவிக்கான தேர்தல் இடம்பெற்றிருந்தது. மாலைதீவு முன்னேற்றக் கட்சி சார்பில் போட்டியிட்ட தற்போதைய அதிபர் அப்துல்லா யாமீன், எதிர்க் கட்சியான மாலை தீவு ஜனநாயகக் கட்சி வேட்பாளர் இப்ராகிம் முகமது சோலியிடம் தோல்வியடைந்தார். 58.4 சதவீதம் வாக்குகளைப் பெற்ற முஹம்மது சோலி வெற்றி பெற்றதாக அந்த நாட்டுத் தேர்தல் திணைக்களம் அறிவித்திருந்தது. இதனால், மாலைதீவின் புதிய அதிபராக இப்ராகிம் முகமது சோலி நவம்பர் மாதம் 17ஆம் திகதியன்று பதவியேற்க உள்ளார். இந்த நிலையில், புதிய அதிபராகப் பொறுப்பேற்கவுள்ள முஹம்மது சோலியின் தேர்தல் வெற்றிக்கு எதிராக முன்னாள் அதிபர் வழக்குத் தொடர்ந்திருக்கிறார். ஆயிரத்து 192 குட்டித்தீவுகளைக் கொண்ட மாலைதீவில் அண்மைக் காலமாக அரசியல் ஸ்திரமற்ற சூழல் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவைப் புரட்டிப் போட்ட புயல்; 13 பேர் சாவு

'மைக்கல்' எனப் பெயரிடப்பட்ட புயல் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தைத் தாக்கியதில் இதுவரை 13பேர் சாவடைந்துள்ளனர். புதன்கிழமை 125கிலோமீற்றர் வேகத்தில் மைக்கல் புயல் புளோரிடாவின் வடமேற்குப் பகுதிகளை தாக்கியிருந்தது. கன மழையும் பெய்திருந்தது.
அதன் காரணமாகப் பல இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டன. பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. இந்தப் புயல் காரணமாக மின்சாரக் கம்பிகள் பல இடங்களில் அறுத்து விழுந்ததால் 5இலட்சத்துக்கும் அதிகமான மக்கள், மின்சாரம் இல்லாத சுழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மைக்கேல் புயல் சக்தி வாய்ந்த புயலாக இருப்பதால் அது புளோரிடா வைத் தொடர்ந்து ஜார்ஜியா, அலபாமா ஆகிய மாகாணங்களை நோக்கி நகர்ந்து அங்கும் பலத்த சேதத்தை ஏற்படுத்தி வருகின்றது. மீட்புப் பணிகள் விரைந்து இடம்பெற்று வருகின்றன. மைக்கேல் புயலுக்கு இதுவரை 13பேர் சாவடைந்ததாகவும் சுமார் 3இலட்சத்துக்கு அதிகமானவர்கள் புளோரிடாவிலிருந்து வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
அமெரிக்காவின் வட மேற்கு மாகாணமான புளோரிடாவில் இதுவரை வீசிய சூறாவளிகளில் மிகச் சக்தி வாய்ந்ததாகக் கூறப்படும் மைக்கல் சூறாவளியாலும் கன மழையாலும் அந்த மாகாணத்தில் உள்ள பல நகரங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.



# பங்களாதேஷ் நீதிமன்...

## முன்னாள் தலைமை அ...
## 19 பேருக்கு ஆயுட் சிறை...

டாக்கா.ஒக்.12
பங்களாதேஷில் 2004ஆம் ஆண்டு இடம்பெற்றக் குண்டுத் தாக்குதல் குறித்த வழக்கில் முன்னால் தலைமை அமைச்சர் கலிதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் உள்ளிட்ட 19பேருக்கு ஆயுள் சிறையும், இன்னமும் 19 பேருக்கு சாவுத் தண்டனையும் விதித்து டாக்கா நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்திருக்கிறது.




2004ஆம் ஆண்டு ஒகஸ்ட் 21ஆம் திகதி 'அவாமி லீக்' கட்சி சார்பில் பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் பேரணி ஒன்று இடம்பெற்றிருந்தது. அந்தப் பேரணியில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடிக்க வைக்கப் பட்டிருந்தது. இந்தக் குண்டுவெடிப்பில் 24பேர் கொல்லப்பட்டிருந்தனர், 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர். இதன்போது பங்களாதேஷின் தற்போதைய தலைமை அமைச்சர் ஷேக் ஹசினாவும் காயமடைந்திருந்தார். அதன் காரணமாக அவருக்கு ஒரு பக்கம் காது கேட்கும் திறன் பாதிக்கப்பட்டு விட்டது. இந்த நிலையில், டாக்காவில் உள்ள விரைவு நீதிமன்றத்தில் இந்த வழக்கின் விசாரணை இடம்பெற்று வந்தது. இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியாக முன்னாள் தலைமை அமைச்சர் கலிதா

## இந்தோனேசியாவில் மீண்டும் நிலநடுக்கம்

ஜகார்த்தா.ஒக்.12
இயற்கைப் பேரழிவுகளால் கடும் பாதிப்புகளைச் சந்தித்துள்ள இந்தோனேஷியாவில் நேற்று மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இந்தோனேசியாவின் சுலவேசித் தீவைச் சமீபத்தில் நிலநடுக்கம் தாக்கியது. ரிக்டர் அளவில் 7.5 ஆகப் பதிவான அந்த நிலநடுக்கத்தால், 170 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டு பலு, டோங்கலா பகுதிகளைச் சுனாமி தாக்கியிருந்தது. இதனால், 2ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சாவடைந்திருந்தனர்.
பல கோடி மதிப்பிலான சேதம் ஏற்பட்டது. இயற்கையின் இந்தக் கோரத் தாண்டவத்தில் இருந்து அந்த நாடு மீண்டு வருவதற்குள் அங்கு மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ஜவா மற்றும் பாலித் தீவுகளில் நேற்று ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6ஆகப் பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தகவல் வெளியிட்டுள்ளது. எனினும் சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை

## பத்திரிகையா...
## சவூதிக்கு எதி...




# மன்றம் அதிரடித் தீர்ப்பு

## அமைச்சரின் மகன் உட்பட
## சிறை, 19 பேருக்குத் தூக்கு

குதல்
மகன்
ருக்கு
கிறது.

ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான், அமைச்சர்கள் 4பேர், புலனாய்வுத் துறை அதிகாரிகள் 2பேர் என எல்லாமுமாக 49 பேர் உள்ளடங்கியிருந்தனர். இதில் குற்றம்சாட்டப்பட்ட 49 குற்றவாளிகளும் நீதி மன்றத்தில் நேற்று முன்னிலையாகி இருந்தனர். இதிலேயே முன்னாள் தலைமை அமைச்சர் கலிதா ஜியாவின் மகன் தாரீக் ரஹ்மான் உள்பட 19 பேருக்கு வாழ்நாள்







றசினா
க அவ
கப்பட்டு
விரைவு
ணை
குற்ற
கலிதா

சிறை தண்டனையும், 19 பேருக்குத் தூக்கு தண்டனையும் விதித்து, நீதிபதி ஷாகித் நூருதீன் தீர்ப்பளித்திருக்கிறார்.

**மேலதிக தகவல்கள்**

இந்தக் குண்டு வெடிப்புத் தொடர்பில் பொலிஸார் நடத்திய விசாரணையில் இந்த குண்டுவெடிப்புக்கு அத்திபாரமாக இருந்து செயல்பட்டவர்கள் வங்கதேசத்தில் உள்ள ஹர்கதுல் ஜிஹாத் அல் இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பு என்பது கண்டறியப்பட்டது. இந்தத் தீவிரவாத அமைப்புக்கு முன்னாள் தலைமை அமைச்சர் கலிதா ஜியாவின் மகன் ரஹ்மான் ஆதரவு அளித்துள்ளது தெரியவந்தது. மேலும், இந்தக் குண்டுவெடிப்பில் முக்கிய இலக்காக இருந்தது தற்போது தலைமை அமைச்சராக இருக்கின்ற ஷேக் ஹசினா. ஆனால், குண்டுவெடிப்பில் படுகாயத்துடன் அவர் உயிர்பிழைத்தார். ஆயினும், கட்சியின் முன்னாள் தலைவர் ஜில்லூர் ரஹ்மான், அவரின் மனைவி இவி ரஹ்மான் ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர்.

குற்றவாளியான முன்னாள் தலைமை அமைச்சர் கலிதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் தற்போது லண்டனில் தலைமறைவாக வாழ்ந்து வருகிறார். இதற்கிடையே ஊழல் வழக்கில் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்ற முன்னாள் தலைமை அமைச்சர் கலிதா ஜியா சிறையில் இருந்து வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## சிங்கப்பூர் – அமெரிக்கா இடையில் ஓய்வில்லாப் பயணம் 19மணிநேரம், 15ஆயிரம் கிலோ மீற்றர்கள் புதிய அனுபவம்

சிங்கப்பூர் சிற்றி.ஒக்.12

சிங்கப்பூரைச் சேர்ந்த வானூர்திச் சேவை நிறுவனமான சிங்கப்பூர் ஏயார் லைன்ஸ் நிறுவனம் சிங்கப்பூரிலிருந்து அமெரிக்கா வரையான இடைநில்லாத விமான சேவையை மீண்டும் ஆரம்பித்து உள்ளது. அதிக செலவுக்குரியதாக இருக்கிறது என்ற காரணத்துக்காக ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நிறுத்த ப்பட்ட இந்த விமான சேவையைச் சிங்கப்பூர் ஏயார்லைன்ஸ் இப்போது புதுப்பித்துள்ளது.

19 மணிநேரத்தில் 15 ஆயிரம் கிலோமீற்றர் வான் தூரத்தைக் கடக்கின்ற இந்த வானூர்திச் சேவையே இப்போது உலகில் அதிக தூரம் பயணிக்கின்ற ஒரே ஒரு இடைநில்லாத விமான சேவையாகும்.

## பப்பூவா நியூகினியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

போர்ட் மெறஸ்பே.ஒக்.12

பப்பூவா நியூ கினியில், சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கிறது. ரிக்டர் அளவுகோலில் 7 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. பசுபிக் தீவு நாடான பப்பூவா நியூகீனியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவுகோலி 7 ஆக பதிவாகியிருக்கிறது. இதைத் தொடர்ந்து இலேசான நில அதிர்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலநடுக்கம் குறிப்பாக ரபால் நகரத்தில் உணரப்பட்டுள்ளது என்று இந்த நில நடுக்கம் குறித்து அமெரிக்கப் புவியியல் ஆய்வலர்கள் தகவல் வெளியிட்டிருப்பதாகப் பன்னாட்டு ஊடகங்கள் பலவும் செய்தி வெளியிட்டுள்ளன. எனினும் நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த தகவல் இது வரை வெளிவரவில்லை. சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை. இதற்கு முதல் பப்புவா நியூகினியின் போர்கோ மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 67சாவடைந்திருந்தததுவும், 500 பேர் காயமடைந்திருந்ததுவும் குறிப்பிடத்தக்கது.



# யாளர் காணாமல்போன விவகாரம்
# எதிரான ஆதாரங்கள் வலுக்கின்றன



இஸ்தான்புல்.ஒக்.12

கடந்த சில நாள்களுக்கு முன்னர் துருக்கியின் இஸ்தான்புல் நகரிலுள்ள சவூதியின் தூதரக அலுவலகத்துக்குள் சென்ற பத்திரிகையாளர் ஜமால் காணாமல் போயிருந்தார். அவர் காணாமல் போன விவகாரத்தில் சவூதியைச் சேர்ந்த 15பேர் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறி அந்த நபர்களின் பெயர் விவரங்களை வெளியிட்டிருக்கிறது துருக்கி. துருக்கியைச் சேர்ந்த பெண்ணை அடுத்த வாரம் ஜமால் திருமணம் செய்யவிருந்த நிலையில் ஜமால் கடத்தப்பட்டுள்ளார். இதன் பின்னணியில் சவூதி உள்ளது என்று துருக்கி குற்றம் சாட்டியிருக்கிறது. இஸ்தான்புல்லில் உள்ள சவூதித் தூதரக அலுவலகத்துக்குள் ஜமால் செல்லும் காணொலியைத் துருக்கி வெளியிட்டிருந்தது. அதைத் தொடர்ந்தே ஜமால் காணாமல்போன சம்பவத்தில் தொடர்புடைய சவூதியைச் சேர்ந்த 15 நபர்களின் பெயரை துருக்கி வெளியிட்டுள்ள்ளது. மேலும் துருக்கி விமான நிலையத்தில் சவூதி அதிகாரிகள் வந்திறங்கிய காணொலியையும் துருக்கியின் தொலைக்காட்சி ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது. ஜமால் காணாமல்போன விவகாரத்தில் சவூதிக்கு எதிராக தொடர்ந்து ஆதாரங்கள் வலுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

## பேருந்து கவிழ்ந்ததில் 50 பேர் சாவு கென்யாவில் பரிதாபம்!

நைரோபி.ஒக்.12

கென்யாவில் பேருந்து ஒன்று கவிழ்ந்து விழுந்து விபத்து க்குள்ளானதில் அதில் பயணித்த 50 பேர் சாவடைந்திருக்கின்றனர். கென்யாவின் தலைநகர் நைரோபியில் இருந்து மேற்குப் பகுதியில் உள்ள காகமேகா நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த பேருந்து ஒன்றுதான் இவ்வாறாக விபத்துக்கு உள்ளாகியிருக்கிறது.

அந்தபேருந்தில் 52க்கு மேற்பட்ட பயணிகள் இருந்திருக்கின்றனர். 50பேர் வரையானவர்கள் சம்பவ இடத்திலேயே சாவடைந்திருக்கின்றனர். வீதியில் வேகமாகத் திரும்பியபோது திடீரெனக் கவிழ்ந்து பள்ளத்தில் விழுந்து விபத்துக்கு உள்ளாகியிருப்பதாக அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒவ்வொரு ஆண்டும் கென்யாவில் வீதி விபத்துக ளில் 3 ஆயிரம் பேர் வரையில் சாவடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.







# தங்கமீன்கள் செல்லம்மாவுக்கு 'டயானா விருது'

ராம் இயக்கத்தில் வெளியாகிய வெற்றிப்படம் 'தங்க மீன்கள்'. இதில் ராம் கதையின் நாயகனாக நடித்திருந்தார். ராமின் மகளாக சாதனா நடித்திருந்தார். அப்பா மகளுக்குஇடையேயான பாசத் தைக் கொண்டு உருவான இந்தப் படம் ரசிகர்களிடையேஏகோபித்தவரவேற்பைப்பெற்றது.

'செல்லம்மா' என்ற கதாபாத்திரத்தில் நடித்த சாதனாவின்நடிப்புஇந்தப்படத்தில்பெரிதும்பேசப்பட்டது. இவர்மீண்டும்ராம்இயக்கத்தில்உருவாகிய பேரன்புபடத்திலும்நடித்திருக்கிறார். இந்தப்படம் பல்வேறு விருதுக்குத் தேர்வாகி உள்ளது.

இந்த நிலையில் சாதனா, சமூக மேம்பாட்டுக்கானபணிகளில்ஈடுபடும்இளம்சாதனையாளர்களை அங்கீகரிக்கும் பன்னாட்டு விருதான 'டயானா விருதை' வென்றிருக்கிறார்.

இயக்குநர் ராம் தனது சமூக வலைத்தளத்தில் இது தொடர்பாக பதிவை இட்டு வாழ்த்துத் தெரி

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** பணிகளைச் சுறுசுறுப்பாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க வாய்ப்புண்டு. வருமானம் அதிகமாக கிடைக்கும்.விரும்பிய பொருள்கள் வாங்குவீர்கள்.

**இடபம்:** வாழ்வில் குறுக்கிடும் சிரமங்களை வெல்லும் திறன் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிப் பணிகள் இனிதே நிறைவேறும். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**மிதுனம்:**சமூக நிகழ்வுகளால் மனம் பாதிக்கலாம். தொழில், வியாபாரத்தில் குளறுபடியைத் தாமதமின்றிச் சரி செய்யவும். பணவரவு உண்டு.

**கடகம்:** விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை தேவை. தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். பணவரவு கிடைப்பதில் தாமதம் உண்டாகும்.

**சிங்கம்:** மனம், செயலில் புத்துணர்வு மேம்படும். தொழில், வியாபார நடைமுறைத் திருப்திகரமாக இருக்கும். இலாபம் உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கன்னி:**சுயநலநோக்குடன் சிலர் உங்களை புகழ்ந்து பேசுவர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் உழைப்பு தேவைப்படும். வருமானம் ஓரளவுக்கு உயரும்.

**துலாம்:** உறவினர் பாசபந்தமுடன் பழகுவர். தொழில் வியாபாரம் செழிக்கத் தேவையான பணிகளில் ஈடுபடுவீர்கள். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** நீங்கள் நண்பருக்காக பரிந்து பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரிடும். பணவரவு சீராக இருக்கும்.


**தனுசு:** குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி நிறைவேறும். தாராள பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** உங்கள் செயல் திறன் கண்டு பலரும் பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். தாராள பணவரவு கிடைக்கும்.

**கும்பம்:** திடீர் பணியால் அவசரகதிக்கு ஆளாகலாம். நல்லவர்களின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். பணவிஷயத்தில் விழிப்புடன் இருக்கவும்.

**மீனம்:** சிலர் உங்களுக்கு உதவுவது போல ஏமாற்றலாம். விடாமுயற்சியால் திட்டமிட்டபணி நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உண்டு.

# எழுத்துக்கும் உயிர் உண்டு!



எழுதுவதெல்லாம் எழுத்தல்ல
மனிதனை விழித்தெழச் செய்வதே
எழுத்து!

எழுத்தே தவம்!
எழுதுவதே வழிபாடு!
புரியும்படி எழுதுவது வரம்!
புரியாமல் எழுதுவது சாபம்!

எழுத்துக்கும் உயிர் உண்டு!

பிறமொழி கலந்து
எழுதும்போதெல்லாம் எழுத்துக்கள்
விபத்துக்குள்ளாகின்றன!

நல்ல சிந்தனைகளைத்
தரும்போதெல்லாம் எழுத்துக்கள்
மணிமகுடம் அணிந்துகொள்கின்றன!

தவறான சிந்தனைகளைத்
தரும்போதெல்லாம் எ்ழுத்துக்கள்
கற்பிழந்து போகின்றன!

பொய் சொல்லும்போதெல்லாம்
எழுத்துக்கள்
தற்கொலை செய்துகொள்கின்றன!

உண்மை சொல்லும்போதுமட்டுமே
எழுத்துக்கள்
தலைநிமிர்ந்து நிற்கின்றன!

பிழையோடு எழுதும்போது
எழுத்துக்கள்
நோய்வாய்ப்படுகின்றன!

தன்னம்பிக்கை
தரும்போதெல்லாம் எழுத்துக்களுக்கு
சிறகு முளைத்துவிடுகின்றன!


சிற்பன்© @SKTWTZ



பெற்றோர் செய்த பிழையில்
முளைத்தது அனாதை இல்லம்.

பிள்ளைகள் செய்யும் பாவத்தில்
வளர்ந்தது முதியோர் இல்லம்

பெற்றோலுக்கும் டொலருக்கும் கடும் போட்டி
ஏற்கனவே டொலர் ஸ்கொலர்சிப்ல பாஸ் ஆகியாச்சு.
பெற்றோலும் அடுத்த மாசம் பாஸ் ஆகிடும். நல்லாட்சியை
பெற்றெடுத்த நாட்டு மக்களே இப்ப சந்தோசமா?






மச்சி மறுபடியும் பெற்றோல் விலையை
கூட்டிட்டானுங்களாம்டா....




பெற்றோல் விலையைக் கூட்டிக் கூட்டி
விளையாடுறதே நல்லாட்சி
அரசோட வேலையாப்போச்சு

## சுடோக்கு
எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | | | 4 | | 9 | |
| 3 | | | 6 | | | | | 5 |
| 4 | | | 9 | 2 | | 7 | | |
| | 6 | | | | | 8 | 5 | |
| 2 | | | | | 1 | | | |
| | | 4 | 8 | | | | 2 | |
| | 7 | | | 6 | | 1 | | |
| | | 5 | | | | | | 3 |
| | | | | 1 | | | | 6 |

### நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 2 | 6 | 8 | 1 | 9 | 7 | 3 |
| 9 | 6 | 3 | 2 | 5 | 7 | 8 | 1 | 4 |
| 7 | 8 | 1 | 3 | 4 | 9 | 2 | 5 | 6 |
| 2 | 9 | 5 | 8 | 3 | 6 | 7 | 4 | 1 |
| 1 | 3 | 6 | 7 | 2 | 4 | 5 | 9 | 8 |
| 8 | 4 | 7 | 9 | 1 | 5 | 3 | 6 | 2 |
| 3 | 7 | 9 | 1 | 6 | 2 | 4 | 8 | 5 |
| 6 | 2 | 4 | 5 | 9 | 8 | 1 | 3 | 7 |
| 5 | 1 | 8 | 4 | 7 | 3 | 6 | 2 | 9 |

என்னால்
முடியுமா என்று
கேட்காதே.
இவனால்
முடிகிறதே
என்று யோசி



# எண்ணங்களில் தூய்மை பெறுவோம்!

நண்பகல் நேரம். வெயில் வெம்மையைத் தகித்துக் கொண்டிருந்தது. மரத்தடியில் ஒருவன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தான். அந்த வழியாக வந்த விறகுவெட்டி அவனைப் பார்த்தான். கடுமையான உழைப்பாளியாக இருக்கவேண்டும். உழைத்த களைப்பால் தான் இந்த வெயிலிலும் இப்படி உறங்குகிறான் என நினைத்துக் கொண்டே சென்றான்.

அடுத்து திருடன் ஒருவன் அந்த வழியாக வந்தான். இரவு முழுவதும் கண்கள் விழித்துத் திருடி இருப்பான் போலத் தெரிகிறது. அதனால்தான் இந்தச் சுட்டெரிக்கும் வெயிலிலும் அடித்துப் போட்டது போல் தூங்குகிறான் என நினைத்துக் கொண்டே சென்றான்.

மூன்றாவதாக குடிகாரன் ஒருவன் அந்த வழியாக வந்தான். காலையிலேயே நன்றாகக் குடித்து விட்டான் போல இருக்கிறது. அதனால்தான் குடிமயக்கத்தில் இப்படி விழுந்து கிடக்கிறான் என நினைத்துக் கொண்டே சென்றான்.

சிறிது நேரத்தில் துறவி ஒருவர் வந்தார். நண்பகல் பொழுதில் இப்படி உறங்கும் இவர் முற்றும் துறந்த ஞானியாகத்தான் இருக்க வேண்டும். வேறு யாரால் இத்தகைய செயலைச் செய்ய முடியும் என அவரை வணங்கிவிட்டுச் சென்றார்.

**நாம் எப்படியோ நம் எண்ணங்களும் அப்படியே!**



# மணல் வீடு கட்டுவோம்



கோடி கோடி பணத்தினார்
மாடி வீடு கட்டுவர்
கோடி கோடி மணலினால்
வீடு நாங்கள் கட்டினோம்!

செங்கல் தேவையில்லையே
சீமெந்தும் தேவையில்லையே
எங்கள் வீட்டைக் கட்டிட
இரும்பும் தேவையில்லையே!

ஐந்து நிமிட நேரத்தில்
அழகு மிக்க வீட்டினை
சந்துபொந்து இன்றியே
குந்தி நாங்கள் கட்டினோம்

கடலின் அலைகள் வீட்டினரை
கரைத்திட்டாலும் பயமில்லை
உடனே புதிய வீட்டை
உவகையோடு கட்டுவோம்!

ஏடு பிடிக்கும் யாவரும்
கூடி வீடு கட்டினோம்
வீடு உடைந்து போகுமுன்
ஓடி வந்து பாருங்கள்!

# வினை மரபு

அம்பு எய்தார்.
ஆடை நெய்தார்.
ஓவியம் புனைந்தான்.
கூடை முடிந்தாள்.
சுவர் எழுப்பினான்.
செய்யுள் இயற்றினான்.
சோறு உண்டான்.
தண்ணீர் குடித்தான்.
பால் பருகினாள்.
பூப்பறித்தாள்.
மரம் வெட்டினான்.
மாத்திரை விழுங்கினான்.
முறுக்கு தின்றான்.





# படப் புதிர்

பார்ப்பதற்கு வித்தியாசமாக இருக்கிறதா இந்த விலங்கு? இதுவோர் புதுமையான விலங்கு. இந்த விநோத விலங்குக்குள் நான்கு விலங்குகளின் உடற்பாகங்கள் ஒளிந்துள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்...

**1. தலை**
**2. உடம்பு**
**3. கால்கள்**
**4. வால்**




# உரோம் நகர்

உலகின் மிகப் பழைமையான நகரங்களில் ஒன்று இத்தாலிய தலைநகரான ரோம் ஆகும். இது ரைபர் ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. பழங்காலத்தில் பெரும் புகழ் பெற்றிருந்த உரோமப் பேரரசின் தலைநகராக உரோம் விளங்கியது.


அக்காலத்தில் கட்டப்பட்ட அரண்மனைகள் . கோயில்கள், கட்டடங்கள் ஆகியவற்றின் அழிவுற்ற சின்னங்களை இன்றும் அங்கு காணலாம்.

உரோம இராச்சியத்தின் அழிவு இவர்களது ஆடம்பரமான வாழ்வின் விளைவாகவும் அநீதியான செயற்பாடுகளினாலும் ஏற்பட்டதென வரலாற்றாசிரியர்கள் கருதுவர். அடிமைகளை அவர்கள் வைத்திருந்தனர். அங்கு முதலாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட 'கொலுசியம்' எ னும் பெரிய விளையாட்டரங்கு இருந்தது. அதன் எச்சம் இன்றும் காணப்படுகி றது. இந்த விளையாட்டரங்கில் நிகழ்ந்த முக்கிய விளையாட்டு 'சண்டையும் மரணமுமாகும்' விலங்குகள் ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டு ஒன்று இறக்கும் வரை விடப்பட்டன. அடிமைகள் பலவகை ஆயுதங்களுடன் ஒருவருடன் ஒருவர் சண்டைபிடித்து சாவடைவதை ரோம் மக்கள் ஒருவித குரூர உணர்வோடு பார்த்து மகிழ்ந்தனர். செயின்பீட்டர் எனும் கிறிஸ்தவ தேவாலயம் இங்குள்ளது. உலகின் மிகப் பெரியகிறிஸ்தவதேவாலயமாக விளங்குகிறது இது. உரோம் பல்கலைக்கழகம் மிகத் தொன்மையானது.



உரோமன் வத்தோலிக்க சபையின் தலைநகராகவுமம் தனியரசராகவும் விளங்கும் வித் திக்கான் இந்த நகரின் ஒரு பகுதியாகும். கத்தோலிக்கரின் தலைமைக்குழு பாப்பரசர் இங்கு வாழ்கிறார்.

# வழிகாட்டிடுவோம்






## 4.10.2018 – 28.10.2019

குருபகவான்தெய்வீகஅறிவுக்கும், வேதாந்தஞானத்துக்கும், செல்வ வளத்துக்கும் பொருள் சேமிப்புக்கும் காரணகர்த்தா. அந்த வகையிலே குருப்பெயர்ச்சி இடம்பெற்றுள்ளது. வக்ரநிவர்த்திஅடைகின்றகுருபகவான்துலாம்ராசியில்இருந்து விருச்சிக ராசிக்கு இடம்பெயர்கிறார். மேடம் முதல் மீனம் வரை 12 ராசிகளுக்குமான குருப்பெயர்ச்சி பலன்களை இந்தப் பகுதியில் நோக்குவோம்.




எம் கடன் பணிசெய்து கிடப்பதேஎன்றுகாலநேரம்பாராமல் கடினமாக உழைக்கும் நீங்கள், அழுதாலும் உதட்டால் புன்னகைக்கும் குணமுடையவர்கள். அமைதியை விரும்பும் நீங்கள், போட்டியெனவந்துவிட்டால் விஸ்வரூபம் எடுத்து மற்றவர்களைமிரளவைப்பீர்கள்.

இதுவரை உங்கள் ராசிக்கு 9ஆம் வீட்டில் அமர்ந்து கொண்டுதொட்டகாரியங்களையெல்லாம்துலங்கவைத்ததுடன், பெரியோர்கள் மத்தியில் ஒரு அந்தஸ்தையும் பெற்றுத் தந்த குருபகவான் 04.10.2018 முதல் 28.10.2019 ஆம் ஆண்டு வரை உங்கள் ராசிக்கு 10ஆம் வீட்டில் நுழைந்து பலன் தரப்போகிறார். பத்தாம் இடமென்றால் பதவியைப் பறித்துவிடுவாரே! கையில் காசுபணம் தங்காதே! என்றெல்லாம் பதட்டப்படாதீர்கள். ஓரளவு நன்மையே உண்டாகும். சிலருக்கு வெளிநாட்டில், அண்டை மாநிலத்தில் வேலை அமையும். என்றாலும் அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் தர வேண்டாம். ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒரு பதற்றம் இருக்கும்.

### குருபகவானின் பார்வைப் பலன்கள்

குரு உங்கள் ராசிக்கு 2ஆம் வீட்டைப் பார்ப்பதால் எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். குடும்பத்தில் நல்லது நடக்கும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். சொத்துச் சேரும். குரு ஏழாம் பார்வையால் 4ஆம் வீட்டைப் பார்ப்பதால் தாயாருடன் இருந்த மனவருத்தம் நீங்கும். கை, கால், முதுகு வலியிலிருந்து தாயார் விடுபடுவார். வீடுகட்ட வங்கிக் கடன் கிடைக்கும்.

புது வீட்டில் குடி புகுவீர்கள். கணவன், மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். இருவரும் கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். நவீன ரக வாகனம், கைபேசி வாங்குவீர்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். மனைவிவழியில் செல்வாக்கு உயரும். குரு 6ஆம் வீட்டைப் பார்ப்பதால் மாதக் கணக்கில் தள்ளிப் போன காரியங்களெல்லாம் முடிவடையும். வழக்கில் நல்ல தீர்ப்புவரும். அதிகவட்டிக்கடனில்ஒருபகுதியைச்செலுத்துவதற்கு வழி பிறக்கும்.

### குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்

04.10.2018 முதல் 20.10.2018 வரை உங்களின் தனாதிபதியும், லாபாதிபதியுமான குருபகவான் தன் சாரமான விசாக நட்சத்திரத்தில் செல்வதால் கடனாகக் கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். வீட்டை விரிவுபடுத்துவது, அழகுபடுத்துவதுபோன்றமுயற்சிகள்பலிதமாகும். குடும்பத்தில் நல்லது நடக்கும்.

புது பொறுப்புகள், பதவிகள் தேடி வரும். என்றாலும் செலவுகளும், வேலைச்சுமையும் இருந்து கொண்டேயிருக்கும். மூத்த சகோதர வகையில் அலைச்சல் இருந்தாலும் இலாபம் உண்டாகும்.

21.10.2018 முதல் 19.12.2018 வரை உங்களின் ராசிநாதனும், விரயாதிபதியுமான சனி பகவானின் அனுஷ நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் திடீர் செல்வாக்கு, யோகம், பணவரவு உண்டாகும்.

அயல்நாடுசெல்லவிசாகிடைக்கும். வேற்றுமதத்தவர்கள், மொழியினர்கள், மாநிலத்தவர்களால்நன்மையடைவீர்கள். புதியநண்பர்களால்உற்சாகமடைவீர்கள். பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். செலவுகளைக் குறைத்துச்சேமிக்கத் தொடங்குவீர்கள்.

20.12.2018 முதல் 12.03.2019 வரை மற்றும் 09.08.2019 முதல் 27.10.2019 வரை உங்களின் பூர்வபுண்யாதிபதியும், அஷ்டமாதிபதியுமான புதனின் கேட்டை நட்சத்திரத்தில் குரு செல்வதால் பழைய கடனைத் தீர்க்க புது வழி பிறக்கும்.

பிள்ளைகளால் சொந்த, பந்தங்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். பூர்வீகச் சொத்தை சீர் செய்வீர்கள். மகளின் பிடிவாத குணம் மாறும். மகனின் உயர்கல்வி, உத்யோகம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் சாதகமாகும்.

### குருபகவானின் அதிசார வக்ர சஞ்சாரம்

13.03.2019 முதல் 18.05.2019 வரை குருபகவான் அதிசாரத்தில் ராசிக்கு 11ஆம் வீட்டில் கேதுவின் நட்சத்திரமான மூல நட்சத்திரத்தில் செல்வதால் செல்வம், செல்வாக்குக் கூடும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். புதுப் பதவி, பொறுப்புகள் தேடி வரும்.

### குருபகவானின் வக்ர சஞ்சாரம்

10.04.2019 முதல் 18.5.2019 வரை மூலம் நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் மற்றும் 19.05.2019 முதல் 08.08.2019 வரை கேட்டை நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் செல்வதால் திடீர் பயணங்களும், செலவுகளும் துரத்தும். தர்ம சங்கடமான சூழ்நிலைக்கு ஆளாவீர்கள். பால்ய நண்பர்களுடன் மோதல்கள் வரும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும்.

பழைய பிரச்சினைகள் மீண்டும் வந்துவிடுமோ என்ற பயம் வந்து போகும். படபடப்பு, நெஞ்சு எரிச்சல், நோய்த்தொற்று வரக்கூடும். கர்ப்பிணிப் பெண்கள் உணவு விஷயத்தில் கட்டுப்பாட்டுடன் இருப்பது அவசியம். மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த மருந்தையும் உட்கொள்ள வேண்டாம். இடையிடையே பணவரவு உண்டு.

வீடு, மனை வாங்குவது, விற்பது நல்ல விதத்தில் முடியும். என்னதான் உண்மையாக உழைத்தாலும் எந்தப் பலனும் இல்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். உண்மையாக இருப்பது மட்டும் போதாது உயரதிகாரிகளுக்கு தகுந்தாற்போலும்பேசும்வித்தையையும்கற்றுக்கொள்ள வேண்டுமென்றமுடிவிற்குவருவீர்கள். சகஊழியர்களின் விடுப்பால்வேலைச்சுமைஅதிகமாகும். வேறுசிலர்செய்த தவறுகளுக்கெல்லாம் நாம் பலிகடா ஆகி விட்டோமே என்றெல்லாம் வருத்தப்படுவீர்கள்.

---




அடிப்படை உரிமைகளை எப்போதும் விட்டுக் கொடுக்காத நீங்கள் அடுத்தவர்களின் சுதந்திரத்தில் அநாவசியமாகத் தலையிட மாட்டீர்கள். சமயோஜித புத்தியால் எதையும் செய்து முடிக்கும் நீங்கள், எப்பொழுதும் பரபரப்பாக இருப்பீர்கள். இதுவரைஉங்கள்ராசிக்குஎட்டில் மறைந்துகொண்டுஎதையும்எட்டாக்கனியாக்கியதுடன், மனஅழுத்தத்தையும், எதிர்மறை எண்ணங்களையும், விபத்துகளையும் தந்து கொண்டிருந்த குருபகவான் 04.10.2018 முதல் 28.10.2019 வரை உங்கள் ராசிக்கு பாக்ய வீடான 9ஆம் வீட்டில் நுழைவதால் வாழ்வில் புது வியூகங்களை அமைத்து முன்னேறத் தொடங்குவீர்கள். 'ஓடிப்போனவனுக்குஒன்பதாம்வீட்டில்குரு'என்றபழமொழிக்கேற்ப இனித் தொட்ட காரியங்களெல்லாம் துலங்கும்.

குடும்பவிசேஷங்களில்ஒதுக்கப்பட்டீர்களே! பொது நிகழ்ச்சிகளிலும்மரியாதைக்குறைவாகநடத்தப்பட்டீர்களே! இனி அந்த அவல நிலை மாறும். எங்கு சென்றாலும் முதல் மரியாதைகிடைக்கும். வளைந்துகொடுத்தால்வானம்போல் உயரலாம் என்பதை உணர்வீர்கள். தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். தந்தையாருடன் இருந்தமனத்தாங்கல்நீங்கும். தந்தைவழிச்சொத்துக்கள் வந்து சேரும். குடும்பத்தில் நிலவி வந்த சண்டை, சச்சரவுகளுக்கு தீர்வு கிடைக்கும். வங்கியிலிருந்த நகை, பத்திரத்தை மீட்பீர்கள். நீண்ட நாள் கனவாக இருந்த வீடு வாங்கும் ஆசை இப்போது நிறைவேறும். மனக்கசப்பால் ஒதுங்கியிருந்த சொந்த, பந்தங்களெல்லாம் உங்கள் வளர்ச்சியைக் கண்டுவலிய வந்து உறவாடுவார்கள்.

### குருபகவானின் பார்வைப் பலன்கள்

குருபகவான் உங்கள் ராசியைப் பார்ப்பதால் எப்போதும் ஏதாவது ஒரு கவலையும், சோகமுமாக இருந்த உங்கள் முகம் இனி மலரும். அழகு, இளமை கூடும். புது வாகனம் வாங்குவீர்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். அதிக வட்டிக் கடனைக் குறைந்த வட்டிக்குப் பணம் வாங்கி சீர் செய்வீர்கள்.

குரு உங்களின் 3ஆம் வீட்டைப் பார்ப்பதால் எதையும் சாதிக்கும்தன்னம்பிக்கைபிறக்கும். இளையசகோதரங்களால்பயனடைவீர்கள். விலைஉயர்ந்தஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். வெளிநாடுசெல்லவிசாகிடைக்கும். அரசால் நன்மை உண்டு.

குரு உங்களின் 5ஆம் வீட்டைப் பார்ப்பதால் முடிவுகள் எடுப்பதில் இருந்த குழப்பம், தடுமாற்றம் நீங்கும். அடிக்கடி கர்ப்பச் சிதைவு ஏற்பட்டவர்களுக்கு இனிக் குழந்தை தங்கும். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தி யோகம், திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் சாதகமாக முடியும். பாகப்பிரிவினை சுமுகமாகும்.

### குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்

04.10.2018 முதல் 20.10.2018 வரை உங்களின் ராசிநாதனும், ஜீவனாதிபதியுமான குருபகவான் தன் சாரமான விசாக நட்சத்திரத்தில் செல்வதால் கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். பழைய பிரச்சினைகள் தீரும். புதுவேலைகிடைக்கும். அலுவலகத்தில்மரியாதை கூடும். பெரியோரின் அறிமுகம் கிடைக்கும். அக்கம் பக்க வீட்டாருடன் இணக்கமான சூழ்நிலை உருவாகும். 21.10.2018 முதல் 19.12.2018 வரை உங்களின் லாபாதிபதியும், விரயாதிபதியுமான சனி பகவானின் அனுஷ நட்சத்திரத்தில்குருபகவான்செல்வதால் பணவரவு அதிகரிக்கும். அலைச்சலுடன் ஆதாயம் உண்டாகும். வீடு, வாகன வசதி பெருகும். ஊர்ப் பொது நிகழ்ச்சிகளையெல்லாம் முன்னின்று நடத்துவீர்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. வேற்று மதத்தவர்கள் நண்பர்களாவார்கள். 20.12.2018 முதல் 12.03.2019 வரை மற்றும் 09.08.2019 முதல் 27.10.2019 வரை உங்களின் சுகாதிபதியும், சப்தமாதிபதியுமான புதனின் கேட்டை நட்சத்திரத்தில்குருசெல்வதால்கனிவாகப்பேசிக்காரியம்சாதிப்பீர்கள். மனைவியின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடந்த கால இனிய அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். தாய்வழிச் சொத்துக் கைக்கு வரும்.

### குருபகவானின் அதிசார வக்ர சஞ்சாரம்

13.03.2019 முதல் 18.05.2019 வரை குருபகவான் அதிசாரத்தில் ராசிக்கு 10ஆம் வீட்டில் கேதுவின் நட்சத்திரமான மூல நட்சத்திரத்தில்செல்வதால்ஒரே நாளில் முக்கியமான இரண்டு, மூன்றுவேலைகளை இழுத்துப்போட்டுப்பார்க்க வேண்டிவரும். வீண் பழிச்சொல் வரும். மற்றவர்களைச் சார்ந்து இருக்க வேண்டாம். தர்மசங்கடமான சூழ்நிலை ஏற்படும்.

### குருபகவானின் வக்ர சஞ்சாரம்

10.04.2019 முதல் 18.5.2019 வரை மூல நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் மற்றும் 19.05.2019 முதல் 08.08.2019 வரை கேட்டை நட்சத்திரத்தில் வக்ர கதியிலும் செல்வதால் திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். உறவினர், நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். தாயாரின் உடல் நிலை சீராகும். சொத்து வாங்க முன் பணம் தருவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

நீண்டநாள்களாகபார்க்கநினைத்தஒருவரைசந்திப்பீர்கள். மனைவி உங்களின் ஆலோசனைக்கு முக்கியத்துவம் தருவார். மனைவிவழி உறவினர்களும் ஒத்தாசையாக இருப்பார்கள்.

(முற்றும்)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 . 03 . 1936 | 09 . 10 . 2018 |

### திருமதி முத்தாபரணம் சுப்பிரமணியம்

தாவடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தாபரணம் சுப்பிரமணியம் 09.10.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகர் - பொன்னம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாக்கியலட்சுமி, மகாதேவன், மகேஸ்வரி மற்றும் பேரின்பமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பொன்னம்மாவின் அன்பு மைத்துனியும், சறோஜினிதேவி, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற ஜெகநாதன், ஜெகலச்சுமி, ஜெயரூபன், காலஞ்சென்ற ஜெகசோதி, கலைச்செல்வி, சசிகரன், றஜனி, ஜங்கரன், றஞ்சனா ஆகியோரின் அன்புத் தாயும், கணேசலிங்கம், சிவசுந்தரம், அகிலேஸ்வரன், ரட்ணகும்ார், பிரதீபன், ராமச்சந்திரன், பிறேமாவதி, சுகந்தினி, சுகந்தி, சசிரூபா ஆகியோரின் அன்பு மாமியும், தர்சிகா, துஷாந்தன், சுசீலன், நிஷாந்தி, ஜெனித்தா, அனித்தா, அஜந்தா, பவன், அனுஷன், விந்துஷன், ஆருரன், கனிஷா, பிரகாஷ், இனியா, பிரவீன், கவீன், தருணன், சரணி, தர்சினி, காஷினி, மகிஷா, அகிருதி, ஜெசுதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஸ்வின், அக்ஷன், தர்சனன், சஜனுயன், கனுசன், சர்ஜீன், அஸ்மிதா, ஹர்ணிகா, ஆருஷிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.30 மணியளவில் கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ.கணேசலிங்கம் (ஆனந்தி)
சு. ஜெயரூபன் (அப்பன்)

மதவடி லேன்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(cs14355)(13,17)

## பெயர்மாற்றம்

85, கன்னாதிட்டி, காளி கோயில் றோட்டைச் சேர்ந்த லில்லி ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து தவமலர் எனப்பெயர் மாற்றி இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

- தவமலர் -

(CS/20482) (11)

## தவறிவிட்டது

48, புகையிரத வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த சி.மங்களேஸ்வரசர்மா என்பவரின் மோட்டார் வாகனத்தின் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றைய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் வல்வெட்டித்துறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 281 1894, 021 222 1123 (CS/20472)(11)

## வேலையாள்கள் தேவை

லேபர் (கூலி) வேலையாள்கள் தேவை.
உணவு, தங்குமிட வசதி இலவசம்
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு - 077 0833 461

## பதின்னான்காம் ஆண்டு நினைவலைகள்...



அமரர்
### திலகவதி குமரவேல்

(முன்னாள் பொது முகாமையாளர் - ப.நோ.கூ. சங்கம், சுன்னாகம்)

மலராக 17.04.1953 — சருகாக 18.09.2004

திதி: சதுர்த்தி (12.10.2018)

அன்பின் உறைவிடம் அம்மா
ஆக்கத்தின் அணு அம்மா
இனிமையின் இருப்பிடம் அம்மா
ஈகையின் உறைவிடம் அம்மா
உன்னதம் காப்பவள் அம்மா
ஊக்கத்தின் ஊற்று அம்மா
எம்முயிர்த் தாயே அம்மா
ஏற்றத்தின் ஏணி நீ அம்மா
ஐக்கியம் காப்பவள் அம்மா
ஒளியாய் மிளிர்பவள் அம்மா
ஓய்வின்றி உழைப்பவள் அம்மா
ஔவியம் அற்றவள் அம்மா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"திருவேரகம்"
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்

(cs 20270)

## 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை

**திருமதி சித்திரகலா சண்முகநாதன்**
தாயின் மடியில் 12.10.1960 — மண்ணின் மடியில் 12.09.2018

**திருமதி மகேஸ்வரி சுப்பிரமணியம் (தாய்)**
தாயின் மடியில் 15.10.1936 — மண்ணின் மடியில் 26.02.2011



"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

இமைகள் மூடித் திறப்பதற்குள்
எங்கள் குடும்பத்தின் குலதீபமே நீயில்லா
எமது இல்லம் ஒளியிழந்து போனது மகளே
காலங்கள் தந்த கோலங்களால்
எம் கண்களில் நீரலைகள் ஓயவில்லை
தினமும் பூத்த கொடிகள் பூக்களின்றி
தவிக்கின்றது நீ பூமியிலே மீண்டும்
வந்து புன்னகைப்பாயாக.
உங்கள் நினைவுகள் என்றும் நினைவில்
நிற்கும் மகளே. நல்லூர் முருகன் அருள் புரிவாராக!
நல்வழி காட்டுவாராக!

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மார்க்கம் (கனடா) விலும் இன்று (12.10.2018) வெள்ளிக் கிழமை திருநெல்வேலி (இலங்கை) சிறுவர் இல்லத்திலும் பிரார்த்தனை நடைபெறும்.
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!



அனுதாபம் அறிந்து வந்தவர்கள், உற்றத்தார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் யாவருக்கும் எங்கள் அன்பார்ந்த நன்றிகள்.

**குடும்பத்தினர்.**

பொ.சுப்பிரமணியம்
4, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

(CS/19282)(11,17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மந்துவில் றோ.க.த.க. பாடசாலை

**2018 ஆம் ஆண்டு தரம் – 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்**



செல்வன் **ஜெயகுமார் மோபிலாஸ்**
179 புள்ளிகள்



செல்வன் **துரைசிங்கம் அஜித்**
171 புள்ளிகள்

**70 மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள்**

செல்வி
ஏ.துஸ்யந்தி
142 புள்ளிகள்



செல்வி
பி.லேனுஷா
133 புள்ளிகள்



செல்வன்
க.கஜீவன்
80 புள்ளிகள்



இந்த மாணவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: பாடசாலைச் சமூகம்
யா/மந்துவில் றோ.க.த.க. பாடசாலை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ கைதடி குருசாமி
வித்தியாலயத்தில்
2018 இல் தரம் - 5 புலமைப்பரிசில்
பரீட்சையில் தோற்றி சித்திபெற்ற
மாணவர்களான
செல்வன் **உமாகாந்தன் பரிதி**
180 புள்ளிகள்
செல்வி **தயானந்தன் டிபிஷனா**
168 புள்ளிகள்

அவர்களை வாழ்த்துவதோடு 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான

| | | |
|---|---|---|
| ச. கஜந்தா | – | 158 புள்ளிகள் |
| லோ. பிருந்தாபன் | – | 151 புள்ளிகள் |
| பி.சோபிதன் | – | 138 புள்ளிகள் |

அவர்களையும் வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்: **பாடசாலைச் சமூகம்**
**யா/கைதடி குருசாமி வித்தியாலயம்**

(1683)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ மந்துவில் ஸ்ரீபாரதி
வித்தியாலயத்தில் 2018 ஆம்
ஆண்டுக்கான தரம் 05 புலமைப்
பரிசில் பரீட்சையில் தோற்றி
**165 புள்ளிகளைப்** பெற்று
சித்தியடைந்த
**செல்வி**
**வைகுந்ததாசன்**
**அபிஷா**
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
**பாடசாலைச் சமூகம்**
**யா/ மந்துவில் ஸ்ரீபாரதி**
**வித்தியாலயம், கொடிகாமம்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**வசந்தராஜ் - விஜிதா** தம்பதிகளின்
**செல்வப் புதல்வன்**
**செல்வன் மதிமறவன்**
யா/ புற்றளை மகாவித்தியாலயம் (புலோலி.
பருத்தித்துறை) பாடசாலையில் 2018 தரம்
5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி
**184 புள்ளிகளைப்** பெற்று பாடசாலை
**மட்டத்தில் மூன்றாம் (03) இடத்தில்**
சித்தியடைந்துள்ளார். அவரைப் பாராட்டி
வாழ்த்துவதோடு மேலும் பல சித்திகளைப்
பெற்று சீரும் சிறப்புடன் வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
**த:தில்லையம்பலம் (அம்மப்பா)**
**தி.சிவக்கொழுந்து (அம்மம்மா)**
**வத்திராயன் தெற்கு**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**எமது பாடசாலை அதிபர்**
திருமதி **தயாசக்தி**
**பாலசுப்ரமணியம்**
(B.A, PGDE, MA, SLPS III)
இன் முகத்துடன் எந்நேரமும் எம்மோடு
உரையாடி ஈர் நான்கு வருடங்கள்
எம் பள்ளியிலே பணியாற்றி எமது
உயர்வுக்கு வழிகாட்டியாய் திகழ்ந்து
எமது உயர்வுக்கு வழிகாட்டியாய் திகழ்ந்து
தேசிய ரீதியில் **குரு பிரதீபா பிரபா** விருதினை
பெற்றமைக்காக அவரை பாராட்டி உளமார
வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் சமூகம், யா /சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**ஜெகநாதன் கேதினி** தம்பதியரின்
**அன்புச் செல்வனும்**
**யா/ வவுனியா தமிழ் மத்திய**
**மகா வித்தியாலய**
மாணவனுமாகிய
**ஜெகநாதன் லதுர்சன்**
அவர்கள்
**2018 இல் தரம் - 5 புலமைப்பரிசில்**
**பரீட்சையில் தோற்றி 193 புள்ளிகளைப்**
பெற்று **மாவட்ட நிலையில் 2 ஆவது** இடத்தினைப் பெற்றதையிட்டு
நாம் மகிழ்ச்சியுடன் பாராட்டுவதில் பெருமையடைகின்றோம்.
வெற்றிக்கு ஊக்கமளித்த பாடசாலை
அதிபர். ஆசான்களுக்கும் நன்றியைத்
தெரிவித்துகொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்.
**அப்பா, அம்மா**
**தங்கை, மற்றும் உறவினர்கள்.**



## முகவர் தேவை

எமது வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் உற்பத்திப் பொருள்களை விநியோகம் செய்வதற்கு " முகவராக" செயற்படுவதற்கு விருப்பமான அனுபவம் உள்ளவர்களிடம் விண்ணப்பம் கோரப்படு கின்றது. விண்ணப்பிக்க விரும்புவோர் நிபந்தனைகளையும் விண்ணப்பப் படிவத்தையும் **"வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி பிப்பிலிச்சந்தி மானிப்பாய்"** என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்ப **முடிவு திகதி 22.10.2018 முற்பகல் 10.30 மணிவரை.** முகவர் நியமனம் தொடர்பில் நெறியாளர் குழுவின் தீர்ப்பே முடிவானதாகும்.

**மானிப்பாய்.**
**12.10.2018**

**தலைவர்**
**வலிகாமம், ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி**

## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்(வ-து) 30.04.2018 இல் கிராமியவங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்

சங்கத்தின் 30.04.2018 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனாலும் சங்க கிராமியவங்கி நடவடிக்கைகள் கணினி மயப்படுத்தப்பட்டிருப்பதாலும் சங்க கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தங்கள் வங்கிப் புத்தகத்தினை 31.10.2018 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்து மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்**
**கண்டிவீதி, சாவகச்சேரி**
**12.10.2018**

(IN/0032) (11)

**பொதுமுகாமையாளர்**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும்,
நயினாதீவு பிரதேச வைத்தியசாலையின்
ஆண் பரிசாரகருமாகிய

**திரு.தருமராசா ரமேஸ்**

அவர்கள் கடந்த (10.10.2018) புதன்கிழமை
யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ அன்னலிங்கம்
பிரேம்சங்கர் அவர்கள் முன் நிலையில் அகில இலங்கை
சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்
செய்துகொண்டமையைப் பாராட்டி வாழ்த்துவதுடன்
குல தெய்மாகிய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன், வங்களாவடி
ஸ்ரீ ஞான வைரவரின் அருளாசியுடன் மக்கள்
சேவையை தொடர பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
கணபதிப்பிள்ளை கயிலாயநாதன் - குடும்பத்தினர்
நாகராசா தில்லைராசா - குடும்பத்தினர்
புவனசுந்தரம் விமலேசன் - குடும்பத்தினர்
நடராசா சிவப்பிரகாசம் - குடும்பத்தினர்
ஆறுமுகம் தனியாசலம் - குடும்பத்தினர் (யாழ்ப்பாணம்)
மற்றும் நண்பர்கள்

Congratulations

(es.20453)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 . 08 . 1948

மறைவு 18 . 10 . 2016



அமரர் **புலேந்திரன் செல்வமணி** (செல்லக்கண்டு)
திதி – சதுர்த்தி

நீங்கள் பறந்து போய்
ஆண்டுகள் இரண்டு அசைந்த போதும்
அழியாத ஓவியமாய் - என்றும்
எம் நெஞ்சில் நீங்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


இராமலிங்கம் வீதி,
முடமாவடி, திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 11 . 1937

மறைவு 28 . 09 . 2014




**அமரர் கனகு சின்னராசா**
திதி – சதுர்த்தி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் உறைந்து
ஆண்டுகள் நான்கு ஆனதே!
நல் துணைவனாய் நல் தந்தையாய்
சீராக வாழ்ந்து எம்மையும் வாழவைத்தீரே!
காலங்கள் கடந்தாலும் ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் மனதில் என்றும் நிலைத்திருப்பீர்
உங்கள் நினைவுகளில்

என்றும் பாசமுடன் நிலைத்திருக்கும் உம்
**உறவுகள்**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




2018 ஆம் ஆண்டிற்கான அரச திணைக்களங்கள்
சபைகளிற்கு இடையிலான
**மெய்வல்லுநர் விளையாட்டு நிகழ்வில்**
**கடந்த 23, 24 -08.2018 சுகததாஸ**
**விளையாட்டு மைதானத்தில்**

இடம்பெற்ற போட்டிகளில் இலங்கை போக்குவரத்து
சபை சார்பாக கலந்துகொண்ட
காரைநகர் சாலையைச் சேர்ந்த
**சாலைப்பரிசோதகர் (தழுவல்)**

## திரு.தி.ஜெயரூபன்

அவர்கள்
கலந்துகொண்ட மூன்று போட்டிகளிலும் முதலிடம்
பெற்று **தங்கப்பதக்கம்** பெற்றுக்கொண்டார்

- நீளம் பாய்தல் - முதலிடம்
- உயரம் பாய்தல் - முதலிடம் (சாதனை முறியப்பு)
- முப்பாய்ச்சல் - முதலிடம் (சாதனை முறியடிப்பு)

இதனை பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாராட்டி வாழ்த்துவோர்.
திரு. K. தர்மசுதன் - முன்னாள் சாலைபரிசோதகர்
(காரைநகர் சாலை) காரைநகர் சாலை சமூகம்.

(es.20422)(13.17)

## Car, Van வாடகைக்கு உண்டு

புதிய Car, Van கள் நாள்/மாத வாடகைக்கு உண்டு.
Alto - 32, 000.00/Month - 5000km
KDH Van - 5, 500.00/Day - 150 km
**Jaffna. - 077 888 7051**

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை கோப்பாய் உப அலுவலகம் ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேசசபை கோப்பாய் உப அலுவலகத்துக்குட்பட்ட வட்டாரம் - 14 பருத்தியடைப்பு ஒழுங்கை, ஆதன இலக்கம் 55/7 என்ற இலக்கத்தைக் கொண்டதும் "மண்டுவில்" நிலப்பரப்பு பரப்பு 01 குழி 09.00 கொண்ட கிராமசேவையாளர் பிரிவு J/259, கோப்பாய் கோவில் பற்று கோப்பாய் தெற்கு இறை கோப்பாயில் அமைந்துள்ள ஆதனத்தின் உரிமையாளர் பெயர் திருமதி எஸ்.கந்தையா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை இல.24, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த கந்தசாமி இராசம்மா (447412730V) நிலப்பரப்பு 01 குழி 09.00 இற்கு உரிமை கோருகின்றார்.

மேற்படி ஆதனத்தைப் பிரசித்த நொத்தாரிசு திரு.ஜே.எஸ்.ஏ.மதுரநாயகம் அவர்களால் எழுதப்பட்ட 1098 ஆம் இலக்க 2013.10.25 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் மாணிக்கன் நாகேந்திரம் பெண் தவபாலினியினால் ரூபா 200,000/- தரப்பற்றிக் கொண்டதன் மூலம் தடையற்ற ஆட்சியுமானதென வெளிப்படுத்தி கந்தசாமி இராசம்மா (447412730V) இற்கு கிரயமாக வந்தடைந்தது.

மேற்படி நிலப்பரப்பு பரப்பு 01 குழி 09.00 இற்கு எல்லை கிழக்கு பாதை (Lot 01) இற்கும், வடக்கு Lot 01 (மாணிக்கன் நாகேந்திரம் பெண் தவபாலினி) இற்கும் உரிய ஆதனம், மேற்கு - கனகசபாபதி சிவகுமாரின் ஆதனம், தெற்கு - ஒழுங்கைக்குரிய ஆதனம், இவ்வாதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களால் அளந்து வரையப்பட்ட 2262 ஆம் இலக்க 15.07.2013 ஆம் திகதி படத்தில் Lot - 02 எனக் குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

இவ் ஆதனத்தை கந்தசாமி இராசம்மா என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 10.01.2019 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி இராசம்மா என்ற பெயருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதையும் அறியத்தருகின்றேன்.

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர்,**
**வலிகிழக்கு பிரதேசசபை,**
**புத்தூர்.**
**11.10.2018**

(IN/8031) (11)

வலி, வேதனைகளுக்கான சிறந்த நிவாரணி
இலங்கையின் தரம் 1
கொஸ்கந்தவல
**ஜீவக வாத தைலம்®**

- இடுப்பு வலி
- மூட்டு வலி
- முழங்கால் வலி
- தசைப் பிடிப்பு
- ஆத்தரைடீஸ்
- நரம்பு வலி
- சுளுக்குப் பிடிப்பு

உள்ளிட்ட நோய்களுக்கு
நிவாரணி அளிக்கிறது...!



Jeewaka Herbal Products (Pvt) Ltd
0777 322 574

## தரம் 06 (2019) அனுமதி (தமிழ், ஆங்கில மொழிமூலம்)

2019 ஆம் ஆண்டின் தரம் 06 இற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. விண்ணப்ப படிவங்களை அலுவலகத்தில் பெற்று 31.10.2018 இற்கு முன்னர் மீள ஒப்படைக்கவும்.

**குறிப்பு** : ஆண் மாணவர்களுக்கான விடுதி வசதிகள் உண்டு.

அதிபர்,
மகாஜன கல்லூரி

இப்பொழுது திரையில்
Cinemas Ltd Proudly presents




வடக்கு, கிழக்கு

| | | |
|---|---|---|
| Majestic Jaffna 10.30/1.30/4.15/7.00 pm | | |
| Chelva Jaffna 10.30/2.30/6.30 | Saru Cinema Point Pedro 10.30/2.30/6.30 | Shanthi Batticaloa 10.30/2.30/6.30 |
| Archana Akkaraipattu 10.30/2.30/6.30 | G.K.Cinemax Kalmunai 10.30/2.30/6.30 | Vasanthi Vavunia 10.30/2.30/6.30 |
| Nahams Chunnaham 10.30/2.30/6.30 | Nelson 10.30/2.30/6.30 | SELLAM PREMIER Chenkalady 10.30/2.30/6.30 |

மற்றும் நாடெங்கிலும் உள்ள ஏனைய திரையரங்குகளிலும்

Distributed by:
Cinema Entertainments (Pvt) Ltd (CEL)

MAJESTIC CINEPLEX




Jaffna Silver
4.45PM




Jaffna Silver
10.45AM | 1.45PM




Jaffna Platinum
10.00AM | 1.00PM | 4.15PM | 7.30PM | 10.30PM (Fri/Sat)




Jaffna Bronze
10.30AM | 7.30PM | 10.30PM (Fri/Sat)

Jaffna Silver
7.45PM | 10.30PM (Fri/Sat)




Jaffna Bronze
1.30PM

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
021 2227712
CEYLON THEATRES

## அரசமைப்பு...

அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் 3 பேரும் முன்னர் பெயரிடப்பட்டிருந்தனர்.

அவர்களின் விவரம் நேற்று நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு நேற்று அங்கீகாரம் வழங்கப்பட்டது.

செல்வக்குமரன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப்பீட சிரேஷ்ட சட்ட விரிவுரையாளராக 43 வருடங்கள் பணியாற்றியுள்ளார். இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகவும் செயற்பட்டுள்ளதோடு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் விளங்கியுள்ளார். அஹமட் ஜாவிட் யூசுப், கொழும்பு ரோயல் கல்லூரியில் கல்வி பயின்றுள்ளதோடு இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பை நிறைவு செய்து, சட்ட மா அதிபர் திணைக்களத்தில் கடமையாற்றினார்.

ஜயந்த தனபால பன்னாட்டு உறவுகள் தொடர்பிலான அரச தலைவரின் சிறப்பு ஆலோசகராக செயற்பட்டு வருவதோடு, அணு விஞ்ஞானிகளின் சமவாய உறுப்பினராகவும் விளங்குகின்றார். (ற)

## அரசமைப்பு வரைவு...

கடந்த மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற வழிநடத்தல் குழுக் கூட்டத்தில், புதிய அரசமைப்புக்கான வரைவு அரசியல் நிர்ணய சபையாக ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி கூடும் நாடாளுமன்ற அமர்வில் சமர்பிக்க முடிவெடுக்கப்பட்டது. அதற்கு முன்னதாக ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி வழிநடத்தல் குழுக் கூட்டத்தை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. வழிநடத்தல் குழுக் கூட்டத்தில், புதிய அரசமைப்பு வரைவின் தமிழ் மற்றும் சிங்கள மொழி ஆவணங்களை ஆராய்வது என்றும் முடிவெடுக்கப்பட்டிருந்தது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வழிநடத்தல் குழு நேற்று பி.ப. 2 மணிக்கு கூடியது. சுமார் ஒன்றரை மணி நேரம் கூட்டம் இடம்பெற்றது.

நாட்டின் தன்மை தொடர்பில், ஏக்கிய ராஜ்ஜிய ஒருமித்த நாடு என்று வரைவில் கூறப்பட்டு ள்ளது. ஒருமித்த நாடு என்ற சொல் பயன்படுத்தக் கூடாது. அதற்குப் பதிலாக ஒற்றையாட்சி என்ற சொல் இருக்க வேண்டும் என்று ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார். இதே கருத்தை முன்னரும் கூறியுள்ளேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அப்படியானால் நாடு பிளவடைவதையா நீங்கள் விரும்புகின்றீர் கள் என்று கேள்வி எழுப்பியுள்ளார். இல்லை என்று டக்ளஸ் பதிலளித்துள்ளார். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இடைக்கால அறிக்கைவெளியிடுவதற்கு முன்னர் நீங்கள் ஒருமித்த நாடு என்ற சொல்லுக்குப் பதிலாக ஒருநாடு என்ற சொல்லைப் பயன்படுத்துமாறுதான் கூறினீர்கள். ஒற்றையாட்சி என்பதைச் சொல்லவில்லை. ஒருமித்த நாடா அல்லது ஒரு நாடா, எந்தச் சொல்லைப் பயன்படுத்துவது என்பது தொடர்பில் வழிநடத்தல் குழுவின் தமிழ் உறுப்பினர்களிடம் வாக்கெடுப்புநடத்தப்பட்டது. உங்களைத் தவிர ஏனையோர் ஒருமித்த நாடு என்ற சொல்லைப் பயன்படுத்துமாறே வாக்களித்தார்கள். அதனடிப்படையில் ஒருமித்த நாடு என்ற சொல் பயன்படுத்தப்பட்டது, என்றார்.

யாரோ உங்களை குழப்பச் சொல்லி அனுப்பியிருக்கின்றார்கள்என்றுகூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸைப்பார்த்துக்கூறியுள்ளார். இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சரி ஒருநாடு என்று வேண்டுமானால் பயன்படுத்தலாம் என்று கூறியுள்ளார். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், அப்படிப் பயன்படுத்த முடியாது. அவர் ஒருவர் சொல்வதற்காக அப்படி மாற்ற முடியாது என்று சத்தமாகக் கூறியு ள்ளார். ஒரு நாடு அல்லது ஒற்றையாட்சி என்ற அவரது கருத்தை, அறிக்கையின் பின்னிணை ப்பாக வேண்டுமானால் குறித்துக் கொள்ளலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குழப்பங்கள் காரணமாக ஒருமித்த நாடு மற்றும் ஒருநாடு இரண்டினதும் தமிழ் விளக்கங்க ளை ஆராயவேண்டும் என்றும், அரசமைப்பு வரைவு நகலை முழுமையாகப் படித்து முடிக்க நேரம் போதவில்லை என்றும் மகிந்த அணியினர்கூறியுள்ளனர். இதனையடுத்து எதிர்வரும் 25ஆம் திகதி வழிநடத்தல் குழுக் கூட்டத்தை மீண்டும் கூட்டுவது என்றும், நவம்பர் 7ஆம் திகதி அரசியல் நிர்ணயசபையாகக் கூடும் நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. வழிநடத்தல் குழுக் கூட்டத்துக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாகவே வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# கேள்வி அறிவித்தல் - 2019.
# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ் குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையம் என்பவற்றை 2019.01.01 ஆம் திகதி தொடக்கம் 2019.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 01/11/2018 பி.ப 3.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 02/11/2018 பி.ப 2.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 02/11/2018 பி.ப 2.30 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : வலி தென்மேற்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம்

01. கேள்விப்பத்திரங்கள் 03 பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி உட்பட 02 பிரதிகளை "தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 2018.11.02 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
02. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. என்பதுடன் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
04. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படு வதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
05. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச்செய்யப்படும்.
06. கேள்விப்படிவக் கட்டணம், கேள்வித்தொகை, மாத வாடகை என்பவற்றிற்கு 2 % தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT) செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தலுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
08. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
09. ஆனைக்கோட்டைச்சந்தி மாட்டிறைச்சிக்கடை, ஆனைக்கோட்டை சந்தி ஆட்டிறைச்சிக்கடை, ஆனைக்கோட்டை சந்தி கோழி இறைச்சிக்கடை என்பவற்றை குத்தகைக்கு எடுப்பவர்கள் இவற்றினை நடாத்துவதற்குரிய இடத்தினை தாங்களே தெரிவு செய்தல் வேண்டும்.
10. காக்கைதீவு பழைய மீன் சந்தைக்கட்டடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தை நடவடிக்கைகளுக்கு இடையூறு இல்லாத வகையில் கடலுணவுகளை களஞ்சியப்படுத்துவதற்கு மாத்திரமே அக்கட்டிடத்தைப் பயன்படுத்த வேண்டும்.
11. மாதவாடகை யாவும் விலை மதிப்பீட்டு திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
12. சந்தைச் சுற்றாடலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
13. துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்புடன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்புக் கட்டணமாக ரூபா 5.00 இனையும் மோட்டார் சைக்கிள் பாதுகாப்புக்கட்டணமாக ரூபா 10.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்வித கட்டணங்களையும் அறவிடமுடியாது
14. சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 09.11.2018 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
15. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்திலும் உபஅலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
16. கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## 2019 ஆம் ஆண்டுக்கான கேள்வி அட்டவணை

| இல | சந்தைகள்,துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையம், இறைச்சிக் கடைகள் ,கோழி இறைச்சிக்கடைகள் விபரம். | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் N.B.T தவிர. | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம். | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த தொகை N.B.T தவிர. | மாதாந்த வாடகை N.B.T தவிர. |
|---|---|---|---|---|---|
| | மானிப்பாய் பட்டின உப அலுவலகம். | | | | |
| 1 | மானிப்பாய் மீன் சந்தை (புதிய கட்டிடத் தொகுதி) | 1,000.00 | 15,000.00 | 1,191,300.00 | |
| 2 | மானிப்பாய் மரக்கறிச் சந்தை (பழைய மீன் சந்தைக் கட்டிடம் தவிர) | 1,000.00 | 10,000.00 | 546,700.00 | |
| 3 | மானிப்பாய் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக் கடை (புதிய கட்டிடத் தொகுதி) | 1,000.00 | 10,000.00 | 772,750.00 | 600.00 |
| 4 | மானிப்பாய் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (புதிய கட்டிடத் தொகுதி) | 1,000.00 | 5,000.00 | 114,950.00 | 600.00 |
| 5 | மானிப்பாய் பொதுச் சந்தை கோழி இறைச்சிக் கடை (புதிய கட்டிடத் தொகுதி) | 1,000.00 | 10,000.00 | 477,308.50 | 600.00 |
| | மானிப்பாய் கிராம உப அலுவலகம். | | | | |
| 1 | காக்கைதீவுப் பொதுச் சந்தையும் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையமும். | 1,000.00 | 15,000.00 | 1,408,000.00 | |
| 2 | காக்கைதீவுப் பழைய மீன் சந்தைக் கட்டிடம். (கடலுணவுகள் களஞ்சியப்படுத்தவதற்கு மாத்திரம்) | 500.00 | 1,500.00 | 31,350.00 | |
| 3 | நவாலி பிரசாத் சந்தை. | 1,000.00 | 5,000.00 | 193,050.00 | |
| 4 | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை. | 1,000.00 | 5,000.00 | 162,635.00 | 400.00 |
| 5 | நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கடை. | 500.00 | 1,500.00 | 53,625.00 | 300.00 |
| 6 | சாவற்கட்டு சந்தை | 1,000.00 | 5,000.00 | 251,350.00 | |
| 7 | ஆனைக்கோட்டை சந்தி மாட்டிறைச்சிக் கடை. | 1,000.00 | 5,000.00 | 453,200.00 | |
| 8 | ஆனைக்கோட்டை சந்தி ஆட்டிறைச்சிக் கடை. | 500.00 | 1,500.00 | 39,900.00 | |
| 9 | ஆனைக்கோட்டைச் சந்தி கோழி இறைச்சிக் கடை. | 500.00 | 1,500.00 | 62,700.00 | |
| | பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம். | | | | |
| 1 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை | 1,000.00 | 15,000.00 | 1,787,500.00 | |
| 2 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை மாட்டிறைச்சிக் கடை. | 1,000.00 | 5,000.00 | 782,211.10 | 1,500.00 |
| 3 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 479,710.00 | 1,500.00 |
| 4 | பண்டத்தரிப்பு சாந்தைச் சந்தை | 1,000.00 | 5,000.00 | 441,947.00 | |
| | பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம். | | | | |
| 1 | மாகியப்பிட்டி பொதுச் சந்தை | 1,000.00 | 5,000.00 | 236,500.00 | |
| 2 | மாகியப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக் கடை. | 500.00 | 1,500.00 | 100,083.50 | 250.00 |
| 3 | மாகியப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக் கடை. | 1,000.00 | 5,000.00 | 166,210.00 | 250.00 |
| 4 | இளவாலை பொதுச் சந்தை | 1,000.00 | 5,000.00 | 154,011.00 | |
| 5 | இளவாலை பொதுச் சந்தை மாட்டிறைச்சிக்கடை. | 1,000.00 | 5,000.00 | 782,211.10 | |
| 6 | இளவாலை பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை. | 1,000.00 | 5,000.00 | 102,300.00 | |
| 7 | மாதகல் பொதுச் சந்தை | 1,000.00 | 5,000.00 | 247,720.00 | |
| 8 | மாதகல் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக் கடை. | 500.00 | 1,500.00 | 232,211.10 | 250.00 |
| 9 | மாதகல் பொதுச் சந்தை கோழி இறைச்சிக் கடை. | 500.00 | 1,500.00 | 83,061.00 | 250.00 |

அ.ஜெபநேசன். தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய். 2018.10.12.

## கார்...

வவுனியா, ஒக்.12

வவுனியா, மடுக்கந்தையில் நேற்று மாலை நடந்த விபத்தில் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார். முச்சக்கரவண்டியும் மகிழுந்து நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. முச்சக்கர வண்டியில் பயணித்தவர்கள் உயிரிழந்தனர்.

வவுனியா இலங்கை வங்கியில் பணியாற்றும் த.பாஸ்கரன் (வயது-42), முச்சக்கர வண்டிச் சாரதி ராஜகருணா (வயது-55) ஆகியோரே உயிரிழந்துள்ளனர். வங்கிப் பாதுகாவலர் விஜிதரன் (வயது-29) படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பணிநிமித்தம் இருவரும் முச்சக்கரவண்டியை வாடகைக்கு அமர்த்தி மயிலங்குளம் சென்றனர் என்றும் அங்கிருந்து திரும்பும்போது மடுக்கந்தை பொலிஸ் நிலையத்துக்கு அருகே திருகோணமலை நோக்கிப் பயணித்த மகிழுந்துடன் நேருக்கு நேர் மோதி விபத்து நடந்தது என்றும் கூறப்படுகின்றது.

மகிழுந்தைச் செலுத்திய 23 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். அதில் பயணித்த 4 பேர் காயங்களின்றித் தப்பியுள்ளனர்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை வவுனியா மற்றும் மடுக்கந்தப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற-110)

## பயங்கரவாத...

இந்தப் பிரச்சினைக்கான தீர்வு அரசியல் ரீதியாக எடுக்கப்படவேண்டியது. ஆனால் நல்லிணக்கத்தை பேசும் அரசு இவர்களை அரசியல் கைதிகளாக அல்லாமல் குற்றவாளிகளாகவோ சாதாரண சந்தேக நபர்களாகவோ பார்க்கின்றது. இந்த விடயத்தை சட்டமா அதிபர் திணைக்களத்தின் முடிவுகளுக்கு அரசு விடுத்து தனது பொறுப்பை தட்டிக் கழிக்க முடியாது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி புதிதாக ஒரு சட்டத்துக்கான சட்டவரைவை நாடாளுமன்றில் விவாதத்துக்கு வந்துள்ளதை நாம் அவதானிக்கின்றோம். இந்தச் சட்டவரைவு பொலிஸாரிடம் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் குற்றவாளிகளாக முடிவுறுத்துவதற்கான ஏற்பாடுகளைக் கொண்ட பயங்கரவாத தடைச் சட்டத்தின் மோசமான சில அம்சங்களைத் தவிர்த்து வந்தாலும் நீண்ட கால தடுப்பு போன்ற விடயங்களில் பெரிய அளவிலான முன்னேற்றங்கள் இல்லை என்பதே உண்மை. எது எவ்வாறாக இருப்பினும் 'பயங்கரவாதம்' தொடர்பில் புதிதாகச் சட்டங்கள் எவையும் இலங்கைக்கு தேவையில்லை என்பதே எம்து நிலைப்பாடாகும். இந்த நாட்டின் சாதாரண குற்றவியல் சட்டங்களே 'பயங்கரவாத' குற்றங்கள் ஏதேனும் தொடர்பில் கையாளப் போதுமானவை ஆகும். இது ஒருபுறமிருக்க பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு புதிதாக சட்டம் கொண்டுவரப்பட்டாலும் பழைய சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்தும் பழைய சட்டத்தின் கீழே தடுத்து வைக்கப்படுவதோடு வழக்கு விசாரணையும் நடைபெறும், சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய சட்டவரைவு ஏற்பாடு செய்வதானது பெரும் ஏமாற்றத்தை அளிக்கின்றது. தமிழ் அரசியல் கைதிகள் புதிய சட்டம் வந்த பின்னரும் தடுத்து வைக்கப்படவும் அவர்களிடம் பயங்கவாத தடைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை வைத்து அவர்களைக் குற்றவாளிகளாகக் காணவுமே அரசு விரும்புகின்றது. புதிய சட்டத்தின் இவ் நிலைமாறுகால ஏற்பாடுகளைத் தானும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாக எதிர்க்க வேண்டும்.

எனவே தமிழ் சிவில் சமூக அமையம் நிபந்தனையின்றி அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்று அரசைக் கோருகின்றது. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதோடு நாடாளுமன்றம் நிற்க வேண்டும். புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தேவையில்லை என்று வலியுறுத்தி கூறுகின்றோம் - என்றுள்ளது. (5)

**ஆசிரியர் தேவை**

**சித்திரக் கலைக்கு (Art Teacher)**
ஆசிரியர் தேவை.
**இடம் - மானிப்பாய்** (CS/20477) (11)
**076 604 0011, 076 938 8052**

## தேவை

**வலிகாமம் தெற்கு பிரதேசத்துக்குட்பட்ட நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர் (உதவியாளர்) தேவை.**
**(பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)**

**தகைமைகள் : கணக்காளர் (உதவியாளர்)**

- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- ஆங்கிலம் எழுத, பேச தெரிந்திருக்கவேண்டும்.
- முன் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- கணிணி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 21 - 30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை அடையாள அட்டை போட்டோ பிரதி, சான்றிதழ்களின் போட்டோ பிரதி ஆகியவற்றை இணைத்து 25.10.2018 இற்கு முன்னதாக கீழ்க்குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். மின்னஞ்சல் முகவரி : jobdocuments@yahoo.com

## தேவை

**சுன்னாகத்தில் இயங்கும் விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் தேவை.**
**(ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)**

**தகைமைகள் : விற்பனை உதவியாளர்**

- க.பொ.த (சாதாரணம்) கற்றிருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- வயதெல்லை 19 - 45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை, அடையாள அட்டை, போட்டோப்பிரதி ஆகியவற்றை இணைத்து 28.10.2018 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**பிற்குறிப்பு - மாத சம்பளமாக ரூ.25 000 வழங்கப்படும்.**

**விளம்பர இலக்கம் - 1012 C/O உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## வாகன கண்காணிப்பு சாதனம்

உங்கள் வாகனத்தின் நடமாட்டங்களை தொலைபேசி மூலம் அவதானிக்கலாம்.
* Milage report, Over Speed, Trip and parking report உண்டு.
* அரச, தனியார் வாகனங்களிற்கு ஏற்றது.
* Running Chart இனை மிக இலகுவாக Print செய்ய முடியும்.
இன்னும் பல வசதிகள் உண்டு.

**Garudan (Pvt) Ltd - 077 888 7051**

## அன்பொளி கல்வியகம்

எமது கல்வியகத்தில் கல்வி கற்று 2018 தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தியெய்திய மாணவர்களையும் 150 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பரிசளிப்பு விழாவிற்காக எமது அலுவலகத்தில் உடன் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இயக்குநர்**

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி சிவயோகன்

**(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் - சத்திரசிகிச்சைப்பிரிவு - யாழ்.போதனா வைத்தியசாலை)**



சுதுமலை வடக்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிவயோகன் 10.10.2018 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் இராமலிங்கம் சிவயோகனின் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) அன்பு மனைவியும் சசிந்தன் (லண்டன்), சஞ்ஜீவன் (கனடா), சசினி (ஆசிரியர் - யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான பத்மநாதன், கயிலைநாதன், புவனேஸ்வரி மற்றும் குணரட்ணம், ஆறுமுகவடிவேல் (ஜேர்மனி), யோகாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயவதனி (லண்டன்), மணிவண்ணன் (நன்னடத்தை உத்தியோகத்தர் - நீதிநிர்வாகப் பிரிவு, மல்லாகம்), சாளினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் டனோஜினி, டனுஷியா, தருணி, சதுஸன், சேருஜன், தண்யா, அனன்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2018) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"முருகநிழல்"**
**சுதுமலை வடக்கு, மானிப்பாய்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 664 7559**

## தவறிவிட்டது

கோண்டாவில் வடக்கிலிருந்து உரும்பிராய் மூன்று கோவிலடிக்கும் இடையில் **சிவலிங்கம் உதயகுமார்** என்பவருடைய லண்டன் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் 40 000/= பணம் என்பன தவறவிடப்பட்டுள்ளது. பெற்றுத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

**- 0777 265 675, 077 022 1014**

## வீடு வாடகைக்கு உண்டு

171, வன்னியசிங்கம் வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி (வலயக் கல்வி அலுவலகத்திற்கு முன்பாக) A9 வீதியில் இருந்து 125 m உள்ளே 33' X 48' அளவிலான 6 அறைகளும் 2 ஹோல்களும் சமையலறை, சாப்பாட்டறை என்பவற்றுடன் 3 கொமட்டுடன் கூடிய குளியலறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பிற்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**- 077 021 9224**

## SpiritMAX Engineering (Pvt) Ltd

Turning your vision into values

**அனைத்து விதமான கட்டட நிர்மாண வேலைகள் மற்றும் கட்டட ஆலோசனைகள்**
(All Kinds of Civil Engineering Consultancy and Construction Services)




No. 03,2nd Lane,Palaly Road, Jaffna.
Tel : 021 221 4142, 077 3784474, 077 3989791
e.mail : info@spiritmax.lk

## மரண அறிவித்தல்

பிறப்பு 04 07 1958



இறப்பு 09 10 2018

### திருமதி. மல்லிகா லோகேந்திரன்

தும்பளை நெல்லண்டையை பிறப்பிடமாகவும், 50, Peters Lane Dehiwalaவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி மல்லிகா லோகேந்திரன் அவர்கள் 09.10.2018 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் பாலசுப்பிரமணியம், திருமதி சந்தானலக்ஷ்மி பாலசுப்பிரமணியம் தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் மகேசன், சரஸ்வதி மகேசன் ஆகியோரின் மருமகளும், மகேசன் லோகேந்திரனின் அன்பு மனைவியும், ஜெயரூபன் (Civil Engineer, Australia/New Zealand), சோபிகா (UK) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கோபிசங்கர் (Electrical Engineer UK), துவாரகா (Electrical Engineer - Newzeland) ஆகியோரின் அன்பு மாமியாரும், விதுஷா, சிறிஷா ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும், மாணிக்கவாசகர் (Denmark), தேவிகா (teacher St.Joseph's College) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஸ்ரீ செல்வகுமார், கிருஷ்ணவேணி நாகேந்திரன், மகேஸ்வரி, மகேந்திரன், நாகேஸ்வரி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், Dr. சஜானகன், ஷர்மிலோஜனா ஆகியோரின் பெரியம்மாவும், அனயா , அன்ரூ ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் வெள்ளிக்கிழமை (12.10.2018) 50, பீட்டஸ் லேன், தெகிவளையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியை 14-10-2018 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 07:30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.**

**தகவல்**
**கணவர், பிள்ளைகள், குடும்பத்தினர்**

**50, Peters Lane, Dehiwala**
**TP : 0761011756**

## MINI EXCAVATOR CHAIN - 30HP (03TON)
வாகனத்தினை வாடகைக்கு அமர்த்துவதற்கான
## கூறுவிலை கோரல்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

மாநகர சபைக்கு MINI EXCAVATOR CHAIN - 30HP (03TON) வாடகைக்குத் தேவைப்படுகின்றது. இதனை வாடகைக்கு வழங்கக்கூடிய (விநியோகம் செய்யும்) நிறுவனங்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இதற்கான கூறுவிலைப் படிவங்களை அலுவலக நேரத்தில் மாநகரசபையின் கொள்வனவுக் கிளையில் 12.10.2018 முதல் பெற்று இதனைப் பூர்த்தி செய்து கடித உறையினுள் உள்ளடக்கி உறையின் இடது பக்க மேல் மூலையில் "கூறுவிலை" எனக் குறிப்பிட்டு ஆணையாளர் மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 19.10.2018 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பிறவிடயங்கள் :
1. தங்களால் சமர்ப்பிக்கப்படும் கூறுவிலைகள் ஆகக்குறைந்தது 3 மாதங்களுக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
2. ஒரு மணித்தியாலயத்திற்கு சேவைக்கு அமர்த்துவதற்கான வாடகையினைக் குறிப்பிடல் வேண்டும்.
3. தங்களால் சமர்ப்பிக்கப்படும் கூறுவிலைகளை ஏற்றுக்கொள்ளவோ அன்றேல் நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு முழுமையான அதிகாரம் உண்டு.
4. குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் கூறுவிலைகள் எவையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.


## சந்திப்புக்கு....
சிறிசேனவுடன் பேச்சு நடத்திய பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்று. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அரச தலைவருடனான சந்திப்புக்கு. எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் பலமுறை நேற்று முயற்சித்தபோதும் நேரம் ஒதுக்கப்படவில்லை.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று மாலை இடம்பெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் சுமார் ஒன்றரை மணி நேரம் கூட்டம் நடைபெற்றது.
அரசியல் கைதிகளின் உணவு ஒறுப்புப் போராட்டம் தொடர்பிலேயே நீண்ட நேரம் ஆராயப்பட்டுள்ளது. அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்கவேண்டும் என்று வலியுறுத்திய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கைதிகளைச் சென்று சந்திக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.
இதன்போது இரா.சம்பந்தன், அரசியல் கைதிகளைச் சந்திக்கும்போது அவர்களுக்கு உறுதியான பதிலை வழங்க வேண்டும். அரச தலைவர் மைத்திரிபாலவுடன் சந்தித்து அந்த முடிவை அவர்களிடம் சென்று அறிவிக்கலாம் என்று கூறியுள்ளார். அரச தலைவரைச் சந்திப்ப தற்காக இரா.சம்பந்தன் உடனடியாகவே அலைபேசி ஊடாக அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். அரச தலைவர் நிகழ்வில் இருப்பதாகத் தெரிவித்து அவரது செயலரே பதிலளித்துள்ளார். இதனால் சந்திப்புக்கான நேரம் ஒதுக்கப்படவில்லை.
அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கொழும்பு உள்ளிட்ட முக்கிய நகரங்களில் அனைத்து தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் போராட்டம் நடத்துவது தொடர்பில் பேசப்பட்டுள்ளது.
அரச தலைவருடனான சந்திப்பின் பின்னர் இது தொடர்பில் முடிவெடுக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில், கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இன்று மீண்டும் கூடிப் பேசும் என்று தெரியவருகின்றது. (5,105)

## ஆனந்தனுக்கு...
அரசியல் உரையொன்றை மேற்கொள்கின்றார் என்று தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன். அவர் உரையாற்றுவதை தடுக்குமாறு பிரதி சபாநாயகரைக் கேட்டுள்ளார்.
இது சிறப்புரிமையுடன் தொடர்புபட்ட விடயம் எனவும் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.
மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் தன்னை உரையாற்ற அனுமதிக்கவேண்டும் என்று சிவசக்தி ஆனந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த சுமந்திரன், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி உறுப்பினர் உரையாற்றுவதற்கு என்று வழங்கப்பட்ட நேரத்தை வழங்கப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.
இதன் போது குறுக்கிட்ட மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன, சிவசக்தி ஆனந்தனிற்கு ஆதரவாக கருத்து தெரிவித்துள்ளதுடன் தமது அணிக்கு உரையாற்றுவதற்கு வழங்கப்பட்டுள்ள நேரத்தை சிவசக்தி ஆனந்தன் உரையாற்றுவதற்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளார்.
சுமந்திரன் இதற்கும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்துள்ள பிரதிசபாநாயகர் இந்த விவகாரம் குறித்து சபாநாயகருடன் பேசி இறுதி முடிவை யெடுப்பதாக தெரிவித்துள்ளார். (5,31)

## மரண அறிவித்தல்

| அன்னையின் மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 21 |  | 10 |
| 12 | | 10 |
| 1941 | | 2018 |

திருமதி. **தவமணிதேவி சுப்ரமணியம்**

அல்வாய் தெற்கு சுந்தர்வளவை (ஓடை) பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தவமணிதேவி சுப்ரமணியம் அவர்கள் 10.10.2018 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தவனம் சுப்ரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தவனம் கதிராசிபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், தேவமலர் மற்றும் பூமாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவசுப்பிரமணியம், தவமணிதேவி மற்றும் காலஞ்சென்ற இராஜலிங்கம், நடராஜா ஆகியோரின் மைத்துனியும், ஸ்ரீஸ்கந்தராஜா (இங்கிலாந்து), ஸ்ரீமோகன் (கனடா), அனுராதா (இலங்கை), ஸ்ரீ சக்திவேல் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு தாயாரும், ஜெயக்குமாரி, இராஜேஸ்வரி , இராசகுமார், துஸ்யந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், நிலாணி, ஆராதனி, கிரிஷான்ற், நிருசியா, தனுஸ்யா, சுபாங்கி, அஞ்சலி, ரோகித் மற்றும் அபிஷேக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் Jayaratne Funeral Parlour. Borella யில் பார்வைக்காக வெள்ளி, சனி (12-13.10.2018) 10.00 மு.ப - 8.00 பி.ப வரையும் வைக்கப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை (14.10.2018) மு.ப 11.00 - பி.ப 12.30 மணிவரை கிரியைகள் நடைபெற்று, பி.ப 1.00 மணிக்கு பொரளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

தகவல் : குடும்பத்தினர்
59, 3B, Rudra Mawatha,
Colombo-6

தொடர்புகளுக்கு
இராசகுமார் - +94718148413
- செந்தில்ரூபன் - +94716816423

## நிஜம் ஒன்று நிழலாகி வருடங்கள் பதின்மூன்று



செல்வி **தனுஷா மாதவராஜா**

(2ஆம் வருட கலைப்பீட மாணவி -
யாழ்.பல்கலைக்கழகம்,
பழைய மாணவி -
மகளிர் மகா வித்தியாலயம்,
இறம்பைக்குளம், வவுனியா)

| எழுகதிராய் | உதிர்மலராய் |
|---|---|
| 04.08.1984 | 07.10.2005 |

திதி:- சதுர்த்தி

இடியொன்று விழுந்திருந்தால்
தலையைக் கொடுத்திருப்போம்
வெடியொன்று விழுமென்றால்
நெஞ்சை நிமிர்த்தியிருப்போம்
மலையொன்று விழுமென்றால்
எங்கள் மடியைக் கொடுத்திருப்போம்
பெரும் சிகரமெல்லோ சரிந்து
போச்சு என் செய்வோம்!

என்றும் மீளாத்துயருடன்
பெற்றோர், தம்பி
பொ.மாதவராஜா,
அண்ணாவி வளவு,
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜாம்பாள் நாகராஜா (பத்தர்)



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28.04.1924 | 11.10.2018 |

கொழும்பு, கொட்டாஞ்சேனையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், பிறப் பங்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜாம்பாள் நாகராஜா (பத்தர்) நேற்று (11.10.2018) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வையாபுரி காந்திமதி தம்பதிகளின் மூத்தமகளும்காலஞ்சென்றவர்களான சண்முகம் மீனாட்சி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற நாகராசாவின் மனைவியும் காலஞ்சென்ற மகேஸ்வரி, மற்றும் பாலகிருஷ்ணன் (பத்தர்), நடராஜா (பத்தர்), கமலாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மீனாம்பிகை, காலஞ்சென்ற குணசேகரன் மற்றும் லோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ரவிச்சந்திரனின் அன்பு மாமியாரும் ஐஸ்வர்யாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 03.30மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T. ரவிச்சந்திரன்
0773721324

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24 . 04 . 1946 | 25 . 09 . 2017 |



### அமரர் முருகேசு ஜெயரட்ணம்

திதி – சதுர்த்தி

துயரம் விதைத்து தொலைதூரம் சென்றுவிட்டீர்
நாமே இன்று நீர் பயிரிட்ட நினைவுகளை அறுவடை செய்கின்றோம்
வருடங்கள் விரைந்திடும் ஆனால் நீர் எம்முடன் வாழ்ந்த வாழ்வு எம்மை
வாசமாய் சூழ்ந்திடும் காற்றினுள் கரைந்தாலும் எமது கனவிலும்
நினைவிலும் கலந்திடும் காவியம் நீரானீர்
எமது உயிருக்கு உரமிடும் உணர்வென வாழ்ந்திடுவீர்

62/8, பிறவுண் வீதி,
முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

உமது நினைவில்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்

# மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் கட்சிகளிடையே இணக்கப்பாடில்லை

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கட்சிகள் தங்களின் கட்சி நிலைப்பாட்டினை முன்வைக்கின்றனரே தவிர, இதுவரையில் பொதுவான நிலைப்பாட்டுக்கு வரவில்லை. இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கட்சித் தலைவர்களின் சந்திப்பு, தேர்தல்கள் ஆணையகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எல்லை வரம்பு மீளாய்வுக் குழுவின் அறிக்கை அரச தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னரே மாகாண சபைத் தேர்தலை எந்த முறையில் நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு வர முடியும்.

மேலும், எவ்விதமான அழுத்தங்களுமின்றி சுயாதீனமாகவே தேர்தல் ஆணையகம் செயற்படுகின்றது. தேர்தல் திருத்தங்கள் தொடர்பில் அரசு உறுதியான தீர்மானங்களை மேற்கொண்டால் மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டிலேயே நடத்த தயார் என்றார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் அகிலவிராஜ் காரியவசம், மாகாணசபைத் தேர்தல் தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளிவரும். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நிறுவிய குழுவானது இன்னும் இரண்டு மாதங்களுக்குள் தேர்தல் குறித்த அறிவிப்பை தலைமை அமைச்சருக்கு அறிவிக்கும். அதன் பின்னர் ஏனைய நடவடிக்கைகளை எடுக்க முடியும், என்று குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் பங்கேற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லசந்த அலகியவன்ன, எல்லை வரம்பு அறிக்கை மீதான மீளாய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டவுடன் இரண்டு மாதங்களில் மாகாண சபை தேர்தல் இடம்பெறும். அனைத்துக் கட்சிகளும் மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்தவே எதிர்பார்க்கின்றன. தேர்தலை காலம்தாழ்த்துவது அரசின் நோக்கம் அல்ல - என்றார். (5,61)

# புலிகளை ஒழித்தமைக்காக மகிந்தவை மெச்சுகின்றோம்

## சுப்பிரமணியன் சுவாமி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12

தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழித்தமைக்காக இந்தியர்கள், மகிந்த ராஜபக்சவையும் இலங்கை மக்களையும் மெச்சுகின்றனர் என்று பா.ஜ.கவின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தது போன்று இந்தியர்களும் இலங்கையர்களும் உறவினர்கள் என்பது எனது கருத்து. நாங்கள் ஒரு குடும்பமாக வாழப் பழகிக் கொள்ளவேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளை முன்னாள் அரச தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் அழித்தமைக்காக இந்தியர்களாகிய நாங்கள் உங்களை மெச்சுகின்றோம். இதன் மூலம் நீங்கள் இலங்கையை மாத்திரம் பாதுகாக்கவில்லை, இந்தியாவையும் பாதுகாத்துள்ளீர்கள்.

இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை இலங்கை அரசே மேற்கொள்ளவேண்டும். வடகிழக்கில் உள்ள இலங்கையர்கள் முதலில் தங்களை இலங்கையர்களாக கருதவேண்டும். அதன் பின்னரே தமிழர்களாக கருதவேண்டும். சிங்களவர்களும் அவ்வாறே தங்களை கருதவேண்டும்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் அதன் பயனை இழந்துவிட்டது. சிங்கள எதிர்ப்பு, தமிழ்ப் பிரிவினைவாத இயக்கங்கள் தமிழ் நாட்டில் தோல்வியடைந்துவிட்டன பலமிழந்துவிட்டன. மகிந்த ராஜபக்ச இந்தியாவுக்கு அண்மையில் பயணம் மேற்கொண்ட வேளை ஆர்ப்பாட்டங்கள் எதுவும் இடம்பெறாதமை இதற்கு சிறந்த உதாரணம் - என்றார். (5)

### நடைபவனியில்...

யாழ்ப்பாணம், ஒக்.12

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இருந்து அநுராதபுரம் நோக்கி ஆரம்பிக்கப்பட்ட நடைபயணம் நேற்று வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியை அடைந்தது.

கடந்த 9ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்றலில் இருந்து ஆரம்பமான நடைபவனி நேற்றுமுன்தினம் இரவு பணிக்கன்



குளத்தில் நிறைவடைந்திருந்தது. நேற்று பணிக்கன்குளத்தில் இருந்து ஆரம்பமான நடைபவனி நேற்று வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் நிறைவடைந்தது.

நடைபவணி மாங்குளத்தைக் கடந்தபோது, மாங்குளம் மகா வித்தியாலய மாணவர்கள், மாங்குளம் முச்சக்கர வண்டிச் சங்கத்தினர், பொது அமைப்புக்களைச் சேர்ந்தோர் பங்கேற்று வலுச் சேர்த்தனர்.

இன்று நடைபவனி வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் இருந்து அநுராதபுரத்தை நோக்கி ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-8)

### அச்சுவேலியில்...

வீட்டு மதில் ஓரமாக மின்கம்பம் நடுவதற்கு வீதியில் அகழப்பட்டபோதே எலும்பு எச்சம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எலும்பு எச்சங்களுடன் ஆடைகளும் காணப்படுகின்றன.

இது தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். தடயவியல் பொலிஸார் மற்றும் நீதிவான் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டது.

நீதவான் இன்று சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.

எலும்பு எச்சம் தொடர்பில் விசாரணைகளின் பின்னரே உறுதியான தகவல்களை வழங்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-26)

### தலைமை...

இன்று கூடவுள்ளது. நேற்று நடந்த நாடாளுமன்ற அமர்வில் சபாநாயகர் கரு ஜெயசூரிய இதனைத் தெரிவித்தார்.

தலைமை நீதியரசர் பதவிக்குத் தற்போதைய சட்டமா அதிபர் ஜயந்த் ஜயசூரிய மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர் ஈவா வனசுந்தர ஆகியோரின் பெயர்களை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பரிந்துரைத்திருந்தார்.

ஆனால் அரசமைப்புச் சபை செயலிழந்து காணப்பட்டதால் தலைமை நீதியரசரைத் தெரிவுசெய்யும்செயற்பாடுமுடங்கியிருந்தது. 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின்படி ஆணைக்குழுக்கள் போன்ற அரச உயர் பதவிகளுக்கு அரசமைப்புச் சபையின் அங்கீகாரம் அவசியம். 10 பேர் கொண்ட அரசமைப்புச் சபைக்கு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் 7 பேர் நியமிக்கப்பட்டிருந்த போதும், சிவில் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் 3 பேர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. நேற்றே அந்த 3 பேரும் நியமிக்கப்பட்டனர். 10 பேர் கொண்ட அரசமைப்புச் சபை இன்று கூடுகின்றது. இலங்கையின் 46ஆவது தலைமை நீதியரசரை சபை பெயரிடும்.

தற்போது தலைமை நீதியரசராகப் பதவி வகிக்கும் ப்ரியசாத் டெப் இன்று ஓய்வு பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ற)

### 106,000 ரூபா...

6 ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று பொன்னாலைச் சந்தியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் சோதனைக்குட்படுத்தப்பட்டனர். அவர்கள் காரைநகரில் இருந்து வந்தபோதே இடைமறிக்கப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொண்ட சோதனையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரிடம் இருந்து 5 ஆயிரம் ரூபா நோட்டுக்கள் 21, ஒரு ஆயிரம் ரூபா நோட்டு என்பன கைப்பற்றப்பட்டன. அவை போலி நாணயத் தாள்கள்.

அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. அவர்களிடம் பெற்ற தகவலின் அடிப்படையில் நல்லூரில் உள்ள வீடொன்றைப் பொலிஸார் முற்றுகையிட்டனர்.

அந்த வீட்டில் வைத்தே போலி நாணயத் தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன. நாணயத் தாள்கள் அச்சிடப் பயன்படுத்தப்பட்ட பிரிண்ரர், ஸ்கானர், கணினி, வெட்டும் கத்தி என்பன கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நல்லூர் மற்றும் புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் 31 மற்றும் 35 வயதுடையவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்கள் முன்னர் இரு வேறு குற்றங்களுக்காக சிறைக்குச் சென்றவர்கள் என்றும், அங்கு ஏற்பட்ட பழக்கத்தின் அடிப்படையில் பின்னர் இணைந்து போலி நாணயத் தாள்களை அச்சிடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். விசாரணையின் பின்னர் சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-26)

### வீடமைப்பதற்கு...

மக்களுக்கு வீடுகள் வழங்கப்படுமா? வடக்கு கிழக்கு மக்களுக்கு கொடுக்கும் சலுகைகள் அநுராதபுரம் மாவட்ட மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சுவாமிநாதன், எனது அமைச்சுக்கு நிதி ஒதுக்காது என்னால் வீடுகளை கட்டிக்கொடுக்க முடியாது. எனது அமைச்சுக்கு போதியளவு நிதி ஒதுக்கப்பட்டால் என்னால் சகல மக்களுக்கும் வீடுகளை வழங்க முடியும். நான் பாகுபாடு இல்லாது சகல மக்களுக்கும் வீடுகளைக் கட்டிக்கொடுப்பேன். வடக்கு கிழக்கை விடவும் அநுராதபுரம் மாவட்டத்துக்கு அதிக அளவிலான வீடுகளைக் கொடுத்துள்ளோம் - என்றார். (5,31)

### தமிழர்களின்...

விரும்புகின்றோம். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நிர்வாகசேவை தரம் மூன்றுக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் அந்தப் பரீட்சை கைவிடப்பட்ட விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்றுக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த தலைமை அமைச்சர் ரணில், நிர்வாகசேவை தரம் மூன்றுக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் போது வினாத்தாள் ஒன்று பரீட்சைக்கு முன்னர் வெளியாகியுள்ளது. இதனால் பெறுபேறுகள் இல்லாமல் செய்யப்பட்டிருப்பதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கைவிடப்பட்ட பரீட்சை 2018ஆம் ஆண்டுபெப்ரவரி மாதம் மீண்டும் நடத்தப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சைக்கான பெறுபேறுகள் விரைவில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் ரணில் குறிப்பிட்டார். (5,31)

### துமிந்தவுக்கு...

என்று தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு நேற்று உயர் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டது.

அனுர துஷார டி மெல் என்ற பாதுகாப்பு அதிகாரி மட்டும் உயர் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டிய சாதாரண நீதி விசாரணை மேல் நீதிமன்றால் தமக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட 4 பேர் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மேன்முறையீட்டு மனு மூத்த ஜனாதிபதி சட்டத்தரணிகள் மற்றும் பிரதி மன்றாடியார் நாயகம் ஒருவரின் பங்களிப்புடன் 5 மாதங்களாக விசாரணைக்கு உட்டுபடுத்தப்பட்டு வந்தது.

இந்த மனுவை தலைமை நீதியரசர் ப்ரியசாத் டெப் தலைமையிலான 5 நீதியரசர்கள் கொண்ட குழாம் விசாரித்திருந்தது. விசாரணைகளின் பின்னர் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

குற்றம் சுமத்தப்பட்டவர்களில் ஒருவரான அநுர துஷார டி மெல் என்ற பாதுகாப்பு அதிகாரி மட்டும் குற்றமற்றவர் எனத் தீர்மானிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, சுமிந்த ரவி ஜயனாத் மற்றும் சரத் பண்டார ஆகியோர் மீது சுமத்தப்பட்டிருந்த சட்டவிரோதத் துப்பாக்கிப் பயன்பாடு தொடர்பான குற்றச்சாட்டில் இருந்து மாத்திரம் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

குற்றவாளிகளின் மேன்முறையீட்டை உயர் நீதிமன்று நிராகரித்தது. மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உறுதிப்படுத்தியது.

2011 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி முல்லேரியா பிரதேசத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், அப்போதைய அரச தலைவரின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகமுமான பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர உயிரிழந்தார். சம்புவத்தில் காயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.


சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 13 பேரில் 11 ஆவது சந்தேநபரான துமிந்த சில்வா சிகிச்சைக்காகச் சிங்கப்பூர் சென்று நாடு திரும்பிய அன்றைய தினமே கைது செய்யப்பட்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் கொலை வழக்கில் துமிந்த சில்வா உள்பட 5 பேருக்கு 2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்று தூக்குத் தண்டனை விதித்தது. (ற)

### அரசமைப்பு...

எழுப்பியுள்ளார். வழிநடத்தல் குழுவின் கூட்டம் நேற்று இடம்பெற்றது. கூட்டம் ஆரம்பம் முதலே காரசாரமான விவாதத்துடன் இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா எழுப்பிய ஒற்றையாட்சிச் சர்ச்சையை அடிப்படையாக வைத்து மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் தலைவரான தினேஸ் குணவர்த்தன, இந்த விடயத்தை ஆராய்வதற்கு தங்களுக்கு நேரம் தேவை என்று தெரிவித்துள்ளார்.

இதன்போது இரா.சம்பந்தன், புதிய அரசமைப்பு உருவாக்கத்தை இழுத்தடிப்பதா உங்களின் நோக்கம்? அப்படியென்றால் அதனை வெளிப்படையாகவே சொல்லுங்கள் என்று காட்டமாகப்பேசியுள்ளார். அதற்கு தினேஸ் குணவர்த்தன, அப்படி இல்லை என்று சொல்லிச் சமாளித்துள்ளார். (5)




# விரைவில் ஆரம்பிக்கிறது யாழ்ப்பாணம் சுப்பர் லீக்!

## நேற்றுமுன்தினம் வீரர்களின் ஏலம்

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ்ப்பாணம் சுப்பர் லீக் துடுப்பாட்டத் தொடர் அடுத்தவாரம் ஆரம்பமாகின்றது. இந்தத் தொடருக்கான வீரர்களின் ஏலம் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் யாழ்ப் பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர் மணிவண்ணன் தலைமையில் ஏலம் நடைபெற்றது. தெல்லியூர் ரைற்றன்ஸ், அரியாலை வொரியர்ஸ், பண்ணை டில்கோ கிளடியேற்றஸ், ஜப்னா பன்தெர்ஸ், கொக்குவில் ஸ்ரார், நல்லூர் புறோன்கோஸ், வேலணை வேங்கைகள், பருத்தித்துறை சுப்பர் கிங்ஸ் ஆகிய எட்டு அணிகள் இந்தத் தொடரில் கலந்து கொள்கின்றன.

ஏலத்தின்போது பண்ணை டில்கோ கிளாடியேட்டர்ஸ் அணி கௌதமன் என்ற வீரரை 24 ஆயிரத்து 500 ரூபாவுக்கு ஏலத்தில் எடுத்தமை அதிகபட்சமாகும்.

இரண்டாவது அதிகபட்சமபக ஜவ்னா பான்ரெர்ஸ் அணி சாம்பவன் என்ற வீரரை 21 ஆயிரத்து 500 ரூபாவுக்கு ஏலத்தில் எடுத்தது.

மூன்றாவது அதிகபட்சமாக கொக்குவில் ஸ்ரார் அணி எட்வேட் எடின் என்ற வீரரை 20 ஆயிரத்து 500 ரூபாவுக்கு ஏலத்தில் எடுத்தது. வீரர்களிடம் இருந்து மொத்தமாக 151 விண்ணப்பங்கள் கிடைத்தன. அவர்களில் ஒரு அணிக்கு தலா 15 வீரர்கள் வீதம் 120 வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். (ம-23)

தேசிய கபடித் தொடரில்

# பெண்களுக்கான பிரிவில் வடக்குமாகாணம் தோல்வி

யாழ்ப்பாணம், ஒக். 12

பொலனறுவையில் நடைபெறும் தேசியமட்டக் கபடித் தொடரில் வடக்கு மாகாண பெண்கள் அணி தொடரில் இருந்து வெளியேறியது. பொலனறுவை உள்ளக விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து சப்ரகமுவ மாகாண அணி மோதியது. 54:26 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சப்ரகமுவ மாகாண அணி வெற்றிபெற்றது. (ம-23,422)

# பொலிகை பாரதி அரையிறுதியில்!

யாழ்ப்பாணம், ஒக். 12

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 21 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் பொலிகை பாரதி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற கோல் கண்களில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23,422)



# வெற்றிபெற்றது திக்கம் அணி

யாழ்ப்பாணம், ஒக். 12

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி சில்வேஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

2:0 என்ற கோல் கணக்கில் திக்கம் விளையாட்டுக்'கழக அணி வெற்றிபெற்றது. (ம-23,422)



# இறுதிக்குள் ஜெகமீட்பர்

யாழ்ப்பாணம், ஒக். 12

விளைபூமி விளையாட்டுக் கழகம் நடத்தும் நெல்மணிகள் வெற்றிக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

விளைபூமி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது ஜெகமீட்பர் அணி. (ம-23,422)



# செந்தமிழ் வென்றது!

யாழ்ப்பாணம், ஒக். 12

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 21 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி.

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க முடியாத நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# ஆஸி. - பாக். ஆட்டம் சமநிலை



ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி முதலாவது இன்னிங்ஸ்க்காக சகல இலக்குகளையும் இழந்து 482 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஹபீஸ் 126 ஓட்டங்களையும், ஹரீஸ் சொகைல் 110 ஓட்டங்களையும், சபிக் 80 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிடில் 3 இலக்குகளையும், லையன் 2 இலக்குகளையும் அதிகபட்சமாகக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி 202 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாகக் கவாயா 85 ஓட்டங்களையும், பின்ஞ் 62 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஷ் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.பந்துவீச்சில் பிலால் அசிப் 6 இலக்குகளையும், அப்பாஸ் 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி 6 இலக்குகளை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக இமாம் உல் ஹக் 48 ஓட்டங்களையும், அசாட் சபிக் 41 ஓட்டங்களையும், ஹரிஸ் சொகைல் 39 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கோலின்ட் 3 இலக்குகளையும், லையன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி நேற்றுமுன்தினம் நான்காம் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கவாயா 50 ஓட்டங்களுடனும், ஹெட் 34 ஓட்டங்களுடனும் இறுதி நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். அரைச்சதம் கடந்தார் ஹெட். சதம் கடந்தார் கவாயா. 72 ஓட்டங்களுடன் ஹெட் பவிலியன் திரும்பினார். ஹெட் ஆட்டமிழந்த போது ஆஸ்திரேலிய அணி 4 இலக்குகளை இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கவாயா 141 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஸ்ராக், சிடில் அடுத்தடுத்து ஆட்டமிழக்க ஆஸ்திரேலியா தடுமாற்றம் கண்டது. இறுதி பத்துப் பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளைக் கைப்பற்றினால் வெற்றியென்ற நிலை பாகிஸ்தானுக்கு இருந்தது. அணித் தலைவர் பெய்ன் களத்தில் நின்றார். அவருடன் லையனும் சேர்ந்து நிதானிக்க பிறிதொரு இலக்கை இழக்காமல் ஆட்டம் சமநிலையானது.

(ம)





# சேவாக்குடன் பிருத்வியை தற்போது ஒப்பிடவேண்டாம்

## கம்பீர் கருத்துப் பகிர்வு

இந்திய அணியின் முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரும் சிறந்த வீரருமான சேவாக்குடன் பிருத்வி ஷாவை ஒப்பிட வேண்டாம். இந்த ஒப்பிடலுக்காக பிருத்வி இன்னும் அதிகம் பயணிக்க வேண்டியுள்ளது என்று தெரிவித்தார் கம்பீர்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸிலேயே பிருத்வி சதம் கடந்தார். இந்த ஆட்டத்தில் இந்தியா இன்னிங்ஸால் வென்றது. பிருத்வி ஷா ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார். இதையடுத்து பிருத்வியின் ஆட்டம் சேவாக்கின் ஆட்டத்தை ஒத்திருக்கிறது என்று பலரும் விமர்சித்துவரும் நிலையில் அவ்வாறான விமர்சகர்களுக்கு எதிராகக் கடும் கருத்துக்களை முன்வைத்தார் கம்பீர்.

இளம் வீரர் பிருத்வி ஷாவையும், மிகச்சிறந்த வீரரும், தொடக்கஆட்டக்காரருமான வீரேந்திர சேவாக்கையும் ஒப்பிட்டுப் பேசுபவர்கள் பேசுவதற்கு முன் சிந்தித்து பேசுவதும், செயற்படுவதும் அவசியம். உண்மையில், யாரையும், யாருடனும் ஒப்பிட்டுப் பேசக்கூடாது, பார்க்கவும் கூடாது. பிரித்வி ஷா கிரிக்கெட்டில் இப்போது தான் தனது வாழ்க்கையைத் தொடங்கி இருக்கிறார். இன்னும் அவர் நீண்ட காலம் பயணிக்க வேண்டியிருக்கிறது. பிரித்வி ஷாவுக்கென தனித்துவம் இருக்கிறது. சேவாக்குக்கு தனித்துவம் இருக்கிறது. சேவாக் 100 டெஸ்ட் ஆட்டங்களுக்கு மேல் விளையாடிய அனுபவம் மிக்க வீரர். ஆதலால், இந்த ஒப்பீடுகளில் நான் நம்பிக்கை வைப்பதில்லை. எனினும் தேவையற்ற ஒப்பீடுகளுக்குச் சென்று ஜாம்பவான்களை சிறுமைப்படுத்தக்கூடாது" என்று கம்பீர் மேலும் தெரிவித்தார். (ம)

# தெ. ஆபிரிக்கா, சிம்பாப்வே இரண்டாவது ரி20 இன்று

தென்னாபிரிக்கா - சிம்பாப்வே அணிகளுக்கு இடையில்ான ரி20 தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றதால் இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடியில் சிம்பாப்வே களமிறங்குகிறது.

(ம)

# இந்தியா - மே.தீவுகள் 2ஆவது டெஸ்ட் இன்று

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் ஹைதராபாத்தில் இன்று ஆரம்பமாகிறது.

முன்னதாக ராஜ்புட்டில் நடந்து முடிந்த முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் இன்று நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தின் முடிவு என்னவாக இருந்தாலும் இந்திய அணி கிண்ணத்தை இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படாது. அதேபோன்று தரநிலைகளிலும் இந்த ஆட்டம் மாற்றத்தை ஏற்படுத்தாது. (ம)



புலமைப் பரிசில் பரீட்சைத் தோற்றிய மாணவர்களுக்கான சிங்களம், கணினி வகுப்புக்கள் ஆரம்பம். TP:0779672038
✓ உங்களுக்கு விரும்பிய நேரத்தைத் தெரிவு செய்து கற்க முடியும்.
✓ சான்றிதழ்கள் வழங்கப்படும். ☎:021-221-5992
New Sky Computer Training Centre
No.716, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

# வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் இயங்கும் தனியார் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிட்ட வேலைகளுக்கு பணியாளர்கள் தேவை.

- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்
- வரவேற்பாளர்கள்
- பத்திரிகை மடிப்பவர்கள் / விநியோகிப்பாளர்கள்
- இயந்திர இயக்குநர் / உதவியாளர்கள்



ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் பின்வரும் திகதிகளில் உங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம்தரவும்.

யாழ்ப்பாணம் : 15.10.2018 திங்கட்கிழமை
கிளிநொச்சி : 16.10.2018 செவ்வாய்க்கிழமை
நேரம் : 09.30 மணிமுதல் 3.00 மணிவரை

யாழ்ப்பாணம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளிநொச்சி:
கரடிப்போக்குச் சந்தி A9 வீதி, கிளிநொச்சி.

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 400
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2018.10.11
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,125,145/-
வெற்றி இலக்கங்கள் 01 08 70 71 ஆங்கில எழுத்து Q
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1508
சீட்டிழுப்பு திகதி 11.10.2018
வெற்றி இலக்கங்கள் 07 23 29 59 ஆங்கில எழுத்து X
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட் ரூ 35, 927, 992/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அவசர துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 185
சீட்டிழுப்பு திகதி ▶ 11.10.2018 நீலம்
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 12 28 54
விதி எண் 07
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 14, 026, 536/=

ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| குருநாகல் | 9069025 |
| பொலநறுவை | 8795433 |
| பதுளை | 8438320 |
| முல்லைத்தீவு | 1926841 |
| கொழும்பு | 3873830 |

2018.10.13 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

# பட்லரிடம் தலைமையைக் கொடுங்கள்

## வோர்ண் வலியுறுத்தல்

இங்கிலாந்து அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து ரூட்டை நீக்கிவிட்டு பட்லரை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் வோர்ண்.

ரூட் மிகச் சிறந்த வீரர். அவரிடம் தலைமைத்துவம் இருப்பதால் அவர் அதிகம் தடுமாறுகிறார். இதனால் ரூட்டிடம் உள்ள தலைமைப் பொறுப்பை பட்லரிடம் ஒப்படைத்தால் ரூட் சுதந்திரமாக விளையாடுவார் என்று வோர்ண் மேலும் தெரிவித்தார். (ம)



## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்




கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவனாகிய
**யசோதரன் தெய்வறூபினி மன இணையரின்**
**சிரேஷ்ட புதல்வன்**
**செல்வன் யதுர்சன்**
2018 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி
**178 புள்ளிகளைப்** பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவருக்கு முன்பள்ளி கல்வியை வழங்கிய கிளி/ ஆதவன் முன்பள்ளிச் சமுகத்தினருக்கும் மற்றும் அயராது பாடுபட்ட வகுப்பாசிரியர் மற்றும் பாடசாலை சமூகத்தினருக்கும் பொதிகை கல்வி நிலையத்தின் ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளைத் கூறுவதோடு இவர் கல்வியில் மேலும் பல சித்திகளைப் பெற்று சிறப்புடன் வாழ உளமார வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:-
அன்புத் தம்பி – மதுசன், அய்யா, அம்மம்மா, பெரியப்பா குடும்பம், சித்தா குடும்பம், மாமா (ஆஸ்திரேலியா), அப்பப்பா, அப்பம்மா, சின்ன சித்தப்பா குடும்பம் (பிரான்ஸ்), குட்டிச்சித்தப்பா குடும்பம் (பிரான்ஸ்), கனியா அத்தை குடும்பம் (பிரான்ஸ்), வவா அத்தை குடும்பம் (நோர்வே)

(AKN/0011)(11)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 06 | 11 |
| 06 | 10 |
| 1930 | 2018 |

### சோமசுந்தரம் மனோன்மணி

யாழ்ப்பாணம், நல்லூரடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது இரத்தினபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் மனோன்மணி நேற்று (11.10.2018) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் மகேஸ்வரி, காலஞ்சென்ற இந்திராணி மற்றும் சுந்தர்ராஜா, பாக்கியராஜா, மகேந்திரராணி (இரத்தினபுரம்), சிறிஸ்கந்தராஜா (இந்தியா), மகேந்திரராஜா (இந்திரன் - மேனன் ரயர்கடை, வவுனியா), யோகேந்திரராஜா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் இரத்தினசபாபதி, காலஞ்சென்ற முத்துக்குமார் (இரத்தினபுரம் இ.போ.ச.), கமலா தேவி, நிர்மலாதேவி, கிறேஸ், ஞானேஸ்வரி, ராமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பற்குணராஜா, கமலாதேவி ஆகியோரின், அன்புச் சகோதரியும் சக்திராஜான், வசந்தராஜாயன், மாலினி, றோகா, காலஞ்சென்ற ராஜாபாலன் மற்றும் குகதாசன், இந்திரகுமார், இந்திராகாந்தி, கண்ணன், சுஜி, றஜீபன், ஞாமினி, வக்சலகுமாரி, கௌசலாகுமாரி, காலஞ்சென்ற அம்பிகை, செல்வன் மற்றும் திசோகுமார், கிசோக்குமார், றெபேக்கா, றோகினி, யாழினி, விஜின்தன், மேனன், அரவிந்தன், அபிராமி, அகழியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2018) வெள்ளிக் கிழமை இரத்தினபுரம் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் பொது மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

கருத்தரங்குகள்
P.G.D.E
தெரிவுப்பரீட்சைக்கு
சனி - 10.00 - 3.00 மணி
இலஞ்ச புலனாய்வு உத்தியோகத்தர்
27 ஆம் திகதி பரீட்சை நடைபெறவுள்ளது.
சனி, ஞாயிறு 10.00 - 3.00 மணிவரை
NSB வங்கி
ஞாயிறு 10.00 மணி
ஆசிரியர் தெரிவு
ஞாயிறு 10.00 மணி
சுங்கப்பரிசோதகர்
ஞாயிறு 12.30 மணி
தொடர்புகளுக்கு : 076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

அமெரிக்க லொத்தர் இலவச விசா
உடனடியாகப் பதிவு செய்யுங்கள்
அமெரிக்க இலவச விசா வாய்ப்பு பெற விரையுங்கள் - இந்த வருடமே இறுதி வருடம்
0768226243
V2 TRAVELS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 |
| திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | யாழ்ப்பாணம் 0768226241 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

வாகனம் விற்பனைக்கு
நல்ல பாவனையில் உள்ள Nissan Sunny கார் மற்றும் Hero Stream (49CC) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. 0768531257

விற்பனைக்கு
லேடன் LK டிப்பர் (3 கியூப்) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 077 844 8775

வேலையாள்கள் தேவை
யாழ்.நகரில் இயங்கிவரும் அரிசி ஆலைக்கு இரவு நேர வேலைக்கு ஆண் வேலையாள்கள் தேவை. இரவு உணவு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
சம்பளம் - 1500/-
077 822 8753 (CS/20475)(11)

தேவை
யாழ்.நகரில் இயங்கிவரும் ஆர்.வி.ஜி மெடிக்கலுக்கு சிறுவர்களுக்கான ஆடைகள், அழகு சாதனப் பொருள்கள், பலசரக்குப் பொருள் விற்பனையில் அனுபவமுள்ள A/L or O/L சித்தியடைந்த 25 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி -
ஆர்.வி.ஜி.மருந்தகம்
504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (CS/20479)(11)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.